# சுஜாதா

மாத இதழ்

சிநேகிதன்



பிப்ரவரி - 95

ரூ.5/-



## பாலகுமாரன்

# 1

அது அமர்ந்திருக்கும் விதமே ஆச்சர்யத்தையும், ஆனந்தத்தையும் ஏற்படுத்தியது. இடது முழங்கால் மீது வலது முழங்கால் வைத்து, பாதங்கள் இடதும், வலதும் பார்த்திருக்க முழங்காலுக்கு இடையேயுள்ள இடத்தில் இரண்டு கைகளையும் சாமந்தி சரம் போல் தொங்க விட்டு, முகத்தில் நிரந்தரமாய் ஒரு புன்சிரிப்போடு அமர்ந்திருந்தது. சிவனடியார் என்று அதனைச் சொன்னார்கள். இடை விடாது சிவன் சிந்தனையே உடையவர் என்று சொன்னார்கள். திருநீரை அது குழப்பி இட்டுக் கொள்ளவில்லை. துகளினால் பட்டை போட்டுக் கொள்ளவில்லை. தொப்புளுக்கு மேல் உடம்பெல்லாம் முகமெல்லாம் பூசிக்கொண்டிருந்தது. நீண்ட சடையும், வெள்ளை வெளேரென்ற தாடியும், உடம்பு முழுவதும் விபூதிப் பூச்சும் புதிதாய்ப் பார்ப்பவர்களுக்குப் பயத்தைக் கொடுத்தன. பார்த்துப் பழகியவர்களுக்குப் பரவசத்தைக் கொடுத்தன. அவருக்கு கலிக்காமர் என்பது பெயர்.

ஏயர்கோன் கலிக்காமர் என்று ஊர் மக்கள் மரியாதையாக அவரை அழைப்பார்கள். உயிர் காக்கும் உழவுத் தொழில்தான் அவர் தொழில். வேளாளர் மரபு. வெறும் வேளாண்மை மட்டும் செய்வதில்லை. வீடும், நாடும் காக்க போர்த்தொழிலும் செய்வதுண்டு. சேனைத் தலைவர். அதனால்தான் ஏயர்கோன் என்ற சிறப்புப் பெயர்.

எடுத்த கடமைகளைச் செவ்வனே முடித்து, மனதை சிவன்பால் திருப்பி ஒழுக்கமான வாழ்க்கையும், சிவத்தொண்டுமே இனி செயல்களாயிற்று. அடுத்த தலைமுறைக்கு அருள் நிரம்பிய வாழ்க்கையின் சந்தோஷம் பற்றிச் சொல்வதே கடமையாயிற்று. பயிர்த் தொழிலும், உணவுப் பழக்கமும், பரம்பரை பரம்பரையாக சொல்லப்பட்டவை. உடை விஷயமும், உறவுகள் விதமும் தலைமுறை தலைமுறையாகக் கற்றுக் கொண்டவை. பேச்சும், எழுத்தும், கவித்திறனும் அப்பன் பிள்ளையை உற்சாகப்படுத்தி வந்தவை. அதே விதமாய் இறையருள் பற்றிய தவிப்பும், தேடலுக்கான வித்தும் ஒரு தலைமுறையிலிருந்து மறு தலைமுறைக்கு ஊன்றப்பட வேண்டும். இறை நம்பிக்கை ஊன்றாது போனால், ஒழுக்கம் குறையும், ஒழுக்கம் குறைந்தால் உழைப்பு தளரும். உழைப்பு தளர்ந்தால் உயர்வு குலையும். சரிந்த உயர்வை மீண்டும் நிலைநிறுத்த மூன்று தலைமுறை காலமாகும். இடையேயுள்ள தலைமுறை ஏகப்பட்ட வேதனைகளைச் சந்திக்க வேண்டியது வரும்.

இறைவழிபாடு என்பது பூஜை விதிகளின் தொகுப்பு அல்ல. பூஜையின் ஒரு ஆரம்பம். ஒரு வெளி வேஷம். இந்த வெளி வேஷத்தால் மனது மெல்ல உள் திரும்பும்.



இடுப்பில் மரக்கத்தியும் தலையில் ஓலைக் கிரீடமும், முகத்தில் கரி மீசையும் பூண்டு அரசனாக நடித்த சிறுவன், நடிப்பின் நடுக்கத்தில் தான் உண்மையான அரசன் என்று சில சமயம் நினைத்துக் கொள்வது போல, ஏதோ ஒரு நேரத்தில் அப்படித் தோன்றி விடுவது போல வெளியே செய்யும் பூஜைகளால் மனது உள்முகப்பட்டு விடும். ஒரு முறை அந்த உள்முகப்பட்ட ருசி தெரிந்து விட்டால் மனம் அதை நிரந்தரமாக்க ஏங்கும். இறை நினைப்பு அதிகமாகும்.

அப்போது பூஜைகள் உதிர்ந்து, பிறரை பூஜைகள் செய்யத் தூண்டி விட்டு தனித்துப் போகத் துவங்கி விடும். இரவும், பகலுமாய் நாட்கணக்கில் மாதக் கணக்கில், வருடக் கணக்கில் தன்னை உணர்ந்து உணர்ந்து தடேரென்ற ஒரு வீச்சில் இறையருள் உள் பாய்ந்து பொங்கிப் பூரிக்க வைக்கும். அது மரணம் போலும் ஒரு நிம்மதி. சந்தோஷமான சாவு. பயமற்ற இறப்பு. அதற்குப் பிறகு முக்கியமானதாக ஏதுமில்லை. தன்னைப் பொருத்தவரையில் எல்லாம் முடிவடைந்து போய் விட்டது. விதித்தவரை இருந்து விட வேண்டியதுதான். இருக்கின்ற நேரத்தில் அடுத்த தலைமுறைக்கு மெல்ல மெல்ல இறையருள் பற்றிச் சொல்லித்தர வேண்டும். அடுத்த தலைமுறை அதிகம் அலையாது. தேவையற்ற வேதனைகள் படாது. திசை மாறி மாறி உழலாது. ஒரு அருள் வாழ்க்கையை எளிதாகப் பெற வேண்டும்.

கலிக்காமரைச் சுற்றி எப்பொழுதும் இளைஞர் கூட்டம்தான். அந்த இளைஞர் கூட்டம் பார்க்கும் போது கலிக்காமருக்கு இறைவன் மீது நன்றி பொங்கும்.

இந்த தமிழ்ச் சாணியின் மீது இத்தனை கருணையா சிவனே என்று மனம் கைகூப்பித் தொழும். நூற்றுக்கணக்கான இளைஞர்கள் திருநீறு பூசி, சீராய் உடுத்தி நமச்சிவாயம் என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை அவரிடம் கற்று, அவர் எதிரே அமர்ந்து ஆடாது, அசையாது ஒரு நாழிகை அமர்ந்து சொல்லுகிற பாங்கு பார்த்து மனம் குதூகலிக்கும்.

"கலிக்காமரே இந்த திருப்புன்கூர் சிறார்கள் மட்டுமல்ல கலிக்காமரே, தமிழ் தேசத்திலுள்ள பல இளைஞர்களுக்கு சிவபக்தியும், ஒழுக்க நெறியும் படிந்து விட்டன. வேளாளர் மரபினர் மட்டுமல்ல, எல்லா வகையினரும் இறை வழிபாட்டில் ஆர்வமுள்ளவராய் இருக்கிறார்கள். நாடு அமைதியாக இருக்கிறது. உங்களைப் போன்ற பெரியவர்களால் எங்கும் அருட்சக்தி பரவி நிற்கிறது. நீங்கள் அரும்பாடு பட்டு அடைந்த இறைச் செல்வத்தை இளைஞர்களுக்கு வாரி வாரி வழங்கி எளிதாய்க் கிடைக்கச் செய்கிறீர்கள். அவர்கள் இதைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமே என்ற கவலைதான் வருகிறது."

"இறை விருப்பம் எதுவோ அது நடக்கும்" கலிகாமர் நிதானமாய்ச் சொன்னார்.

அவர் எதிரே கண்மூடி நமச்சிவாய மந்திரம் சொல்லிக் கண்மூடிய இளைஞர்கள் கண் விழித்து அவரைச் சுற்றிக் கொண்டார்கள். கை கூப்பினார்கள். கலிகாமரும் கைகூப்பினார்.

"நீங்கள் பாடுபட்டு பெற்ற இறையருளை வாரி வாரி எளிதாய் இந்த இளை ஞர்களுக்கு வழங்குகிறீர்கள். இந்த இளைஞர்கள் இதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்."

யாரோ சொன்னது மறுபடியும் மனசுள் உரக்கக் கேட்டது.

கலிகாமர் உள்ளத்தில் கவலை தோன்றியது. அவருள் தோன்றிய கவலை கண்டு இறைவன் சிரித்தான்.

கடவுள் நிலை கற்றுக் கொடுத்து வருவதில்லை என்று கலிகாமருக்கு உணர்த்த விரும்பினான். கற்க வந்த மாணவர்கள் மனதில் இறைவன் கேள்விகளானான்.

ஆசையின் விளைவே எண்ணம். எண்ணத்தின் விளைவே செயல். செயலின் விளைவே அனுபவம். அனுபவத்தின் விளைவே ஆசை. ஆசையின் விளைவே எண்ணம். மெல்லிய சருகுகளாய் ஒன்றன் மீது ஒன்று படர்ந்த எண்ணக் குவியலே வாழ்க்கை.

எண்ணத்தை நிறுத்த ஆசையை அகற்ற வேண்டும். ஆசையை அகற்ற யார் சொல்லித் தர முடியும். அப்படிச் சொல்லித் தர முன் வந்தாலே அது ஆசையாகி விடும். ஆசையை அகற்றும் ஆசை என்று அவஸ்தையாகி விடும். ஆசை அகற்றப் படப்படும் விஷயமல்ல. அது பட்டுப் போக வேண்டிய தாவரம். புலன்களின் கிளர்ச்சி சிறிது இருந்தாலும் கூட ஆசை துளிர்த்துவிடும். ஆசை பட்டுப் போக பல வருடங்களாகும். சிலருக்குப் பல ஜென்மங்களாகும்.

இதை உணர்த்த சிவன் கேள்விகளானான். இளைஞர்கள் கலிகாமரை ஆர்வத் துடன் பார்த்தார்கள்.

"ஐயா, முன்னிலும் மனம் இப்போது அமைதியாக இருக்கிறது. ஆனாலும், சந்தேகங்கள் சில இருக்கின்றன. உங்களிடம் கேள்விகள் கேட்டு, உங்கள் பதில் மூலம் சந்தேகம் தெளிவுறலாம் என்று நினைக்கிறோம். அனுமதி தரவேண்டும்."

மாணவர்கள் கை கூப்பினார்கள். கலிகாமர் ஒட்டாது 'சரி' என்று சொன்னார்.

"ஐயா, நீங்கள் எங்கள் குருவா?"

"இல்லை. இறைவன்தான் உங்கள் குரு."

"குருவைத்தானே இறைவன் என்று கீதை சொல்கிறது."

"எல்லா இடத்திலும், காற்று இருக்கிறது. கருமான் உபயோகிக்கும் தோற்பை துருத்தியிலும் காற்று இருக்கிறது. தோற் பையில் தேக்கியிருக்கும் காற்றைப் பீய்ச்சி யடிப்பதால் நெருப்பு கனன்று எரிகிறது. இறைவன் எங்குமிருக்கிறான். காற்றைப் போல. துருத்தியில் கொஞ்சம் அழுத்தமாக இருக்கிறான். வேகமாக வெளிப்படுகி றான். குரு துருத்தி. தோற்பை துருத்தி. அங்கிருந்து இறை சக்தி உங்கள் மீது முழு வேகத்துடன் பாய்கிறது. உங்களிடம் சிறு பொறியிருந்தாலும் ஊதிப் பெரிதாக்குகி றது. அவரவர் மனோ நிலைக்கேற்ப நீங்கள் தழலாகிறீர்கள். தகதகத்து எரிகிறீர்கள். பெரும் தூசாய் இருப்பவர்கள் அந்த துருத்திக்கு அருகே வராமல் பறந்து விடுகிறார்



கள். குருவில் இறைவன் குடிகொண்டிருக்கிறான் என்பதே சரியானது."

"ஐயா, சோதிக்கக் கேட்கவில்லை. தெரிந்து கொள்ள கேட்கிறேன். குருவின் லட்சணமென்ன..?"

கலிகாமர் சிரித்தார்.

"தன்னுள் ஒருவன் நிலைக்காதவரை பிறருக்குப் போதிக்க அதிகாரமில்லை."

"தன்னுள் நிலைத்தலுக்கும், துறவுக்கும் சம்பந்தமுண்டோ?"

"அகந்தையைத் துறப்பதே துறவு. வெறும் உடையலங்காரங்களால் லாப மில்லை."

"ஐயா, கேள்வியை நேரடியாகக் கேட்க விரும்புகின்றேன்."

வேறொருவன் பேசினான்.

"நீங்கள் துறவியா?"

கலிகாமர் வாய்விட்டுச் சிரித்தார். மாணவர்கள் பயந்தார்கள்.

கலிகாமருக்கு மனைவி உண்டு. அவள் மீது கலிகாமருக்குப் பிரியம் உண்டு. இல்லையென்று பதில் சொன்னால் அகந்தையைத் துறக்கவில்லையா என்று பதில் வரும். ஆம் என்று சொன்னால் துறவிக்கு மனைவி உண்டா என்ற வினா எழும்.

கலிகாமர் நிதானமாய் பதில் சொன்னார்.

"நான் அகந்தை என்ற பேயைத் துரத்தியவன். அமைதி என்ற பெண்ணை மணந்தவன். நான் இல்லறத் துறவி. உறவா துறவா என்பதல்ல முக்கியம். இறைவ னோடு தொடர்பு உண்டா இல்லையா என்பதே லட்சியம். இந்த இறைத் தொடர்பும், இறையருளாலே ஏற்படுகிறது. அவனை வணங்கவும், அவன் அருள் வேண்டியி ருக்கிறது. அறிவோ, வயதோ, குலமோ, தொழிலோ, கல்வி கேள்வியோ முக்கிய மல்ல. இவை இருந்தும் இல்லாதார் உண்டு. இவை இல்லாதாரிடம் இறைவன் இருந்ததும் உண்டு. ஏதோ ஒரு பொறி ஏதோ ஒரு நேரத்தில் உள்ளே விழுந்து பெரிதாகி, இனி எடுக்க வேண்டிய பிறவிகளை சுட்டெரித்து. இதுவே இறுதிப் பிறப்பு என்று எடுத்துரைத்து, இருக்கும் வரை பிறப்பறுக்கும் விதத்தை எளிமை யாய் பிறருக்குச் சொல்ல கட்டளை வந்து விடுகிறது."

"ஐயா, இதன் தொடர்பாய் இன்னொரு கேள்வி. கல்வி, கேள்வி, குடிபிறப்பு, செல்வம், அறிவு எதனாலும் இறையை அடைய முடியாது என்று சொன்னீர்கள். மேற்சொன்ன அனைத்து விஷயங்களும் வலியுறுத்துகின்ற ஒழுக்கமும் முக்கிய மில்லை தானா..."

கலிகாமர் கேட்ட இளைஞனை நோக்கி பளிச்சென்று திரும்பினார்.

"ஒழுக்கம் உயிரினும் மேலான விஷயம்."

"ஐயா எது ஒழுக்கம்?"

வேறொரு திசையிலிருந்து கேள்வி வந்தது.

"மறைகளில் சொல்லப்பட்டவைகளே ஒழுக்கம்."

"ஐயா, இறைவனிடம் இது கொடு என்று கேட்டல் நல்லொழுக்கத்தில் அடங்குமா?"

"கேட்கத் தகாதன கேட்பாயா..."

"கேட்க மாட்டேன் ஐயா. எனக்குத் திருமணம் செய்து வை என்று கேட்கலாமா? அல்லது துறவு நிலை கொடு என்று கேட்க வேண்டுமா? திருமணம் செய்து சில நாட்களுக்குப் பிறகு துறவு கேட்பதா? இல்லை உங்களைப் போல் இறுதி வரை இல்லறத் துறவியாக இருந்து விடவா? இது கேட்டுப் பெற வேண்டிய விஷயமா? அல்லது இது குறித்து எவரிடமும் கேட்கவே வேண்டாமா? ஐயா, கேள்வியில் தவறென்றால், மன்னிக்கவும். உங்களைச் சுற்றி நடப்பவற்றை உற்றுப் பாருங்களென்று ஒரு முறை சொன்னீர்கள். ஆலாலசுந்தரர் என்பவர் திருவெண்ணைநல்லூரில் இருக்கிறாராம். மிகச் சிறந்த சிவனடியாராம். அழகராம். தலையில் பொன் கிரீடம் அணிந்தும், இடுப்பில் பட்டாடை புனைந்தும், தோள்களில் எந்நேரமும் மாலைகள் சுமந்தும், வாசனைத் திரவியங்கள் பூசி நல்ல, உணவும், வாய் நிறைய தாம்பூலமும், சிரிப்பும், சந்தோஷமுமாக இருக்கிறாராம். அவரைச் சுற்றி எப்போதும் குதூகலம் பரவியிருக்கிறதாம். இத்தனை சிங்காரங்கள் செய்து கொண்டிருப்பவர் இறைவனைப் பற்றிப் பேச்செடுத்தால் அல்லது கோவிலுக்குள் நுழைந்தால் உணர்ச்சிமயமாகி விடுகிறாராம். ஐயா, ஒரு ஆடை மட்டும் பூண்டு, உடம்பெல்லாம் நீறுபூசி, வெண்தாடியும், நீண்ட கேசமுமாய் வேறு இடம் பெயராது ஒரு இடத்திலேயே இருக்கின்ற நீங்கள் உயர்வா? அல்லது வாசனைத் திரவியங்களும், சிங்காரமான உறுப்புகளும், ஆடை ஆபரணங்களும், அட்டகாச சிரிப்பும், கொண்ட சுந்தரர் பெரியவரா? எவ்வழி நல்வழி. எங்களுக்குள் பேசிப் பேசி தீர்க்க முடியாததை உங்கள் முன் கொண்டு வந்தோம். இது பிழையாயின் மன்றாடிக் கேட்கிறோம். மன்னித்து விடுங்கள்."

அந்த இளைஞர்கள் கண்ணில் பயமிருந்தது.

கலிகாமர் அவர்களை கருணையுடன் நோக்கினார்.

"என்னைக் குருவாகக் கொண்டால் என் வழியும், வேறு எவரையேனும் குருவாகக் கொண்டால் அவர் வழியையும் பின்பற்றுங்கள்."

"ஐயா..."

"என்ன..?"

"நாங்கள் சுந்தரரைப் போய்ப் பார்த்து வரலாமா?"

"தாராளமாய்ப் போய்ப் பார்த்து வரலாம். சிவனடியார்களைத் தேடிப் போய்ப் பார்த்து வருவதே நல்லது. வரும் போது அவர் பாடல்கள் சிலவற்றைப் பிரதியெடுத்து வாருங்கள்."

கலிகாமர் கைகூப்பினார். இளைஞர்கள் விழுந்து வணங்கி விடை பெற்றார்



கள்.

திருவெண்ணை நல்லூருக்குப் பயணப்படும் முன் மறுபடியும் வந்து நமஸ்கரித்து விட்டுப் போனார்கள். அவர்கள் எல்லோர் முகத்திலும் சுந்தரரைப் பார்க்கும் ஆவல் சுடர்விட்டது.

சிங்காரமாய் இருப்பவர்களைப் பார்க்க உலகத்தோருக்கு விருப்பம் அதிகம் இருக்கிறது. திரும்பி வரும் போது அந்த இளைஞர்களில் பல பேர் சுந்தரரைப் போலவே உடுத்திக் கொண்டும், சிரித்துக் கொண்டும் வரலாம். இவர்கள் உடுப்பதும், சிரிப்பதும் பார்த்துவிட்டு இன்னும் பலபேர் சுந்தரரைப் பார்க்கப் போகலாம்.

கலிகாமருக்கு லேசாய் கவலை வந்தது

இறைவன் அவர்களைப் பார்த்து சிரித்தான்.

## 2

"உங்களுக்கு திருப்பூன்கூரா, எங்கள் நம்பி ஆரூரனைத் தேடி திருவெண்ணை நல்லூர் வந்தீர்களா. உடுப்பும், வனப்பும் கேள்விப்பட்டு வந்தீர்களா? அவரின் உன்னதமான பாடல்கள் கேட்டு வந்தீர்களா? இப்போது ஆலால சுந்தரர் என்று அழைக்கப்படும் நம்பி ஆரூரர் அகத்தில் இல்லை. திருவெண்ணை நல்லூரிலேயே இல்லை. பல்வேறு சிவத்தலங்களுக்கு தரிசனம் செய்யப் புறப்பட்டுப் போய் பல நாட்களாயிற்று. படித்த இளைஞர்கள் கேட்டால் பிரதியெடுத்துக் கொள்ளச் சொல்லி சில பதிகங்களை சுந்தரர் இங்கே அனுப்பியிருக்கிறார். இருந்து தங்கி பிரதியெடுத்துக் கொள்ளுங்கள்."

இறைவன் சிவபெருமான் அந்தணக் கிழவராக வந்து நம்பி ஆரூரன் என்கிற சுந்தரரை தடுத்தாட் கொண்ட விஷயத்தை இன்றிரவு விவரமாக உங்களுக்குச் சொல்கிறோம். இறைவனை சிநேகிதனாகக் கொண்டவர் எங்கள் சுந்தரர். எந்தக் கவிஞனாவது இறைவனைத் தன் முதல் பாட்டில், முதல் வரியில் பைத்தியக்காரன் என்று அழைத்ததுண்டா. எம் சுந்தரர் அழைத்தார். பித்தா என்பதுதான் அவர் முதல் பாடலின் முதல் வார்த்தை. "பித்தா பிறைசூடி பெருமானே அருளாளாய்..." அவர்கள் சுந்தரரின் பதிகங்களைப் பாடிக் காண்பித்தனர். இரவு தடுத்தாட் கொண்ட கதை சொல்லப்பட்டது.

"எங்கள் நம்பி ஆரூரனை குழந்தைப் பிராயத்தில் பார்க்க வேண்டும். அழகு அழகு கொள்ளை அழகு. ஐம்படைத்தாலியும், அஞ்சனம் தீட்டிய விழிகளும், திருநீறணிந்த நெற்றியும், உச்சியில் கொண்டை முடிந்த சிகையும், கை வளையல்களும், சுழலும் எவரைக் கண்டாலும் நமச்சிவாயமென்று கைகூப்புவதும் கிறங்க

டித்து விடும் போங்களேன்.

"நரசிங்கமுனையர் என்று ஒரு குறுநில மன்னர். மன்னர் என்ன மன்னர்? அவரும் ஒரு சிவனருட் செல்வர் என்று வைத்துக் கொள்ளுங்கள். நம்பி ஆரூரானை வீதியிலேயே பார்த்து அப்படியே வாரி வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய் விட்டார். நம்பியைப் பெற்ற சடையனார் என்ற வேதியர் நரசிங்க முனையர் வீட்டுக்கு ஓடினார்.

"சடையனாரே, உமது வீட்டை விட என் வீடு வசதியல்லவா? உமக்கிருக்கும் செல்வத்தை விட எனக்குச் செல்வம் அதிகமல்லவா. எனவே உமது பிள்ளை நம்பி ஆரூரன் நம்மிடத்திலே வளரட்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். உமது வீட்டில் நம்பி எப்படி வளருவானோ... அதே விதமான அந்தண சூழ்நிலையில் சகல சௌகர்யங்களோடும் நம்பி இங்கே வளரட்டும். இவன் வெறும் அழகான பிள்ளையில்லை சடையனாரே, அருள் நிறைந்த பிள்ளை. அருள் நிறைந்த அழகு நம்பியினுடையது. அதைப் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. தயவு செய்து மறுக்காமல் சரி சொல்ல வேண்டும். குறுநில மன்னர் கும்பிட்டுக் கேட்க, சடையனாரும் சரியென்று வந்தார்.

"பிறகென்ன? மெல்லிய ஐம்படைத்தாலியிருந்த மார்பில் ரத்தினாபரணங்களும், முத்து மாலைகளும் பவளிக்கன்னிகையும் அலங்கரித்தன. வேதியர் முறைப்படி அறுசுவை உணவு எது கை நீட்டிக் கேட்டாலும், கிடைக்கும் சொகுசு. சுருங்கச் சொன்னால் அரசரிடம் வளர்ந்த அந்தணப் பிள்ளை. புலமை ஊட்டிடப் பல அறிஞர்கள். தந்தையான சடையனாரும், தாய் இசைஞானியாரும் உற்றுக் கவனித்து வர, நரசிங்க முனையர் செல்வத்தை அனுபவித்துக் கொண்டு மிகத்திடமாக வளர்ந்தார்."

"குறிப்பிட்ட வயது வந்ததும் நம்பி அரூரனுக்குத் திருமணம் பேச அவசரப் பட்டார்கள். தடங்கலி சிவாச்சர்யார் என்பவர் மகளை நிச்சயித்தார்கள். புத்தூரிலுள்ள அவர்களது இல்லத்திற்குப் போய் சுந்தரருக்காக பல பெரியவர்கள் மணம் பேசி முடித்து வந்தார்கள். மணநாளும் குறித்து வந்தார்கள். வேதியருக்கு உண்டான முறைப்படி திருமணம் துவங்கிற்று. அக்னியை வளர்த்து, அதை வாழ்த்தி நமஸ்கரித்துக் கொண்டிருக்கும் பொழுது, ஒரு வயதான வேதியர் திருமண மண்டபத்திற்குள் நுழைந்தார். எல்லோரும் திருமணத்தில் மூழ்கி அவர் மீது அதிகம் கவனம் செலுத்தாத போது அவர் கைகளை உரக்கத் தட்டி எல்லார் கவனத்தையும் திருப்பினார். சபையோர்கள் திடுக்கிட்டுத் திரும்பினார்கள். கிழவரை நோக்கிக் கை கூப்பி வருக என்று முகமன் சொன்னார்கள். கிழவன் சபையைக் கவனிக்கவில்லை.

"அடேய் நம்பி, உனக்கும் எனக்கும் ஒரு வழக்குண்டு. எழுந்திரு..." கிழவர் கூவல் சபையைப் பிளந்தது.

"வழக்கா? உமக்கும் எனக்குமா? என்ன வழக்கு?"

நம்பி ஆரூரர் முகம் சிவந்தது. சுருங்கிற்று. உடனே கிழவர் சபையைப்



பார்த்தார்.

"சபையோரே கேளுங்கள். இந்த நம்பி ஆரூரன் எனக்குப் பரம்பரை அடிமை. மறுபடி சொல்கிறேன். இந்த நம்பி ஆரூரன் எனக்குப் பரம்பரை அடிமை."

அந்தத் தொண்டு கிழம் உரக்கக் கத்தியது. சபை கேட்டால் நம்பியிடம் பேசுவதும், நம்பி கேட்டால் சபையிடம் பேசுவதுமாய் மூர்க்கத்தனம் செய்தது. சபை மிரள, சுந்தரர் வெகுண்டார்.

"அடிமையா, உனக்கா? நானா? நன்றாய் இருக்கிறதய்யா உம் பேச்சு..."

நம்பி ஆரூரர் கை கொட்டிச் சிரித்தார்.

"அடேய் நம்பி! நான் வெறுமனே பேசவில்லை. உன் பாட்டன் எனக்கு எழுதிக் கொடுத்த ஓலையிருக்கிறது. சந்திர சூரியர் உள்ளளவும் அவன் பரம்பரை எனக்கு அடிமை என்று அவன் தெளிவாய் எழுதிக் கொடுத்திருக்கிறான். என் எதிரே சிரிக்காதே. அடிமை ஆண்டான் எதிரே சிரித்தல் ஆகாது."

நம்பி ஆரூரன் சட்டென்று சிரிப்பு நிறுத்தினார்.

"அந்தணருக்கு அந்தணர் அடிமையா? பித்தனா நீ? என்ன பேசுகிறாய்?"

சீறினார்.

"நம்பி, இதோ பார். என்னை நீ பித்தன் என்று சொன்னாலும் சரி, பேயன் என்று சொன்னாலும் சரி, இந்தச் சபை எதிரே நான் வெட்கப்படப் போவதில்லை. நான் யார் என்று உனக்குத் தெரியவில்லை நம்பி. எனக்காக வேலை செய்வதே உன் தொழில். நான் சொல்லும் நேரத்தில், நான் சொல்லும் விதமாகவே உனக்குத் திருமணம். என் அனுமதியின்றி ஒரு துரும்பும் நீ அசைக்கக் கூடாது. இந்த மாதிரிக் கோலம் உனக்கு ஆகாது; களைந்து விட்டுச் சாதரணமாய் வா.

திருப்புன்கூர் இளைஞர்களே, அந்தக் கிழவர் பேசும் போது அவர் முகத்தில் இருந்த கடுமை பேச்சிலிருந்த அழுத்தம், கண்ணில் தெரிந்த உஷ்ணம். உடம்பிலிருந்து வெளிப்பட்ட ஒரு ஆவேசம் எத்தனை அற்புதமாக இருந்தது தெரியுமா? இப்படி ஒரு வயது முதிர்ந்த உருவத்தை நான் பார்த்ததேயில்லை. அந்தணர்தான் என்றாலும் ஒவ்வொரு அசைவிலும் அரசன் போல் இருந்தார்.

திருவெண்ணை நல்லூர் மக்கள் திருப்புன்கூர் இளைஞர்களுக்கு நடந்தவைகளை நிழலில் அமர்ந்து விவரமாய் எடுத்துச் சொன்னார்கள். ஒருவர் மாற்றி ஒருவர் அந்த இளைஞர்களின் கவனத்தைக் கவரும் வண்ணமாகப் பேசினார்கள். நடந்த ஒரு கதை நாலாபக்கத்திலிருந்தும் இடைவெளி விடாது அந்த இளைஞர்களிடமிருந்து வந்து விழுந்து கொண்டே இருந்தது.

அன்பாகவே வளர்ந்த பிள்ளையல்லவா நம்பி ஆரூரர். அதட்டலாய் கூட இதுவரை யாரும் பேசியதில்லை அல்லவா... அவமானத்தின் மெல்லிய ரேகை கூட படாத முகமல்லவா அது... மெல்லிய நூல் கூட விழாத முகத்தில் மரம் முறிந்து விழுந்தால் எப்படி இருக்கும். சுண்டி கருத்துப் போய் விட்டது சுந்தரர் முகம்.

படபடப்பு அதிகமாக அந்தணனுக்கு அந்தணன் அடிமையா என்று கூவிக் கொண்டே நம்பி ஆரூரர் கிழவர் மீது பாய்ந்தார். அவர் பாய்ந்து விடுவார் என்று எதிர்பார்த்தது போல மணமேடை விட்டு கிழவர் ஓடினார். நம்பி ஆரூரர் மடக்கிப் பிடித்தார். கையை முறுக்கி ஓலையைப் படித்தார். அந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறது என்று கூடப் பார்க்கவில்லை. சிறிய துணுக்குகளாய் கிழித்துப் போட்டு விட்டார். சிங்கமும், புலியும் சண்டையை நிறுத்தி வெறுத்துப் பார்த்துக் கொள்வது போல இரண்டு பேரும் முறைத்துப் பார்த்துக் கொண்டார்கள். ஆளரவம் கேட்டு மிருகங்கள் ஒதுங்குவதைப் போல தனித்தனியே பிரிந்தார்கள். சுந்தரர் மறுபடியும் மணமேடைக்கு வந்தார். ஆனால் அந்தக் கிழச் சிங்கம் விடவில்லை. துரத்தியது. பின் தொடர்ந்து கர்ஜித்தது.

''இவன் கிழித்தது படி ஓலை. மூல ஓலை இதோ என்னிடம் இருக்கிறது. இவன் இப்படி செய்வான் என்று தெரியும். அதனாலேயே படி ஓலையைக் காண்பித்தேன். ஒரு அந்தணனுக்கு இத்தனை ஆத்திரம் வருமா? இவன் ஒரு அந்தணன்தானா? உயரமாகவும், அழகாகவும் இருப்பதால் ஊர் பொதுவில் வளர்ந்துவிட்டு உண்மையை ஏற்க முடியாமல் தவிக்கிறான். நீங்கள் தர்ம நியாயத்துக்குக் கட்டுப்பட்ட மக்களெனில் இந்த மூலை ஓலையைப் பார்த்து உண்மையைத் தெரிந்து கொண்டு என் அடிமையை என்னோடு அனுப்பி வைக்கும்படி கேட்கிறேன்.''

ஊர் பெரியவர்கள் திகைத்துப் போனார்கள். கிழவருடைய ஊர் திருவெண்ணை நல்லூர் என்று கண்டுகொண்டார்கள். நாவலூரில் கிழவனைத் தெரிந்தவர் யாருமே இல்லை என்ற காரணத்தால், அருகேயிருந்த திருவெண்ணைநல்லூருக்கு பஞ்சாயத்து பேச கிளம்பினார்கள். ஒரு கைபார்த்து விடுவது என்று நம்பி ஆரூரர் பின்னே நடந்து போனார். திருவெண்ணை நல்லூர் பரபரப்பாயிற்று. உடனே சபை கூடியது. நம்பி ஆரூராருடைய தகப்பனாரின் கையெழுத்து தானா அது என்று முதலில் சரிபார்க்கப்பட்டது. சரிபார்க்க பல ஓலைகள் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன. சாட்சிகளுடைய கையெழுத்துகளும் சரிபார்க்கப்பட்டன.

ஆனால், ஒரு விஷயம் புரியாமல் இருந்தது. அந்தக் கிழவரை அதற்கு முன் வெண்ணைநல்லூரில் யாரும் பார்த்ததேயில்லை. அதை விசாரிக்க முற்பட்டால் கிழவர் கூவினார். ''அதனால்தான் ஐயா வழக்கே ஏற்பட்டிருக்கிறது. நான் இங்கேயே அமர்ந்திருந்தால் இந்த நம்பிஆரூரான் எனக்கு தினமும் கைகால் பிடித்து விடுவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பீர்களே. நான் சற்று விலகியிருந்ததால் அல்லவா இவனுக்கு பெரிய மரியாதையும் மதிப்பும் ஏற்பட்டு விட்டது. தேவையற்ற கேள்விகள் கேட்காதீர்கள். இந்த முரட்டுப் பையனை அடக்கமாக என் பின்னே வரச்சொல்லுங்கள்.''

அதட்டலாய் கூவிவிட்டு கிழவர் வெறுப்போடு முகத்தைத் திருப்பிக் கொண்டார். ஊர்சபை நம்பி ஆரூரரைப் பார்த்து கை விரித்தது. நம்பி ஆரூரன் புரிந்து கொண்டார்.

''இதுதான் என் தலையெழுத்து என்றால், நான் அடிமை என்பதுதான் உண்



மையென்றால் அதை மீற என்னால் முடியுமோ?'' தலை குனிந்து கொண்டார். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. நீண்ட பெருமூச்சு விட்டார். கிழவரை நோக்கி கைகூப்பினார்.

''இதுவரை நான் பேசிய பேச்சுக்களுக்கு மன்னிப்பு கேட்கிறேன். நான் உங்கள் அடிமை. உங்களுடன் நான் எங்கே வரவேண்டும். என்ன விதமான ஏவல் செய்ய வேண்டும்?'' என்று வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னார்.

அந்தக் கிழவர் சுந்தரருக்கு பதிலே சொல்லவில்லை. அலட்சியமாய் ஊர் சபைக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு நம்பி ஆரூரருக்கு எந்த பதிலும் சொல்லாமல் தெருவில் இறங்கி நீள நடக்கத் துவங்கி விட்டார்.

ஆண்டான் முன்னால் போனால் அடிமை பின்னே போகத்தானே வேண்டும். கிழவர் நடைக்கு நம்பி ஆரூரரால் ஈடுகொடுக்க முடியவில்லை. ஓட வேண்டியிருந்தது. அவன் ஓடுவதை நாலூர் மக்களும் திருவெண்ணை நல்லூர் சபையும் வேடிக்கைப் பார்த்தார்கள்.

இன்னும் ஏதோ நடக்கப் போகிறது என்ற எண்ணத்தால் தூண்டப்பட்டு அவர்களும் நம்பி ஆரூரர் பின்னே ஓடினார்கள். ஊர் தன் பின்னே வருவதைப் பார்த்த நம்பி ஆரூரர், அவர்களோடு தான் சேர்ந்து கொள்ளலாமா என்று தயங்கினார். அந்தக் கிழவரைப் பார்க்கப் பார்க்க ஏனோ அச்சம் பிறந்தது.

அந்த எண்ணம் தோன்றிய வினாடியே அந்தக் கிழவருக்குத் தெரிந்து விட்டது போலும்.

''ஏய்... வா சீக்கிரம்!'' ஒரு அதட்டல் கிழவரிடம் இருந்து வந்தது.

நம்பிஆரூரர் துரிதமாக ஓட கூட்டம் தயங்கியது.

கிழவர் கோயிலுக்குள் நுழைந்தார். இன்னும் நாடகம் ஏதாவது பாக்கியிருக்கிறதா? எதிர்த்துப் பேசியதற்கு மன்னிப்பு கேட்கச் சொல்லி காது பிடித்து கரணம் போடச் சொல்லப் போகிறாரா..? அல்லது உருளுதண்டம் தண்டனையா? அல்லது எதிர்த்து இனி பேசவே மாட்டேன் என்று இறைவன் முன் சத்தியம் வாங்கப் போகிறாரா?

கிழவர் பிரஹாரங்கள் தாண்டி கருவறை நோக்கி விரைய பின்னால் ஓடி வந்த நம்பி ஆரூர் கேட்டார்.

''ஐயா... எங்கே போகிறீர்கள்?''

''என் வீட்டிற்கு.''

''உங்கள் வீடு எங்கே இருக்கிறது..?''

''இது... இது... இதுவே என் வீடு.''

'கோவிலே வீடு எனில் கிழவர் யார்?'

சுந்தரர் திகைத்து நிற்க, கிழவர் கருவறையின் படியேறினார். உள்ளே புகுந்

தார். சிவலிங்கத்துக்கு எதிரே திரும்பினார். சிரித்தார். மறைந்தார். கிழவர் சிரித்ததும், மறைந்ததும் எல்லோரும் பார்த்தார்கள்.

இருபதடி தொலைவிலிருந்து மறைந்த கணத்தேயே நினைத்துக் கொண்டிருந்தார்கள். அடுத்த கணத்துக்கு மனம் போக மறுத்தது. 'ஹா' என்கிற அதிசய வார்த்தை கூட வரவில்லை. அதிசயம் மிகப்பெரியது என்பதால் வார்த்தை கூட வெளியே விடமுடியாமல் போயிற்று. திகைப்பு நெஞ்சை அழுத்தி இமைக்க மறந்து போயிற்று. பார்ப்பவர், பார்க்கும் பொருள் என்பது மறந்து போய் பார்ப்பது என்பது மட்டுமே நிகழ்ந்தது. நான் பார்க்கிறேன் என்கிற தன்மை நழுவிப் போயிற்று. செயலே முதன்மையாய் இருந்தது. அது மட்டுமே இருந்தது. அப்படி தான் என்கிற நிலை மறந்து செயல் மட்டுமே பூரணமாய் ஏற்படும் திகைப்பில் தன்னைக் கவ்விக் கொள்கிற பொழுது ஊர் திளைத்துக் கொண்டிருந்தது. ஒரு செயலில் முழுவதுமாய் ஈடுபட செயலின் விளைவு என்ன..? அடுத்த செயல் என்பது மறந்து போகும். விளைவும் அடுத்த செயலும் மறந்து போவது மனதை லேசாக்கும். ஓவியம் நன்றாக வரவேண்டும். என்கிற எண்ணத்தோடு ஓவியம் தீட்டினால் ஓவியம் நன்றாக வராது. ஓவியம் தீட்டுகிறோம் என்கிற எண்ணம் கூட மூளியானது. மூச்சு விடுதலை எந்த எண்ணமுமின்றி நிகழ்த்துவது போல ஓவியம் தீட்டப்படின் அந்த ஓவியம் சிறப்பாக அமையும்.

ஊர் எவ்வளவு நேரம் திகைத்துக் கிடந்தது என்று தெரியவில்லை. ஆனால் ஒரு சேர எல்லோருக்கும் உணர்வு வந்தது.

நம்பி ஆரூரர் இரண்டு கைகளையும் விரித்து கருவறை நோக்கியே வாய் பிளந்து நிற்பது தெரிந்தது. அவர் தன் வயமற்று நிற்பது புரிந்தது. அவரது பார்வை கருவறையில் உள்ள சிவலிங்கத்தின் மீது இல்லை. அதைத் தாண்டியும் எங்கோ போய் விடவில்லை. மூர்த்திக்கும் அவர் கண்ணுக்கும் நடுவே இருந்த இடைவெளியில் இலக்கில்லாமல் லயித்திருந்தது. எங்கோ வெகு தொலைவில் பார்க்கிற பார்வைக்குக் கூட ஒரு இலக்கு உண்டு. தன்னை இழந்து ஐந்தடி தொலைவில் யாருமே எதுவுமே இல்லாத வெளியில் பார்வையைப் பதிய வைப்பது ஒரு யோக நிலை. வெட்ட வெளியில் இறைவனைக் கண்டுவிட்ட சிறப்பு.

வெட்டவெளியில் இருந்த இறைவன் நம்பி ஆரூரரிடம் என்ன பேசினார்?

தெரியவில்லை.

"பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா" ஒரு பிளிறல் போல் நம்பி ஆரூரரிடமிருந்து வார்த்தைகள் வந்தன.

"நீ கூப்பிட்டு வர மறுத்தேனல்லவா? உனக்கு அடிமை இல்லை என்று எதிர்த்து நின்றேனல்லவா? இனி அவ்விதம் செய்ய மாட்டேன். உனக்கு ஆளானேன். ஒரு பொழுதும் இதை இல்லை என்று மறுக்க மாட்டேன்.

"என் படிப்பு, என் அழகு, என் செல்வம், என் குலப்பெருமை, என் நாய் மனது என்னைப் பற்றியே நினைத்துக் கொண்டு உன்னைப் பிரிந்திருந்தது. இனி



நான் உனக்கு ஆளானேன். இதை எங்கேயும் மறுக்க மாட்டேன்."

பாட்டுப் பிய்த்துக் கொண்டு வந்தது. பத்துப் பாடல்கள் பாடியதும் சோர்வு வந்தது. மெல்ல தளர்ந்து நம்பி சரிய ஊர் தாங்கிக் கொண்டது.

"என்ன நடந்தது நம்பி?" ஊர் கேட்டது.

"இனி இறையோடு இருத்தலே வாழ்க்கை. இறைவனைப் பாடுதலே தொழில். எங்கெல்லாம் இறைவன் போகச் சொல்கிறாரோ அங்கெல்லாம் போவதே என் கடமை."

"அப்பொழுது திருமணம்?"

"இல்லை..."

"குடும்பம்?"

"இல்லை..."

"உன் சொத்து சுகங்கள்?"

"என்னுடையதல்ல."

"துறவியா?"

"துறக்கச் சொல்லவில்லை."

"இப்படியே கிரீடமும், பட்டும், பலவகை மாலைகளும், வாசனை திரவியங்களுமாக இரு என்று சொல்லி விட்டார்."

"உனக்கு பாடத் தெரியுமா நம்பி?"

"தெரிய வரும். பாடு என்றார். பாடியது என் வாய். பாடல் அவன்."

"பித்தா... பித்தா...' என்று முணுமுணுத்தாயே... அது என்ன?"

"எனக்குப் பாடத் தெரியாது. கவிப்புலமை இல்லை என்று சொன்னேன். உன்னை என்ன சொல்லி என்னால் பாட முடியும் என்று அரற்றினேன்."

"பித்தா என்று தானே கடைசியில் கூவினாய். அதையே முதல் வார்த்தையாக வைத்துப் பாடு என்று கட்டளை வந்தது."

"நம்பி, வந்தது கிழவர். அவரை நாங்களும் பார்த்தோம். பார்த்தவுடனேயே நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொள்ளும் தெய்வாம்சம் அவர் என்பது புரிந்தது. கடவுள் கிழவர் ரூபமா? மறைந்த பிறகு அவர் வடிவு என்ன? இளமையா? நடுத்தர வயதா?"

"அது எங்கும் நிறைந்த சக்தி. இடையறாது அசையும் சக்தி. அந்த அசைதலில் ஒரு ஒழுங்கு வேண்டுமென்று மனசு விரும்பினால் நம் மனசு விருப்பத்திற்கேற்ப ஒரு வடிவு அங்கு வந்து விடுகிறது. மனசுக்கு பூமியில் இல்லாததை எண்ணத் தெரியாது. இங்கு சொல்லப்பட்டதையே மனசு பார்க்க விரும்புகிறது. ரிஷபத்தின் மீது அமர்ந்திருப்பவர் சடைமுடி உடையவர். புலித்தோல் அணிந்தவர். சிரசிலே

சுஜாதா 1.2.1995

கங்கையைக் கொண்டவர். மூன்றாம் பிறையைச் சூடிக் கொண்டவர். உடல் முழுவதும் சாம்பல் பூசியவர். உமாதேவியாரை அருகே கொண்டிருப்பவர் என்று எனக்கு சொல்லப்பட்டிருக்கிறது அல்லவா? எனக்கு சொல்லப்பட்ட விதமாகவே பார்க்க மனசு ஏங்கியது. மனசு ஏங்கிய விதமாகவே இறைவன் காட்சியும் எனக்கு அமைந்தது.''

''அதாவது...?''

''ரிஷப வாகனத்தில் உமாதேவியாரோடு வரிசடையும், கங்கையும் பொங்க என் சிவனைக் கண்டேன்.''

''நம்பி, இன்னொரு கேள்வி. இறைவனைக் கண்ட போது ஒரு உன்மத்தராய் உங்களை மறந்த நிலையில் இருந்தீர்கள். இப்போது எப்படி இருக்கிறீர்கள் நம்பி?''

''உன்மத்தம் சுருங்கி உள்ளுக்குள் பருக்கை போல இருக்கிறது. இறை நினைப்பு தலைக்குள் ஏதோ ஒரு இடத்தில் சிறு தும்பையாய் பூத்து தன் இருப்பை இடைவிடாது சொல்லிக் கொண்டிருக்கிறது. எந்நேரமும் இந்தப் பூவும் பருக்கையும் பெரிதாகலாம். அப்போது உடம்பு மறந்து போய் என் உள்ளும் புறமும் இறை உணர்வு ததும்பி நிற்கும். மறுபடி சுருங்கி பருக்கையாகும். எனக்கு இப்போது பசிக்கிறது தோழர்களே'' நம்பி பரிதாபமாய் கேட்டார்.

கோயில் சாதம் அவருக்கு ஊட்டப்பட்டது.

திருப்பூன்கூர் இளைஞர்கள் இரண்டு கைகளாலும் வாயைப் பொத்திக் கொண்டு இந்தக் கதையைக் கேட்டார்கள்.

திருவெண்ணைநல்லூர் ஊர்க்காரர்கள் இலை போட்டு அவர்களுக்கு உணவிட்ட போதும், நம்பி ஆருரர் நினைவாகவே உணவு உட்கொண்டார்கள்.

''நம்பி ஆருரர் இப்போது எங்கிருக்கிறார்?'' ஊர் மக்களைக் கேட்டார்கள்.

''இனி நம்பி ஆருரர் என்று அவரை அழைப்பது தவறு. இனி அவர் பெயர் சுந்தரர். ஆலால சுந்தரர். இந்த தொண்டை மண்டலத்தில் தான் எங்கேனும் இருப்பார். விசாரித்துக் கொண்டு போய் பாருங்கள்.''

இரண்டு நாட்களுக்கு வேண்டிய பொதிச் சோறு தலையில் வைத்து திருப்புன்கூர் இளைஞர்கள் சுந்தரரைத் தேடிப் போனார்கள். போகும் போது திடும் என்று ஒரு இளைஞன் கேட்டான்.

''சுந்தரருக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணின் கதி என்ன?''

''அது அவ்வளவுதான். அவளை இனி எவரும் திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள்.''

''இது தண்டனையா? பரிசா?'' இன்னொரு இளைஞன் சந்தேகம் எழுப்பினான்.

''அது அனுபவிப்பவரைப் பொறுத்தது. திருமணம் என்பதைக் கூட தண்டனை என்றும் கொள்ளலாம். பரிசு என்றும் கொள்ளலாம். அதே விதமாய் திருமணம் நின்று போனதையும் பரிசு, தண்டனை என்று வகைப்படுத்திக் கொள்ளலாம்?.''

''உலகு இதைப் பற்றி என்ன சொல்லும்?''

''இரண்டு விதமாய் சொல்லும். திருமணத்தை உயர்வு என்று கருதுபவன் திருமணம் நின்று போதலைத் தண்டனை என்று சொல்வான். திருமணத்தை தண்டனை என்று சொல்பவன் இதைப் பரிசு என்று சொல்வான்.''

''ஆனால் உண்மை எது?''

''வெறுப்போ விருப்போ இல்லாத இடம். வேண்டுதலோ, வேண்டாமையோ இல்லாத நிலை. ஆசையோ அருவருப்போ தோன்றாத மனம்.''

''இதை விளக்க முடியுமா?''

''தேன் தித்தித்தது என்பதற்கு என்ன அளவு சொல்ல? எப்படி தித்தித்தது என்று உனக்கு உணர்த்த? இந்த நிலை அனுபவித்தாலொழிய புரியாத நிலை.''

''நீ அனுபவித்தாயா? இவ்வளவு விளக்கமாகப் பேசுகிறாயே...''

''இந்த அனுபவத்தை விளக்க முடியாது என்று பல நூல்கள் விளக்கியிருக்கின்றனவே...'' அவர்கள் பேச்சை நிறுத்திவிட்டு சுந்தரரைத் தேடிப் போனார்கள்.

## 3

சித்தவட மடம் என்று அதற்குப் பெயர். மடம் தெற்கு பார்த்திருந்தது. மடத்தின் வாயிலுக்கு இருபுறமும் அகலமான திண்ணைகள் இருந்தன. அந்த அகலத் திண்ணைகளில் ஊர் ஊராய் பயணம் செய்யும் பைராஹிகளும், சிவனடியார்களும், துறவிகளும், பிரம்மச்சாரிகளும் படுத்திருந்தார்கள். சுந்தரரும் அங்கே சுருண்டு படுத்துக் கொண்டிருந்தார். உணவு சாப்பிடவே தோன்றவேயில்லை. எவரோ கொடுத்த உணவும் உள்ளே இறங்கவில்லை. வாழ்க்கையின் மற்ற எல்லா விஷயங்களும் மறந்து போய் கருவறைக்குள் உள்ளே புகுந்த கிழவர் திரும்பியதும் காணாமல் போனதும், கண்ணுக்குக் கருவறை தெரிந்தாலும் உள்ளுக்குள் வெளிச்சம் தெரிந்ததும் கருவறை வெறுமே பார்க்கப்பட்டபடி இருந்து மனசு வெளிச்சத்தோடு தொடர்பு கொண்டு அதை ஆராய முற்பட்டதும் மறுபடி மறுபடி நினைவுக்கு வருகின்றன. வெள்ளையும், கருப்பும்தான் உண்மையான நிறம் போல. ஒரு வெண்மைக்குள் ஏகப்பட்ட கருப்புப் புள்ளிகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. கையகல சதுரத்துக்குள் பல லட்சம் புள்ளிகள் இருக்கின்றன. இடைவிடாது ஏதோ ஒரு தாளகதியில் நகர்ந்து கொண்டிருக்கின்றன. சிள் வண்டின் ரீங்காரமாகி கனத்து ஊம்

என்ற சத்தம் ஏற்பட்டு இந்த சப்தமும் இந்த அசைவுமே உலகம் என்பதாய் புரிய வைத்தன. அந்தப் புள்ளிகள் நகரும் போதெல்லாம் விதவிதமான கோலங்கள், யந்திரச் சக்கரங்கள் தோன்றுகின்றன. கலைகின்றன. மறுபடி தூண்டுகின்றன. பிரமை பிடித்தது போல் அவைகளையே பார்த்துக் கொண்டிருந்தது ஞாபகத்துக்கு வந்தது.

இது தானா உலகம். இதுதானா எல்லாம்... இதுதானா கடவுள்... இதுதானா சகலமும் ஆட்டுவிக்கிற சக்தி. இதைத்தான் தொழ வேண்டுமா? இதைப் பார்க்கத் தான் எல்லோரும் தவமிருக்கிறார்களா? இதைப் பற்றித்தான் எல்லோரும் பாடி விட்டு போனார்களா. இந்த வெறும் வெளியோடு என்ன பேசுவது..? இந்த வெறும் வெளியைப் பற்றி என்ன பாடுவது? இடையறாது தன் போக்கில் அசைவு ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சக்தியோடு எப்படி தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது? நகர்ந்து விடுவோமா? நம் உடம்பில் இருக்கின்ற துடிப்பு அந்த சக்தியோடு கலக்க வைத்து விடுவோமா? உடம்பில் உஷ்ணத்தையும், சுவாசத்தையும் ஏற்படுத்துகிற சக்தியை நழுவச் செய்து எதிரே இருக்கிற சக்தியோடு கலந்து விடுவோமா? குடத்துக்குள் ஒரு வெளி இருக்கிறது. அந்தக் குடம் உடைந்து போனால் உள்ளிருக்கும் வெளி வெளியே இருக்கும் வெளியோடு கலந்து விடுகிறது. உடம்பை உதிர்த்து விடுவோமா? மனசு உடம்பை வேண்டாமென்று தளர்த்திய போது சுற்றி எல்லா இடங்களிலிருந்தும் ஒரு குரல் கேட்டது.

"நீ வன்தொண்டன். என்னை உன் வன்மையினால் அதட்டி, மடக்கிப்பிடித்தாயல்லவா? அதனால் நீ வன்தொண்டன். நம்பி, உன்னோடு தோழமை செய்து கொள்ள விரும்பினோம். அதனாலேயே உன் திருமணத்தைத் தடுத்து நிறுத்தினோம். நம்பி, என் புகழ் பாடு. பல தலங்களுக்குப் போய் என் மீது பாடல் இயற்று. இனி இதுவே உன் வேலை. இதற்கே உனக்கு பிறப்பு."

ஒலிதான் கடவுளா? குரல்தான் சிவனா? இப்போது ஒளியைக் காணோம். ஒலியே உடம்பு முழுவதும் மனசு முழுவதும் பரவிக் கிடக்கிறது. ஒலி கேட்காத போது ஒளி ஆக்கிரமித்துக் கொள்கிறது. இறைவன் ரகசியமானவனா? மர்மக் குரலாய் மதிக்க முடியாத வெளிச்சமாய் இருப்பவனா? ஒரு பயம் தானே கவ்வுகிறது. பயத்தில் பாட்டு எழுத முடியுமா?

பயமற்ற இதமாய் இறைவன் பலருக்கும் காட்சி அளித்திருக்கிறாரே... சிவனுக்கு உருவம் உண்டே. சஞ்சடையும், அதில் பொங்கும் கங்கையும் பிறை சூடிக் கொண்ட தன்மையும், பால்வண்ண மேனியும் இடுப்பில் புலித்தோலும் கையில் சூலமும், உடுக்கையும், உதட்டில் குமிழ் சிரிப்பும் நெற்றி நடுவிலே மூன்றாவது கண்ணும் அழகாய் அமைதியாய் அமர்ந்திருப்பதே சிவம் என்று சொல்வார்களே...

மனம் என்ன நினைத்ததோ, அந்த உருவம் வெளிச்சத்திலிருந்து வெளியே வந்தது. அந்த நிலாத் துண்டு தான் கண்ணைப் பறித்தது. அந்த வெளிச்சத்தையே பிறை நிலவு போல் வடிவமாக்கிக் கொண்டதாக இருந்தது. பட்டப் பகலில் அரைக் கண் மூடும் போது கண்ணுக்கு மிக அருகே ஒரு பிறை தோன்றும். ஒரு வெளிச்சப்



பிறை மிக அருகே இருக்கும். அந்த வெளிச்சப் பிறைதான் சிவன் தலையிலும் இருந்தது.

நான் என்ன பாடுவேன் என்று திக்கித் திணறி கேட்ட போது பித்தா என்று அடி எடுத்துக் கொடுத்தது. அது கொடுத்த வார்த்தை முதலாகவும் கண்ணைப் பறித்த பிறை இரண்டாவதாகவும் அளப்பரிய அந்தச் சக்தி மூன்றாவதாகவும் அதற்கு முன்னே தான் நிற்கும் நிலை நான்காவதாகவும் வந்தது.

பித்தா - முதல் வார்த்தை.

பிறை சூழ - இரண்டாம் வார்த்தை.

பெருமானே - மூன்றாம் வார்த்தை.

அருளாளா - நான்காம் வார்த்தை.

'அருளாளா' என்று கூப்பிடும் போது மனமும் உடம்பும் கை கூப்பி விட்டன. அத்தனை பெரிய சக்தியை எதிரே கண்டதும் பெருமானே என்று கைகுவித்ததும் அருளாளா என்று அடுத்த வார்த்தை தோன்றி விட்டது. கொடு என்று கேட்கத் தோன்றி விட்டது. ஆனால் என்ன கேட்க வேண்டும் என்று புரியவில்லை. என்ன கொடுப்பான் என்று தெரியவில்லை. அருளுபவன் என்றதால் அருளாளா என்று சொல்ல வந்து விட்டது. எனக்கு அருள் தருவாயாக என்று மறைமுகமாகத் தொக்கி நிற்கிறது. ஆனால் என்ன? எப்போது எங்கே என்பதுதான் புரியவில்லை.

அந்த ஒளியோடு கலந்து கிடந்த போது காலம் பற்றிய எண்ணம் இல்லை. இப்போது அந்தக் காலப் பிரமாணம் இடையறாது தொடர்ந்து கொண்டிருக்கிறது. தூக்கமில்லாமல் ஒவ்வொரு நாழியும் எண்ணி எண்ணி தள்ளிக் கொண்டிருக்கிறது. உண்ணவும் இல்லை, தூங்கவும் இல்லை. வெறும் எண்ணங்கள் மட்டுமே ஓடிக் கொண்டிருக்கின்றன.

எனக்கு ஏன்..? எனக்கு ஏன் இது? இது வரமா? தண்டனையா? நடுமுற்றத்தில் கட்டில் போட்டு வேலையாட்கள் வீச, பஞ்சணையில் தூங்குகின்ற காலம் போய் விட்டதா? பக்கத்திலே படுத்திருக்கிறானே பைராஹி... அதைப் போலத் தான் இனி உடை அணிய வேண்டுமா? பாடுவதே பணி... உனக்குத் திருமணம் வேண்டாமென்று இழுத்து வந்து விட்டதே. இனி உலகச் சுகங்களோடு எனக்குத் தொடர்பில்லையா? இறை வாழ்க்கையும், உலகச் சுகங்களும் வெவ்வேறானவையா? இறைவனுக்கு எதிரானதா இல்லறம்? இல்லறத்தார் காண முடியாததா இறை?

ஆமெனில் இல்லறம் என்கிற அமைப்பையே கலைத்து விடலாமே. அப்படி எங்கும் எவரும் கலைத்தது போல தெரியவில்லையே.

குறிப்பிட்ட வயது வரை ஆட்டமும் பாட்டமுமாய் கல்வியும் கேள்வியுமாய், சீரும் செல்வமுமாய், கோபமும் தாபமுமாய் வாழ்ந்து பழகிவிட்டு ஒரு நண்பகலில் இறை தரிசனம் ஏற்பட்டதெனில் என்ன செய்ய வேண்டும்?

மறுபடி இறைவன் தரிசனம் எப்போது கிடைக்கும் என்று கேட்க வேண்டுமா? அல்லது உண்டு உகுத்து எல்லோரும் போல் கிடக்க வேண்டுமா? என்ன குழப்பம் இது? எனகக்கெதற்கு இறை தரிசனம்.

அந்தச் சக்தியைக் கண்ட போதே உடம்பு சக்தியை உதறி இருக்க வேண்டும். இந்த உடம்பைச் சுமந்து கொண்டு அதற்கான சுகத்தையும் தேடிக் கொண்டு இறைவனைப் பற்றி பாடவும் செய்ய வேண்டுமெனில் இது என்ன கொடுமை.

என் சிவனே... எனக்கு உம்மைக் காட்டியிருக்க வேண்டாம். காட்டிவிட்டு எங்கோ ஒரு திண்ணையில் இப்படி கிடத்தியிருக்கவும் வேண்டாம். இல்லறமும் இல்லை. துறவறமும் இல்லை.

என்னைப் பற்றியே தெளிவில்லாத நான் உம்மைப் பற்றி என்ன பாடப் போகிறேன் சிவனே... என்னை எங்கே இழுத்துப் போகிறீர். நெஞ்சு பொங்கி சுந்தரருக்கு ஒரு அழுகை வந்தது.

அவர் தலையில் யாரோ கால் வைத்தார்கள். சுந்தரர் கோபத்துடன் எழுந்து பார்த்தார். ஒரு கிழவருடைய கால் சுந்தரர் தலை வைக்கும் இடத்துக்கு அருகே இருந்தது. அந்தக் கிழவரோ... சுந்தரர் பயம் கலந்த பதட்டத்துடன் கிழவரைப் புரட்டிப் போட்டார்.

இல்லை. இது வேறு கிழவர்.

# 4

புரட்டிப் போட்ட போதும் கிழவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். குட்டையான வெண்தாடி, குடுமி, நெற்றி நிறைய திருநீறு, நெஞ்சில் புரளும் உத்திராட்சம். போர்த்திய துண்டை தரையில் விரித்து இடுப்புத் துண்டை இறுக்கிக் கட்டி புரட்டியவிதமே கிடந்தார். சுந்தரர் தலையில் அவர் கால் பட்ட இடம் உறுத்திக் கொண்டேயிருந்தது. தலை முடியைத் தட்டத்தட்ட கிழவரின் காலடி மண் உதிர்ந்து கொண்டேயிருந்தது. கிழவரின் இரண்டு கால்களையும் தன் இரண்டு கைகளால் பிடித்து சுந்தரர் சற்று நகர்த்தினார்.

''என்ன..?'' கிழம் சட்டென்று விழித்துக் கொண்டு விட்டது.

''உங்கள் கால் என் தலை மீது பட்டு விட்டது'' சுந்தரர் மனக்கடுப்பை அடக்கிக் கொண்டு சொன்னார்.

இப்போதெல்லாம் கிழவர் என்றாலுமே ஒரு பயம் வந்து விடுகிறது.

''வயது அப்பனே... வயது. நான் கிழவனல்லவா. எங்கிருக்கிறேன்.



ஏது செய்கிறேன் என்கிற நினைவே இல்லை.''

மறுபடியும் புரண்டு படுத்துக் கொண்டது.

இது மன்னிப்பா இல்லை, சமாதானமா..?

அப்படித்தான் செய்வேன் என்கிற இறுமாப்பா?

மன்னித்து விடுங்கள் என்று சொன்னால் என்ன போய் விடும்? இந்தக் கிழவர்களுக்கே திமிர் அதிகம். இன்னொரு முறை கால் தலையில் படட்டும்... சொல்கிறேன்.

உட்கார்ந்த சுந்தரர் தட கென்று படுத்தார்.

அட.. இது என்ன பே ரசனை... இன்னொரு முறை கால் தலையில் படட்டும் என்று யாராவது யோசிப்பார்களா? பட்டதற்கு மெல்ல கடிந்து கொண்டாகி விட்டது. கிழவரும் சமாதானம் சொல்லி விட்டார். இன்னொரு முறை படட்டும் சொல்கிறேன் என்றால், இன்னொரு முறை கால் தலையில் படவேண்டும் என்பது விருப்பமா? அல்லது பட்ட பிறகு நெஞ்சிலிருந்து கிளம்பும் கோபத்தின் விருப்பமா?

கோபம் கொள்ளத்தான் விருப்பம்.

எங்கு கோபம் கொள்ள முடியும்?

எவரால் பதிலுக்கு கோபப்பட முடியாதோ..? அவர் மீதுதான் கோபப் பட முடியும். எவர் நம்மீது கோபம் கொண்டு நடுங்குகிறரோ மனம் பாதித்து கண்ணில் நீர் துளித்து நிற்கிறாரோ அவர் மீதுதான் கடுமையாகக் கோபம் கொள்ள முடியும். வலுவற்றவர் மீது கோபம் கொள்ளுவது ஒரு சுகம். ஒரு ஆளுமைச் சுகம்.

உள்ளிருந்து பொங்கிப் பொங்கி வரும் கர்வத்தை வார்த்தையாக்கினால் அதிகாரம். அதிகாரத்தை இன்னும் உயரத் தூக்கினால் கோபம். கல்யாணத்தன்று காலை வரை கூட வாழ்க்கை இப்படித்தான் கர்வமாக அதிகாரமாக இருந்தது. சட்டென்று அந்த கர்வம் கலங்கி கலைந்து போய் விட்டது.

உடம்பால் ஆன கர்வம் உடம்புக்கு மீறி ஒன்றைப் பார்த்த பிறகு அடங்கி விட்டது. அப்படிப் பார்த்ததை மனசு கேள்வி கேட்டு கேள்வி கேட்டு சந்தேகிக்க பார்த்தது மறந்து போய் உடம்பு கர்வம் அதிகரிக்கிறது. நல்ல அனுபவத்தை தக்க வைத்துக் கொள்ள மனதுக்குத் தெரியவேயில்லை.

சுந்தரர் அயர்ச்சியுடன் கண்களை மூடிக் கொண்டார். தடுத்தாட்கொண்ட கிழவனால் வாழ்க்கை மாறி விட்டது.

செல்வம், கல்வி, பெண்கள், பெருமை என்று நினைத்துக் கொண்டி

ருந்த காலம் போய் எந்த நேரமும் அந்தக் கிழவனையே நினைத்துக் கொண்டிருக்கும்படியாயிற்று. மீண்டும் அந்தக் கிழவனைப் பார்க்க ஆசையாகவும் இருக்கிறது. அச்சமாகவும் இருக்கிறது. ஏன் இவனை சந்தித்தோம் என்று வேதனையும் இருக்கிறது. அவனருளால் காண முடியாத காட்சியைக் கண்டோம் என்கிற பெருமையும் இருக்கிறது.

அதுவரை ஊர், அழகன் அறிஞன் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தது. அரசரின் வளர்ப்புப் பிள்ளை என்று கொண்டாடிக் கொண்டிருந்தது. வழியிலே பார்த்தால் கைகூப்பி ஒதுங்கி நின்றது. ஆனால், இப்போதோ ஊர் காலில் விழுந்து கும்பிடுகிறது. குழந்தைகள் இளைஞர்கள் வயசாளிகள் பெண்கள் மூதாட்டிகள் ஏன் . முற்றிலும் துறந்தவர் கூட விழுந்து வணங்குகிறார்கள்.

இந்த வணக்கங்கள் பதட்டத்தைக் கொடுக்கின்றன. என் சிவனே... இந்த நமஸ்காரங்கள் எனக்கோ... உனக்கோ... கூவல் வருகிறது. என்னுள் வந்த உனக்கே என்கிற முடிவு வருகிறது. இந்த வணக்கங்கள் கர்வத்தைக் கொடுத்து விடக்கூடாதே என்கிற கவலை வருகிறது. அந்தக் கவலையை மீறியும் கர்வம் வருகிறது.

இன்னொரு முறை இந்தக் கிழவனின் கால் என் தலையில் படட்டும்... அவனை என்ன செய்கிறேன் பார் என்பது கூட கர்வம்தான். வாழ்க்கையில் ஒரு சிறிய தொந்தரவைக் கூட பொறுத்துக் கொள்ள முடியாத கர்வம். மறுபடியும் நச்சென்று பெரிய கட்டு மயில் தோகையால் உச்சந்தலையில் அடித்தது போல் அந்தக் கிழவரின் தலை சுந்தரரின் தலையில் மோதியது.

எழுந்து கத்தி விடலாமா?

வேண்டாம். பொறுத்துக் கொள்வோம்.

இங்கே பொறுத்துக் கொள்வது கூட கர்வமோ... ஒரு கர்வத்தை முன்னிட்டுப் பொறுத்துக் கொள்கிறோமோ... அடக்கம் அகம்பாவமோ... அடக்கம் இயல்பாக இல்லாமல் தன்னைத் தானே பாராட்டிக் கொள்கிற விதமாய் வந்தால் அது கர்வம்தான். அந்த அடக்கம் வலிந்து செய்யப்படும் அடக்கம்.

தான் ஏன் இப்படி இடைவிடாத ஒரு அவஸ்தையில் இருக்கிறோம் என்று சுந்தரர் யோசித்த போது, மூன்றாம் முறையாய் கிழவரின் கால் சுந்தரர் தலையில் பட்டது. சுந்தரர் புரண்டு நான்கடி தள்ளிப் படுக்க கிழவரும் தூக்கத்தில் புரண்டு வந்து சுந்தரர் தலையைக் காலால் எட்டினார். இன்னும் விலகிப் படுக்க மீண்டும் எட்டினார்.

அதுவரை அடக்கமாயிருந்த சுந்தரரின் புத்தி ஆவேசமாகியது. "யாரைய்யா நீ... என்ன திமிர் இருந்தால் சொல்லச் சொல்ல எட்டி உதைப்



பாய். என் தலையில் எட்டி உதைப்பதென்றே கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாயா..? எழுந்து பதில் சொல்லும். யார் நீ?"

"நான் தான்."

"நான்தானென்றால் என்ன அர்த்தம்?"

"இன்னும் நான் யார் என்று தெரியவில்லையா சுந்தரா?"

கிழவர் சிரித்தார்.

இப்பொழுது கை உயர்த்தி தலையில் வைத்தார். சில்லென்று ஒரு சக்தி உள்புகுந்து தாக்கியது. வெளியே சூடும் உள்ளே குளிருமாய் நின்றது. இரும்புக்குள் இருந்த சவ்வுகள் எல்லாம் குளிரால் சுருங்கி விரிந்து தவித்தன. பார்வையில் இலக்கு தப்பியது. இலக்கில்லாத வெறும் பார்வையாயிற்று. நாக்கு நுனி தடித்தது. உதடுகள் இழுத்தன. வழியோரங்களில் கனம் தெரிந்தது. உடம்புக்குள்ளே சக்தி எதுவும் செய்யாமல் உட்கார்ந்து விட்டது. உடம்பில் சக்தி இருந்தது. ஆனால் நகரவில்லை. உணர்வு இருந்தது. ஆனால் தொழிலாகவில்லை. எண்ணம் இருந்தது. ஆனால் அவர் வசம் இல்லை. தன் இருப்பு தன் வசமின்றி எதிரே உள்ள கிழவர் வசம் ஒட்டிக் கொண்டதைச் சுந்தரர் உணர்ந்தார். 'ஹா...' என்று ஒரு நெடுங்கூச்சல் தொண்டையிலிருந்து கிளம்பியது. மிகுந்த சந்தோஷம். விடுதலை என்று அந்த சப்தம் சுந்தரருக்கு அறிவித்தது. சுந்தரர் கை கூப்பினார். கண்முன்னே கிழவர் கரைந்து மறைவதைக் கண்டார். இறைவனே இன்னொரு முறைக் கிழவனாய் என்று உணர்ந்து கொண்டார்.

உள்ளிருந்து பாட்டு பொங்கியது. தன் தலைவன் யார் என்று அறியாதவன் ஒருவன் இருப்பானா..? அப்படி அறியாமல் இருக்கத்தான் கடவுள் விடுவானா? உனக்கு நானே தலைவன் என்று அவன் தன் தலையில மீது கால் வைத்தான். நான் அவனை யாரென்று அறியாமல் இகழ்ந்தேன். இறையே இனியும் இவ்விதம் நேராது இருக்க அருள்வாயாக.

கடவுள் என்னை ஆட்கொள்வதற்கு முன் நான் அவனை மறந்திருந்தேன். அவனைப் பற்றி நினையாமல் இருந்தேன். அதனால் நான் இழந்தது என்ன? இப்போது என்னை ஆட்கொண்ட பிறகு நான் அடைந்தது என்ன? எனக்குப் புரியவில்லை. ஆயினும் அவனை மறவாமல் இருக்கிறேன்.

திருவதிகை என்ற ஊரில் மனம் உருகிப் பாடிய சுந்தரரின் பதிகங்கள் திருப்புன்கூர் இளைஞர்களுக்குப் பிரதியெடுத்துத் தரப்பட்டன. அவர்கள் சுந்தரரைத் தொலைவிலிருந்தே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அருகில் போய் ஒரு முறை நமஸ்கரித்தார்கள்.

சுந்தரர் திருவாரூக்குக் கிளம்பி விட்டார் என்கிற செய்தி அறிந்து அவர் பின்னே அவர் குழுவாய் பின் தொடர்ந்தார்கள். போகிற போது அவர்கள் ஊரைத் தாண்டிக் கொண்டு போனார்கள். அவரவர் வீட்டுக்குப் போகாமல்

சுந்தரரின் அடியார்களாகவே பின்தொடர்ந்தார்கள்.

எங்கு போனாலும் சுந்தரரை முன்னமே அறிந்தவர்கள் போல் ஊரா வரவேற்றனர்.

''நீங்கள் வருவீர்கள் என்று தெரியும். கனவில் உத்தரவாயிற்றே. உங் ளோடு வருபவர்கள் எண்ணிக்கையும் எங்களுக்குத் தெரியும். அத்தலை பேருக்கும் உணவு தயார். ஆடி அமுது செய்ய வேண்டும். பிறகு பாடி மகிழ்விக்க வேண்டும்.''

ஊர் வணங்கி சுந்தரரை உபசரித்தது. உடன் வந்தவரையும் சீராட்டியது

வாழ்க்கையில் உள்ள காமகுரோதங்கள் மொத்தமும் அழிந்து விட்டது போல் தோன்றியது திருப்புன்கூர் இளைஞர்களுக்கு. இடையறாத பயணம் ஒவ்வொரு தலமாக தரிசனம். தங்கின இடமெல்லம் சோறு. குடிக்க குளிர்ந்த நீர். படுக்க திண்ணை. உடுப்பு கிழிந்தால் அதை வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டு புதிது கொடுத்தார்கள். ஊர்ச் சிறுவர்கள் உடுப்பைச் சுத்தம் செய்து கொடுத்தார்கள். நடந்துவந்த களைப்பு தீர வாலிபர்கள் கால் பிடித்து விட் டார்கள். முதிர்ந்த பெண்க்ள் தலைமாட்டில் அமர்ந்து விசிறினார்கள்.

எங்கெல்லாம் சுந்தரர் பதிகம் பாடுகிறாரோ... பாடுகிற போதே அந்தப் பாடல்களை திருப்புன்கூர் இளைஞர்கள் மனனம் செய்து கொண்டார்கள். மனனம் செய்து கொண்டதை பனையோலையால் எழுதி வைத்துக் கொண் டார்கள். பல பிரதிகள் எடுத்து ஊர் ஜனங்களுக்கு விநியோகித்தார்கள். ஊர் பதிகத்தை வாங்கி சிரசின் மேல் வைத்துக் கொண்டது. அந்த இளைஞர்க ளைக் கண்ணில் வைத்து உபசரித்தது.

திருவாரூர் எல்லையில் ஒரு ஜனசமுத்திரமே காத்துக் கொண்டிருந்தது. சுந்தரரைக் கண்டதும் அப்படியே தரையில் விழுந்து வணங்கியது. தோளில் சுமந்து கோவிலுக்குக் கொண்டு போனது. சுந்தரர் உணர்ச்சிவசப்பட்டார்.

ஆயிரமாயிரம் மக்களைக் கண்டதும் சுந்தரர் அரண்டு போனார். ஒன் றல்ல, இரண்டல்ல, அங்குள்ள மக்களின் அனைவரது கனவுகளிலும் சிவ பெருமான் தோன்றி, ''எனது தோழனும், எனது வண்தொண்டனுமாகிய சுந்தரன் குழுவோடு நம்மைக் காண வருகிறான். எதிர் கொண்டு வரவேற்று நம்மிடையே அழைத்து வரவேண்டும்.''

ஊர் மொத்தமும் ஒரே கனவு காணுமா?

அதுவும் கடவுள் கனவாய் காணுமா?

அப்படிக் கண்டால் ஊர் தாங்குமா?

குழுகும், வாழைப்பழம், கோலமும் பூச்செரியலுமாய் ஊர் அமர்க்களப் பட்டது. அழகுபடுத்தப்பட்டது. கனவிலே கண்ட கடவுள் நேரிலே வந்த தைப் போல் ஊர் மக்கள் சுந்தரரைப் பார்த்தார்கள். பயந்து வாய்ப் பொத்தி பேசினார்கள். நெல் என்றால் சோறாக நின்றார்கள்.



சுந்தரர் மிரண்டார். அந்த மிரட்சி அவர் முகத்திலே தெரிந்தது. திருப்புன் கூர் இளைஞர்கள் எதனால் இத்தனை அசசம் சுந்தாருக்கு என்று வியந்தார் கள். தியாகேசப் பெருமானைக் கண்டதும் சுந்தரர் விம்மி விம்மி அழுதார். கண் மூர்த்தியைக் கண்ட போதே உள்ளுக்குள் ஒளி பெரிதாயிற்று. உடம் பைபக் 'கூடென்று உணர்ந்து அதனுள் இருப்பதை அடையாளம் தெரிந்து விட்டது. கண் வழியே பார்க்கின்ற சிலை ஒரு பக்கமாகவும் மனம் வழியே பார்க்கின்ற இறை ஒரு பக்கமாகவும் சில வினாடிகள் இருந்தன. மனம் இறை ஒளியில் நிற்க, சிலை அர்த்தமில்லாது போயிற்று. அருகே உள்ள மக்களின் உள் முகம் தெரிய உடம்பு அர்த்தமில்லாது போயிற்று. மனம் கண் வழியே பார்க்கின்றதை விடுத்து உடம்பிலிருந்து வெளியேறி ஒரு சக்தி இன்னொரு சக்தியைக் கண்டு கலக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடு தவிக்கிற நிலை வந்தது. தன்னுள் இருக்கிற சக்தி வெளியேறி எதிரே இருக்கும் இன்னொரு சக்தியின் ஆனந்த கூத்தைப் பார்க்கப் பார்க்க பரவசமாகி அழுகை வந்தது. இந்தப் பார்வை வித்தியாசமே இறையருள் என்பது புரிந்தது. இதுவே உண்மை அருள் என்று தெரிந்தது.

எந்த முயற்சியும் இல்லாது எந்தத் தவத்திலும் ஈடுபடாது தடேரென்ற தன்னுள் வந்த இறைத்தன்மை கண்டு ஆச்சர்யம் வந்தது. நான் நல்லவ னில்லை. எந்நேரமும் இறைவனை நினைக்கிறவனில்லை. இறைவன் அடி யார்களைத் துதிக்கிறவனும் அல்ல. நான் கர்வி. பணத்தின் மீது ஆசை கொண்டவன். சொத்து சுகங்கள் வேண்டுமென்று விரும்புபவன். பிறரைச் சொற்களால் நோகடிப்பவன். கயமைத்தனமான எண்ணங்கள் என்னிடமி ருந்து போகவில்லை. இவையெல்லாம் என்னுள் இருக்கிற போதே சிவனே உன்னை எனக்கு மனமுவந்து காட்டுகிறாயே... நான் கேட்காமலேயே என் எதிரே வந்து நிற்கிறாயே... உன் திருக்கோயிலில் வந்து உள்ளே இருக்கிற மூர்த்தியை நீ என்று வணங்குகிற போது எனக்குள் ஏற்படுகிற ஆனந்த பரவசத்தை நான் என் சொல்வேன்.

''சிவனே, என்னுள் கீழான எண்ணங்களும் இருக்கின்றன. நீயும் இருக்கி றாய். ஆரூரா... என்னுள்ளிருக்கும் தீமைகளை விலக்கி என்னை ஆள் வாயா... இந்த ஆரூரன் என்னை ஆளுமைச் செய்வானா என்று கேட்டுச் சொல்லுங்கள்.''

பாட்டு பொங்கியது.

'அரையன் இருப்பர் ஆரூர். அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்.'

'இனியன் இருப்பது ஆரூரர். அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்.'

'ஆதி இருப்பது ஆரூர். அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்.'

எதிரே உள்ள இல்லத்தில் சுந்தரர் இளைப்பாற தனியே அமர்ந்திருந்த திருப்புன்கூர் இளைஞர்கள் சுந்தரர் பாடிய பதிகத்தைப் பலமுறை படித்து

விட்டு புரிந்து கொண்டார்கள்.

எந்த முயற்சியுமில்லாமல் சுந்தரருக்குள் இறையருள் அமர்ந்து விட்டது. இக வாழ்க்கையின் வாசனையும் இறை அருளின் வேகமும் எதிர் எதிரே தாக்கி சுந்தரர் துவண்டு போயிருப்பது தெரிந்தது.

இந்த சுந்தரரை வைத்து இறைமிகப் பெரிய விளையாட்டை இங்கே ஆளப்போகிறது. மிகப் பெரிய தபஸ்விளையும், பைராஹிகளையும் வீ துறந்த துறவிகளையும் கடும் ஒழுக்கமுள்ள சிவனடியார்களையும் விட்டு விட்டு இந்த சுந்தரரைத் தேர்ந்தெடுத்து மிகப் பெரிய பாடமொன்று இறை நடத்தப் போகிறது.

இந்தப் பாடம் கேட்க சுந்தரரை உன்னிப்பாய் கவனித்து வந்தால்தான் புரியும். விருப்போ வெறுப்போ இன்றி சுந்தரரை அணுகி நின்றால்தான் தெரியும். சரி... தவறு என்கிற விவாதமின்றி மௌனமாய் இடையறாது சுந்தரருக்கு அருகில் நிற்றலே இறைவனைப் புரிந்து கொள்ள எளிதான வழி.

சுந்தரர் மீது இறைவனுக்கு அதிக உரிமை இருக்கிறது. சுந்தரரும் இறைவன் மீது உரிமை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

கொடுத்த வரத்தை தலையில் வைத்துக் கொண்டாடாது எனக்குப் போய் இவ்வளவு பெரிய அருள் வாழ்க்கை ஏன் கொடுத்தீர் என்று எவராவது கேட்பார்களா?

சுந்தரர் கேட்பார். ஏனெனில்...

சுந்தரர் மனது வெள்ளையானது. எந்தத் தந்திரமும் இல்லாதது. அவர் கோபம் கூட சுத்தமானது. எதிர்பார்ப்புகள் இல்லாதது.

சுந்தரர் மிக அழகாக உடுத்தி கோயிலுக்குக் கிளம்ப திருப்புன்கூர் இளைஞர்களும் பின்தொடர்ந்தார்கள். மெல்லிய மழைத் தூறலும், தெற்கத்திய காற்றும் மாலைப் பூக்களின் நறுமணமும் எதிர்ப்பட்ட கறவைக் கூட்டமும் மாடங்களில் அமர்ந்திருக்கும் கிளிகளின் பேச்சுகளும் இன்று ஏதோ விசேஷம் என்று திரும்பத் திரும்ப உணர்த்தின. அவர்கள் ஆவலாய் கோவிலுக்குள் நுழைந்தார்கள்.

கோயில் கருவறை இன்னும் திறக்கவில்லை. உள்ளே அலங்காரம் இன்னும் நடந்து கொண்டிருந்தது. சுந்தரர் பட்டாடை உடுத்தி திருநீறு பூசி நெஞ்சிலே மணிமாலைகள் புரள மண்டபத்தில் தனியே அமர்ந்திருந்தார். தள்ளி மற்ற சீடர்கள் அமர்ந்திருந்தார்கள். புஷ்பங்களை மாலையாகக் கோர்த்து மூங்கில் தட்டுக்களில் அடுக்கி வைத்து இடுப்பிலும் தோளிலும் அவைகளைச் சுமந்தவாறே ஒரு பெண்கள் கூட்டம் அவர்களைத் தாண்டி கருவறை நோக்கிப் போயிற்று.

இறைவனுக்கென்றே தம் வாழ்க்கையை அர்ப்பணித்த தேவரடியார்கள்



பாடியும், ஆடியும் யாழ் வாசித்தும் இறைவன் சன்னதியை இனிமையாக்கும் கணிகைப் பெண்கள்.

கண்களை இலக்கின்றி நிறுத்தி இறைவனைத் தன்னுள் உணர்ந்து கொண்டிருந்த சுந்தரர் மெல்ல விதிர்த்து பார்வையைக் கூர்மையாக்கி நடுவே போன பெண்ணை உற்றுப் பார்த்தார். யாரிவள் என்று புருவம் தூக்கினார்.

திருப்புன்கூர் இளைஞர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

## 5

நெஞ்சைத் தொட்டுக் கவர்ந்தது எது? அழகா... இல்லை வேறேதுனுமா? பார்வையா இல்லை... சிரிப்பா...

அந்தப் பெண்ணின் முகம் முழுவதும் ஒரு தெளிவு இருந்தது. கண்களிலிருந்து சிந்திய பார்வையில் ஒரு நயம் இருந்தது. கடந்து போன போது யாரோ மிகவும் தெரிந்தவர்கள் என்பதாய்ப்பட்டது. கடந்து போன பத்து பேரில் அந்தப் பெண் மீதே பார்வை நின்றது. எல்லோரும் அழகிகள்தான். எல்லோரும் பதியிலார் எனப்படும் தாசிகள்தான். அந்தப் பெண்ணையே கண் தொடர்ந்தது. கண் பார்வையிலிருந்து திரும்பி அந்தப் பெண் மறைய மனம் தொடர்ந்தது.

அசைந்து அசைந்து போனதும் அசையாமல் பார்த்ததும் நினைவில் தங்கி விட்டன. யாரது? யாரது..? இடைவிடாது கேள்வி வந்தது. பேரென்ன? ஊரேது? வாழும் இடம் எது? என்று தொடர்ந்தது.

வேண்டாம். கேட்டால் சிரிப்பாகும் என்று மறக்க முயல மறுபடி அந்த முகமே சிரித்தது. கருவறை எதிரே போய் நின்று தியாகேசரைப் போய்ப் பார்த்து கை கூப்பி தொழ உள்ளே அமர்ந்து அமைதியாகி ஆனந்தமாகும் மனம் இப்போது விசிக்கத் துவங்கியது. அவர்கள் மலர்களைக் கொடுத்துவிட்டு கருவறையைச் சுற்றி வர எல்லா புலன்களும் அந்தப் பெண் மீதே இருந்தன.

இதென்ன வேதனை... சுந்தரர் மிரண்டார். இறைவனைப் பாடுவதே பணி என்று இருக்கிற போது பெண் வாசனை எதற்காக... இது சரியா? ஊர் சிரிக்காதா? தாசிப் பெண்ணைப் பார்த்து மயங்கியவர் எப்படி சிவபெருமானுக்கு தொண்டராவார் என்று கேள்வி வராதா?

கருவறையைச் சுற்றி வந்த பரவைக்கும் கால் தரையில் பதிவதே தெரியவில்லை. சட்டென்று நடை வேறானது போல் ஒரு மிரட்சி தோன்றியது. உடம்பு எடையற்றது போல் ஒரு எண்ணம் வந்தது. எல்லோரும் தன்னையே கவனிப்பது போல் தோன்றியது. தன் கவனம் முழுவதும் மண்டபத்தில் உள்ள மனிதரிடம் விட்டுவிட்டு வந்தது போல் ஒரு நிலை ஏற்பட்டது. இதற்கு முன் எங்கேயாவது பார்த்திருக்கிறோமா அவரை என்கிற எண்ணம் வந்தது. சுற்றி கருவறை. வாசலுக்கு வந்த போது அவர்

அவளையே எதிர்பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. தாண்டிய போது உடம்பு நடுங்கியது.

"யாரது?" பரவை தோழியைக் கேட்டாள்.

"எது யார்?" தோழி பதிலுக்குக் கேட்டாள்.

"வழியில் நின்றவர் யார்?"

"வழியில் பல பேர் நின்றார்கள்."

"நம்மையே பார்த்துக் கொண்டிருந்தாரே..."

"எல்லோரும் நம்மைத்தான் பார்த்தார்கள். நாம் போகும் போது வேறு யாரைப் பார்ப்பார்கள்?" தோழி மறுபடிச் சிரித்தாள்.

"இல்லை. மிக அழகாக இருந்தார்."

"அவரா? சுந்தரர். இறை தரிசனம் பெற்றவர். பல தலங்களில் பல பதிகங்கள் பாடி இங்கு வந்தும் பாடியிருக்கிறார். ஊர் அவரை எல்லாம் அறிந்தவர் என்று கொண்டாடுகிறது. அவரோ தனக்கு ஒன்றும் தெரியாது என்று பாடல் பாடுகிறார். ஊர் அவர் காலில் விழுகிறது. அவரோ.. தான் யாருக்கும் நல்லவனில்லை என்று பதிகம் பாடுகிறார். ஆனால் ஒன்று பரவை, சடை முடியும் சுடுகாட்டுச் சாம்பலும் ருத்ராட்ச மாலைகளே மேலங்கியாகவும் இடுப்பில் கோவணமும் தரித்து உரக்க இறைவன் அடியார்கள் என்கிற நிலை போய் பட்டாடையும், தங்கச் சங்கிலியும், நெஞ்சு நிறைய சந்தனமும் எண்ணை பூசி வாரின தலையும் இனிமையான குரலில் பேச்சும் பாட்டுமாய் ஒரு சிவனடியாரைப் பார்க்க சந்தோஷமாய் இருக்கிறது. கடவுள் தெரிய காவி உடை என்பது பொய்யாகி விட்டது. காவி உடை அணியாதவருக்கும் கடவுள் காட்சி கிடைக்கக் கூடும் என்பபது உறுதியாகி விட்டது. இவரைச் சுற்றி பல ஊர் இளைஞர்கள் வலம் வருகிறார்கள். மெல்ல மெல்ல மிகப் பெரிய தொண்டர் படை இவருக்கு வந்து விடும் என்று தோன்றுகிறது. முற்றும் துறந்ததாய் பொய் சொல்லாது, என்னால் துறக்க முடியவில்லையே என்று அவர் பதறுவது உண்மையாக இருக்கிறது. ஆமாம்... திருவாரூரில் ஏகப்பட்ட செல்வந்தர்கள் இருக்கே இவரைப் பற்றி ஏன் கேட்கிறாய்?"

"எங்கேயோ பார்த்தது போல் ஒரு நினைவு."

"எங்கே?"

"தெரியவில்லை."

"நேற்று நாமிருக்கும் வீதி வழியே ஊர்வலமாய் இவரை அழைத்துப் போனார்கள். அப்போது பார்த்திருப்பாய்."

"நேற்றல்ல, இன்றல்ல. வெகு நாள் முன்பு... வேறு ஏதோ ஒரு ஜென்மத்தில் ஒளி சூழ்ந்த இடத்தில் அவரைக் கண்டதாக நினைவு."

"ஒரு வேளை தேவலோகத்தில் பார்த்திருப்பாயோ... தேவலோகத்தில் பார்த்தவரைத்தான் மதவாசிரிய மண்டபத்தில் பார்த்தாயோ..."

"ஆமாம் என்றுதான் தோன்றுகிறது" பரவை நிதானமாகப் பேசினாள்.

தோழிப் பெண்கள் சட்டென்று நின்றார்கள். என்ன என்று கேட்டார்கள்.

"தேவலோகத்தில் சந்தித்தது போல் தான் தோன்றுகிறது."



"நல்ல வேளை அந்த சுந்தரர்தான் சிவபெருமானா என்று நான் கேட்டால் நீ ஆமாம் என்று சொல்லி உன்னை உமை என்றும் சொல்லி விடுவாய். எனவே நான் ஏதும் கேட்காமல் விடுகிறேன்."

"இல்லை. அவர் சிவனில்லை. நானும் உமை இல்லை. ஆனால்..." பரவை பேசாது நிறுத்திக் கொண்டாள்.

தோழிகள் அவளைத் தாண்டிப் போனார்கள். பரவை பின் தங்கி தயங்கி நடந்தாள். அவள் மனதில் சுந்தரர் முகம் தங்கி விட்டது.

சுந்தரர் மனம் பரவை மீதுதான் ஒன்றியது. இறை மீது ஒன்றவேயில்லை. மறுமுறை மறுமுறை பார்க்க இவள் என்னுடையவள் அல்லவோ என்று எண்ணியது. இவள் எனக்கு வேண்டுமே என்கிற தாபம் எழுந்தது. அந்தப் பெண்ணை முன்னே வைத்து இறையை நினைத்தார்.

இறையே... என் சிவனே... இந்தப் பெண் பரவை வேண்டும் என்கிற தாபம் எனக்குள் எழுந்து விட்டது. என் திருமணத்திலிருந்து என்னைத் தடுத்தாட்கொண்டு தனித்திரு என்பது போல் என்னைப் பல ஊர்களுக்கும் என்னை அழைத்தீர்கள். திருவாரூருக்கு வா என்றும் பணித்தீர்கள். என்னால் தனித்திருக்க இயலவில்லை. பரவை என்ன குலமானாலும் பரவாயில்லை. எனக்குத் துணையாக வேண்டும். எனக்குப் பரவையை மனைவியாக்க வேண்டும். இதை ஊரிடம் சொல்வதற்கு பதிலாய் உங்களிடம் சொல்கிறேன். நான் சுந்தரனுக்குத் தோழன் என்று சொன்னீர்கள், என் சிவனே. என் தாபத்தை என் சிநேகிதனிடம் சொல்லாது வேறு யாரிடம் சொல்வேன்.

பரவை கணிகை மகள். ஊர் என்ன சொல்கிறதோ அந்தக் கட்டளைப்படி வாழ்கிறவள். எனவே இந்தத் திருவாரூர் அன்பர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். எனக்குப் பரவையைத் திருமணம் செய்து கொடுக்கச் சொல்லுங்கள்."

உள்ளே நெஞ்சடியில் ஆழமாய் அமர்ந்து இறையை உணர்ந்து மனசுக்குள் கை கூப்ப இறைவன் முகம் தோன்றிச் சிரித்தது. அவ்விதமே செய்கிறேன் என்று தலையசைத்தது.

மறுபடியும் ஊரிலுள்ள எல்லார் கனவிலும் இறை உருவம் தோன்றியது.

ஊரிலுள்ளோர் கனவில் இறை உருவம் தோன்றுவதை தம் கனவில் திருப்புன்கூர் இளைஞர்கள் கண்டு கொண்டார்கள்.

பரவையாரை நமது தோழர் சுந்தரர் திருமணம் செய்து வையுங்கள் என்று கட்டளையிடுவதும் கேட்டார்கள். தமக்குத் தோன்றிய இக்கனவை சுந்தரருக்கும், பரவையாருக்கும் தோன்றுவதை உணர்ந்து கொண்டார்கள். திடுக்கிட்டு எழுந்து கொண்டார்கள். 'உனக்கும் அதே கனவா... உனக்கும் அதே கனவா..?' ஒருவரை ஒருவர் விசாரித்துக் கொண்டார்கள்.

அப்படியானால்... இறைவனுக்குத் தொண்டனாக இருக்க துறவும் தேவையில்லையோ... ஆசாரமும் குல ஒழுக்கமும் அவசியமில்லையோ...

அந்தணர் என்பதும் கணிகையர் என்பதும் அந்தணர் கணிகையை மணப்பதும் இறைவனுக்கு எதிரான விஷயமில்லையோ...

இறைவனை அறிய இறை தரிசனம் பெற என்ன தேவை?

இறையே கீழிறங்கி வந்து என்னை அறிந்து கொள் என்று காட்டினாலொழிய என்னைப் புரிந்து கொள்ள முடியாதா?

இறையே விரும்பி சுந்தரரை அணைத்துக் கொண்டதா? எது கேட்டாலும் வஞ்ச னையின்றி வாரி வழங்குகிறதா? என்ன அற்புதம் இது?

இது சுந்தரருக்கு மட்டும் நேர்ந்த விஷயமா? அல்லது எல்லோருக்கும் உண்டான மரபா?

குல ஒழுக்கம் முக்கியம் என்று ஒரு பக்கம் கூவிக்கொண்டேயிருக்க இவைகளை யெல்லாம் மீறி இங்கு ஒரு செயல் நடைபெறுகிறதே...

ஆமெனில் மரபான வாழ்க்கைக்கும் இறைவனுக்கும் சம்பந்தமேயில்லையோ...

வழிவழி வந்த மரபுகளை உடைத்தால்தான் இறை தரிசனம் கிடைக்கும் என்ப தும் பொய்யோ...

சுந்தரரைப் போல் மரபு... மரபற்றது என்ற எண்ணமேயில்லாத தனக்குப் பிடித்த பெண்ணை எப்படி வசப்படுத்தலாம் என்று தந்திரம் செய்யாது, எவரைக் கொண்டு இந்தக் காரியம் நடத்தலாம் என்று திட்டமிடாது, மனிதர்களை நம்பாது நேரே இறைவனிடம் எனக்கு இது வேண்டும் கொடு என்ற துணிச்சல்தான் முக்கியமோ

இந்தத் துணிச்சலுக்கு அடிப்படை திடமான இறை நம்பிக்கையோ...

இந்த நம்பிக்கைக்கு அடிப்படை வெள்ளை மனதோ...

சுந்தரர் கல்மிஷமா... வெள்ளையா..?

ஊர் இதை எதிர்க்குமா? ஆதரிக்குமா? சுந்தரர் போல எனக்கும் இந்தப் பெண் ணைக் கொடு. இன்னின்னார் பெண்ணைத் திருமணம் செய்து கொடு என்று கேட்டால் இறை என்ன செய்யும்? கொடுக்குமா..? கோபிக்குமா?

கொடு என்று கேட்பதற்கு சுந்தரருக்கு தைரியம் இருந்தது. கேட்கின்ற திறனும் இருந்தது.

மனதை ஆடாமல் நிறுத்தி இறைவனை உள்ளுக்குள் அடைக்க சுந்தரருக்குத் தெரிந்திருக்கிறது. மற்றவருக்குத் தெரியவில்லை.

இது பயிற்சியால் வந்ததல்ல. இப்படி அழைக்கும் விதமும் இறைவன் கொடுத்த அருள். பூர்வஜென்ம புண்ணியம். எப்போதோ இறைவனுக்கு பிரியமாக இருந்த அதை இங்கே இப்படி அனுபவிக்க வேண்டுமென்கிற விதி. இறை விருப்பம் கட்டளை.

பெண்ணை பரக்கப் பார்த்த சுந்தரரே சட்டென்று மனம் குவித்து இறை நினைப் பில் மூழ்கினார்.

அவரால் இதுவும் முடிகிறது. அதுவும் முடிகிறது.

நாளை ஊர் என்ன முடிவு செய்யும்?

விடிந்த பின்தான் தெரியும்.

ஆனால் விடியும் முன்பே ஊர் வாசலுக்கு வந்து விட்டது. கனவு கண்ட கையோடு சுந்தரரைப் பார்க்க விளக்கும், தீப்பந்தமும் எடுத்துக் கொண்டு ஊர் வந்து விட்டது. பத்து தீவட்டியும், இருபது விளக்குகளும் ஊர்வலமாய் சுந்தரர் நோக்கி



போக, வெளிச்சம் இருக்கும் தைரியத்தில் மற்றவரும் சேர்ந்து கொண்டார்கள். கனவில் கண்ட இறைவன் உத்தரவு என்று பரஸ்பரம் பேசிக் கொண்டார்கள். சுந்தரர் வீட்டுக் கதவைத் தட்டினார்கள்.

அமைதியாய் நடுக்கூடத்தில் சம்மணமிட்டு அமர்ந்திருந்த சுந்தரரை நோக்கி கை கூப்பினார்கள்.

''பரவை என்ற கன்னிகையை உங்களுக்குத் திருமணம் செய்து வைக்க இறை வன் உத்தரவு. உங்களுக்கு இதில் விருப்பமோ?'' குனிந்து கேட்டார்கள்.

''மிகுந்த விருப்பம். இதை இறைவனிடம் சொல்ல... இறை உங்களுக்குச் சொல் லியிருக்கிறது. பரவைக்கு இது விருப்பமா என்று கேட்டு வந்தால் நலமாக இருக் கும்.''

ஊரில் பாதி பரவையிடம் ஓடியது. அங்கும் கை கூப்பி கேட்டது.

''சுந்தரர் என்பாருக்கு உங்களைத் திருமணம் செய்விக்க இறைவனது உத்தரவு. இரவு எங்கள் கனவில் தோன்றி இறைவன் எங்களிடம் நேரடியாய் பேசி...'' மூச்சிறைக்க ஊர் பேசிய போது பரவை கை கூப்பினார்.

''என் கனவிலும் சிவபெருமான் வந்தார். என் தோழன் சுந்தரனை மணந்து கொள்' என்று கட்டளையிட்டார். இறைவனே கட்டளையிட்ட பிறகு அதுவும் எனக்கு மட்டுமல்லாது ஊர் முழுவதும் தெரியப்படுத்தியிருக்கிற போது மறுக்க என்ன இருக்கிது. இது விட்ட குறை... தொட்ட குறை. எப்போது தொட்டேன், எப்போது விட்டேன் என்று தான் தெரியவில்லை. இறைவன் திருவுளப்படி நடக்கட் டும்.''

மற்ற நேரத்தில் மரபு பேசும். ஊர் சத்தமே போடாது திருமணச் செயலில் இறங்கியது. விடிந்த முதல் முகூர்த்தத்தில் சுந்தரரும் பரவையும் திருவாரூர் தியாகே சர் சன்னதிக்கு முன் மாலை மாற்றிக் கொண்டார்கள்.

பரவை சுந்தரருக்கு மனைவியானாள்.

திருப்புன்கூர் இளைஞர்களில் பாதி பேர் ஆழ்ந்த யோசனைக்கு பேர் ஒயர்கோன் கலிக்காமரை சந்திக்க வேண்டுமென்று கிளம்பினார்கள். கலிக்காமரிடம் போய் நடந்தது முழுவதும் தெரிவித்தார்கள்.

கலிக்காமர் கோபமானார்.

# 6

"ஒழுக்கம் என்பது வன்முறையல்ல இளைஞர்களே... அது தேவையில்லாத விஷயமுமில்லை. ஒழுக்கமாயிருப்பது அவசியமா? என்று ஒருவனுக்கு கேள்வி வரவே கூடாது. வருமெனில் அவன் வாழ்க்கை அழியத் துவங்கி விட்டது என்று அர்த்தம்" ஏயர்கோன் கலிக்காமர் கண்சிவக்க சீறினார்.

சுந்தரருக்கு அருகே இருந்து அவருக்கு நடந்தவைகளைப் பார்த்த திருப்புன்கூர் இளைஞர்கள் நடுங்கிக் கைகட்டி அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

"என்ன திமிர் சுந்தரனுக்கு? அந்தணன் தாசிக்கு அகமுடையான் ஆவதா! இது அந்தணன் அந்தணனுக்கு அடிமைப்படுவதை விட கேவமில்லையா? சரி, நீ எக்கேடும் கெட்டுப் போ. இதற்கு இறைவன் பெயரை எதற்கு உபயோகிக்கிறாய்? தாசியைத் திருமணம் செய்து கொடு என்று சிவனிடமே கேட்பதா? நான் போய் கேட்க வெட்கமாக இருக்கிறது. நீ போய் ஊரார் கனவில் என் விருப்பத்தைச் சொல்... அவளை சுந்தரருக்குத் திருமணம் செய்து வையுங்கள் என்று கட்டளையிடு. அப்படியே அந்த தாசி கனவிலும் தோன்றி அவளையும் சம்மதிக்க வை. என்ன இது? என்ன இது..? ஒரு வரைமுறை இல்லையா?" ஏயர்கோன் கலிக்காமர் அலைந்து அலைந்து கோபப்பட்டார்.

"என் சிவனே... என் சிவனே..." என்று துக்கத்தில் பெருமூச்சு விட்டார்.

"இந்தச் சுந்தரனைப் பார்த்து நீங்களெல்லாம் கெட்டுப் போவீர்களய்யா... பெண் கொடு... பொருள் கொடு... அரசப் பதவி கொடு... அவ்வப்போது பாடும் திறன் கொடு என்று கேட்க ஆரம்பித்து விடுவீர்கள். முறையற்ற பிரார்த்தனைகளைத் துவங்கி விடுவீர்கள். போகங்களைக் கேட்கவா இறை உணர்வு. என்ன அபத்தம் இது.... என்ன அடாத செயல். எவ்வளவு கீழ்த்தரமான தன்மை."

"சுந்தரர்தான் கேட்டார். நம் சிவனார் ஏன் தரவேண்டும் என்று உங்களுக்குக் கேள்வி வரலாம்."

"இறை உணர்வு அல்லது இறைஅருள் இப்போது நாம் செய்யும் தவத்தினால் மட்டுமல்ல, பூர்வஜென்மத்தில் தவம் செய்து வரங்கள் பெறும் முன்பே உடல் ...ருத்தவன் உண்டு. அந்தத் தவம் பூர்த்தியாக அவன் மறுபடியும் உடல் எடுத்தாக வேண்டும். அந்த சுந்தரன் பூர்த்தியாகாத தவம் செய்து பூர்த்தியாக பூமியில் பிறந்தவன். அதனால்தான் பிறக்கும் போதே சகல சௌபாக்கியங்களோடும் பிறந்தவர். வளர்ந்து வாலிபனானதும் இறை தரிசனம் கொண்டவர். இதெல்லாம் பூர்வ ஜென்மப் பயன்.



ஆனால், அமிர்தக் கலசம் கிடைத்தால் பூனை உருட்டி தரையில் சிந்தி, தரையில் சிந்தியதை நக்கித்தான் குடிக்கும். இந்த சுந்தரன் பூனை போல் நடந்து கொள்கிறான். பெண் பூனையைக் கண்டதும் ஆண் பூனை பாயாது. பின் தொடர்ந்து ஓடாது. பெண் பூனையை மதித்து வால் திருப்பி இடைவிடாது கத்தும். இரவில் அது போடும் கூச்சல் தூங்காமல் ஏதேனும் எச்சல் உணவை வீட்டோர்கள் கூரையில் எறிவார்கள். இதுவும் அப்படித்தான் நடந்திருக்கிறது.

இறையருள் கிடைப்பது பெரிதில்லை இளைஞர்களே. முனைப்பிருப்பின் தவம் எல்லோரும் செய்யலாம். எங்கும் பிரகாசமாய் இருப்பதே நம்முள்ளும் பிரகாசமாக இருக்கிறது. வெளியே உள்ளது உள்ளேயும் இருக்கிறது. உள்ளேயும், வெளியேயும் ஒன்றானால் பிறவி உண்டா? பயமும் நோயும் கவலையும் மயக்கமும் உள்ள இந்தப் பிறவி தேவை தானா..? இடையறாது ஆனந்தத்தோடு இருப்பது சுகமல்லவா?

இளைஞர்களே... செயல்களில் ஈடுபட ஈடுபட அதனால் உண்டான பலன்கள் பெருகுகின்றன. திருமணம் என்ற ஒரு செயலில் ஈடுபட்டால் பலவிதமான பந்தங்கள் அதிகரிக்கின்றன. பொறுப்புகள் கூடுகின்றன. பொறுப்புகள் கூட செயல்கள் அதிகரிக்கின்றன. அதனால் ஏற்படும் விளைவுகளை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. அந்த அனுபவத்தின் போது இறை மீது அக்கறை குறைகிறது. இறை உணர்விலிருந்து வெகுதூரம் நகர்ந்து விட நேரிடுகிறது. பொறுப்புகள் ஏற கோபமும், ஆத்திரமும், பொய்யும், புனைச்சுருட்டும், சூதும், திருட்டும் இன்னும் பல தெய்வக் குற்றங்களும் ஏற்பட்டு விடுகின்றன.

செயல்களைத் துறக்கவே திருமண பந்தங்கள் தவிர்க்கப்பட்டன.

இளைஞர்களே, திருமணம் வேண்டாம் என்று தடுக்கப்பட்ட சுந்தரன் அதாவது வேண்டாம் என்று இறைவனால் தடுக்கப்பட்ட சுந்தரன் மறுபடி திருமணம் செய்து கொள்வது நியாயமா?

பொன்னும், மணியும் கொட்டிக் கிடக்கிற பிரபுவினிடத்திலல் போய் எனக்குக் குடிக்கக் கொஞ்சம் கூழ் கொடுங்கள் என்று கேட்பார்களா? அந்த ஆலால சுந்தரம் கேட்டிருக்கிறான்.

எனக்கும் மனைவி உண்டு இளைஞர்களே. ஆனால் இறைவனைப் பற்றி அறியாத பருவத்தில் நடந்த திருமணம் அது. அறிந்த பிறகு அவள் எனக்கு மனைவியுமல்லள். நான் அவளுக்குப் புருஷனுமல்லன். ஊர்ப் பார்வைக்குக் கணவன், மனைவியாக இருந்தாலும் உள்ளுக்குள் தவசிகளாயிருக்கிறோம். ஆண், பெண் பேதமற்ற குழந்தைகளாயிருக்கிறோம். அருகருகே வாழ்ந்தாலும் வெகு தூரம் விலகியிருக்கிறோம். ஒரே வீட்டில் இருந்தாலும் தனித்தனியாக இருக்கிறோம். அவள் ஒரு தபஸ்வி. நான் ஒரு தபஸ்வி. அவ்வளவே தொடர்பு. இதனால் எங்களுக்குள் இறை உணர்வு அதிகரித்திருக்கிறது. இனி பிறவியே இல்லை என்று புரிந்து விட்டது. இந்த ஒழுக்கம்தான் வாழ்க்கை என்பது என் முடிவு. உங்கள்

வாழ்க்கையைத் தீர்மானம் செய்ய வேண்டியது நீங்களே. சுந்தரர் முக்கியமெனில் அவரையே குருவாக ஏற்று அவரைப் போலவே நீங்களும் பரத்தையை மனைவியாகப் பெற தவம் செய்யுங்கள். அதற்காக இரவினில் குடித்து பதிகமும் பாடுங்கள். இது கலிகாலம். வாழ்க்கை கண்மூடித்தனமாகத்தான் இருக்கும்.

ஆனால் ஒன்று அந்த சுந்தரனிடம் சொல்லுங்கள். என் சிவன் பெயர் சொல்லி ஊர் மக்களை மயக்கி ஒரு பரத்தையைத் திருமணம் செய்தது கூட மன்னிக்கப்படலாம். ஆனால், எங்கள் சிவனை ஒரு பரத்தையே வேண்டி தூது அனுப்பினேன் என்று சொல்கிறானே அந்த சுந்தரன்... அதை இந்த கலிக்காமனால் பொறுத்துக் கொள்ள முடியாது என்று சொல்லுங்கள். அது சிவன் செய்து வைத்த திருமணம் என்று அவன் இன்னொரு முறை சொன்னால் இந்தக்கலிக்காமன் சும்மா இருக்க மாட்டான் என்று சொல்லுங்கள்.

அப்படி சொல்லுகின்ற சுந்தரனை எப்போதேனும், எங்கேனும் இந்தக் கலிக்காமன் சந்தித்தால் என்ன நடக்கும் என்று தெரியாது என்று சொல்லுங்கள்.''

''தான் இழிவுபடுவதோடு நிறுத்தாது தன் தெய்வத்தையும் இழிவுபடுத்துகிறார்களே பாவிகள். எங்கள் சிவன் தமிழர் சொத்து அந்த அந்தணனை அமைதியாக இருக்கச் சொல். சுந்தரனைச் சந்திக்க நேர்ந்தால் இங்கு நான் கூறியதனைத்தையும் ஒரு வரி விடாது சொல்.''

சொல்லிவிட்டு கலிக்காமர் இருமினார். அப்படி இருமிய போது அவருக்கு நடு வயிறு வலித்தது. வீட்டின் முன்பக்கத்திலிருந்து வேகமாய் நடந்து தனியே போய் அமர்ந்து கொண்டார். வயிற்று வலி மெல்ல அதிகரிப்பது போல் தெரிந்தது.

அந்தத் திருப்புன்கூர் இளைஞர்கள் மறுபடியும் சுந்தரரிடம் போக வேண்டாம் என்று தீர்மானித்தார்கள். அதில் ஒருவர் மட்டும் திருவாரூர் சென்று, அங்கு சுந்தருக்கு அருகே இருக்கும் மற்ற திருப்புன்கூர் இளைஞர்களைத் திரும்ப திருப்புன்கூருக்கே அழைத்து வந்துவிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

அந்த இளைஞன் திருவாரூர் நோக்கி பயணப்பட்டான். அங்கே அவனுக்கு வேறு ஒரு அதிசயக் கதை காத்துக் கொண்டிருந்தது.

விறன்மிண்ட நாயனார் என்பது அவருக்குப் பெயர். திருவாரூரே சொந்த ஊர். திருவாரூர் தியாகேசப் பெருமான் கோயிலிலே குடியிருப்பு, எந்நேரமும் சிவனையே நினைத்துக் கொண்டிருத்தல் வாழ்க்கை. சிவனை நேரடியாய் நினைப்பவர்களை விட, சிவனை நினைத்து வாழ்ந்தவர்களை நினைப்பது இன்னும் சுகமானது. தெய்வத்தைப் போற்றுவதை விட, தெய்வத்தின் அடியார்களைப் போற்றுவது சிறப்பு. வண்ணாரும், குயவரும், வேளாளரும், பாணரும், போர் செய்யும் முதலிகளும் சிவபூஜை செய்யும் மரபினரும், வேதமும் தெரிந்த அந்தணக் குலத்தோரும், வேடராயிருந்தோரும், சிவனை உணர்ந்து வாழ்க்கையை ஜெயித்திருக்கிறார்கள்.

திருவாரூர் கோயில் தேவாசிரிய மண்டபத்தில் அமர்ந்து அந்த மண்டபம் சுற்றி எழுப்பியிருக்கிற சிவனடியார்களின் சிலைகளை உற்றுப் பார்த்து கைகூப்பி



வணங்கி கண்ணீர் மல்க அவர்களின் கதைகளை நினைத்துக் கொள்வது விறன்மிண்ட நாயனாரின் வழக்கம்.

ஏடறிவும் பாணரையும் ஆட்கொண்ட சிவபெருமான் வீர சைவ மரபிலே வந்த சுந்தரர் என்பாருக்கு காட்சி தந்தானாம். கணிகை குலத்துப் பெண் வேண்டுமென்று கேட்டால் அதையும் தந்தானாம். எச்சலில் ஸ்நானம் செய்து மாமிசத்தை அமுதென்று கொண்ட சிவனல்லவா தியாகேசன். சிவனடியார் கேட்டால் கணிகைக்காய் தூது போகாமல் இருப்பானா? எங்கள் சிவன் எதுவும் தரும். கேட்கத் தெரிந்திருக்க வேண்டும். சுந்தரனுக்குக் கேட்கத் தெரிந்திருக்கிறது. இறைவனோடு பேசத் தெரிந்திருக்கிறது. பேசத் தெரிந்தவனுக்குக் கேட்கத் தெரியாதா? அவனருளால் தானே அவனை அடைய முடியும். பேசச் சொல்லிக் கொடுத்த கடவுள் கேட்க சொல்லித் தராமலிருப்பாரா? எல்லாம் சிவன் என்று தெரிந்தால் அந்தணன் என்ன..? கணிகை என்ன? ஆண் என்ன..? பெண் என்ன..? சரி என்ன..? தவறென்ன..? உயர்வென்ன..? தாழ்வென்ன? சரியென்பதும் ஒரு சலனம். தவறென்பதும் ஒரு சலனம். சலனமற்று இருப்பதே பிறப்பறுக்கும் தந்திரம்.

முன் ஜென்மத்தில் அந்த கணிகைக்கு சுந்தரன் கடன்பட்டிருப்பார். அல்லது அந்தக் கணிகை சுந்தரனுக்குக் கடன்பட்டிருப்பாள். பரஸ்பரம் தீர்த்துக் கொள்கிறார்களோ... இதனால் ஒன்றும் கெட்டுப் போய்விடப் போவதில்லை.

சுந்தரருக்குக் கணிகையை சிவன் திருமணம் செய்து வைத்தார் என்பதால் எல்லோருக்கும் இது நடக்குமா? எனக்கும் ஒரு கணிகை கொடு என்று ஊர் கேட்கத் துவங்கி விடுமா? எல்லோருக்கும் கணிகை முக்கியமாகி விடுமா? ஆகாது. சுந்தரருக்கு பரவை தேவைப்பட்டது. கேட்டார். கொடுக்கப்பட்டது. அவரவருக்கு உண்டான தேவையைத்தான் கேட்பார்கள். தேவையைப் பற்றிய தெளிவு இருந்தால் தான் கேட்பதற்கான உறுதியும் இருக்கும். கேட்பதில் உறுதி இருந்தால் வேண்டுதலில் தீவிரம் இருக்கும். இந்த சுந்தரரால் ஊர் மரபு கெட்டு விடுமோ என்பது தவறான பேச்சு. மரபு என்கிற நியதி விழும். எழும். இறை அறிதலுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

எச்சிலை சிவன் தலையில் துப்பிய வேடனை விடவா இங்கு இழுக்கு நேர்ந்து விட்டது. அந்த வேடன் மீது சிவனுக்கு எத்தனை பிரியம். அந்த வேடனுக்கு என் சிவன் மீது எத்தனை காதல். சிவன் வேட எச்சிலைத் தலையில் தாங்கியதற்கு ஒரு காரணமிருக்கிறது. அவன் எச்சில் உமிழ்ந்ததற்குப் பிறகு அவனுக்கு ஒரு சோதனை வந்திருக்கிறது. அந்த சோதனையில் அவன் ஜெயித்திருக்கிறான். சிவலிங்கத்தின் கண்ணில் ரத்தம் பார்த்ததும் தன் கண்ணைப் பிடுங்கிப் பொருத்தியிருக்கிறான். அவன் என்ன பதிகம் பாடினானா... அர்ச்சனை செய்தானா...? சிவன் கண்ணும் தன் கண்ணும் ஒன்றாக உணர்ந்தவன். தன்னையே சிவனுக்குத் தந்தவன். அதனால் தான் இங்கே சிவனடியாராக சிலையாக அமர்ந்திருக்கிறான். சுந்தரனுக்கு சிவன் வரம் கொடுத்திருக்கிறார். தனக்கு என்ன வேண்டுமோ அதை சுந்தரனிடம் கேட்பார். நான், அந்த வேடன், சுந்தரன் யாவரும் கருவிகள். இறைவனுக்குத் தெரியும்

நம்மை என்ன செய்ய வேண்டுமென்று.

அதோ சுந்தரன் வருகிறான். இறைவனைக் கேட்டு பரவையை மணந்த பெருமிதம் முகத்தில் தெரிகிறது. முகம் பூரண சந்திரனாய் ஜொலிக்கிறது. அவ்வப்போது ஆழ்ந்த இறைக்கு அருகே போவதால் கண்நுனியில் காது நோக்கி கோடு போகிறது. கன்னங்களில் லேசான செழுமை இருக்கிறது. கலக்கமில்லாத கண்களில் சிகப்பு ஏறியிருக்கிறது. செவ்வரியோடிய கண்கள் என்று பார்த்தவுடனேயே தெரிகிறது. உதடுகளில் ஒரு அழுத்தம் இருக்கிறது. பார்வை மிதந்து மிதந்து எல்லா திசைகளையும் புதிதாய் பார்ப்பது போல் பார்க்கிறது. கைகள் எதையும் பற்றிக் கொள்ளாமல் வெறுமனே தொங்குகிறது. நடையில் ஒரு ஆசுவாசம் மிகுந்த அகலம் இருக்கிறது. அது அலட்சியம் போல் மற்றவருக்குப் படும். அது எல்லாவற்றுக்கும் அன்னியமாகி விட்டதால் ஏற்பட்ட ஒரு நிலை. சுந்தரன் கண்கள்தான் அற்புதம். அவனுக்குக் கிடைத்த இறையருள் அவன் கண்களில்தான் தெரிகிறது.

சுந்தரா... வா... உன்னைப் போன்ற இறையருள் பெற்றவர்கள் இவர்கள். இவர்களைப் பார். கையெடுத்துக் கும்பிடு. இவர் சரிதம் கேள். இவர் புகழ் பாடு. விறன்மிண்ட நாயனார் சிவனடியார் சிலைகளைப் பார்த்துவிட்டு சுந்தரரையும் பார்த்து தன் மனதுக்குள் பேசினார். சுந்தரர் இந்த சிவனடியார் சிலைகளைப் பார்த்து கை கூப்பினால் இவர்களைப் பற்றியும் பதிகம் பாடச் சொல்லலாமே என்று நினைத்தார்.

சுந்தரர் சிவனடியார் சிலைகளையும் பார்க்கவில்லை. விறண்மிண்ட நாயனார் எழுந்து நிற்பதையும் கவனிக்கவில்லை.

பரவைக் கொடுத்த சுகத்தால் உடம்பு நிறைந்திருந்தது. உடம்பு அனுபவித்த சுகத்தால் மனசு நிறைந்திருந்தது. மனசு நிறைந்திருந்த நிலையால் இறை மீது அளவில்லாத அன்பு தோன்றியது. சந்தோஷம் பொங்கும் போது, தான் என்ற எண்ணம் கொள்ளாது இறைவனை நினைப்பவர்கள் வெகு சிலரே. அந்த நினைப்பே அவர்களை இறைவனிடம் இன்னும் வேகமாய் அருகே இட்டுச் செல்கிறது.

சுந்தரர் சுகம் பொருட்டு இறைவனை நினைப்பவர் அல்லர். சுகத்தின் போதும் நினைப்பவர். இந்த இரண்டுக்கும் மிகப்பெரிய வித்தியாசம் உண்டு. தன்னை மறந்து சுந்தரர் போய்க் கொண்டிருந்த போது 'ஹா' என்ற சத்தம் பின்னால் கேட்டது.

சுந்தரர் திரும்பிப் பார்த்தார்.

விறன்மிண்டர் அங்கே கைகொட்டி சிரித்தார்.

"சுந்தரருக்கு சிவனடியார் மீதும் மரியாதை இல்லை. சிவன் மீதும் மரியாதை இல்லை" உரக்கக் கூறினார்.

"சிவனடியார் மீது மரியாதை இல்லையா? சுந்தரர் திகைத்தார். சிவன் மீது மரியாதை இல்லையா? எதனால் இவர் இப்படிச் சொல்கிறார்?"



சுந்தரரும், விறன்மிண்டரும் நேருக்கு நேர் பார்த்துக் கொண்டார்கள். கூர்மையாய் ஒருவரை ஒருவர் கவனித்தார்கள். அவர்கள் கண்கள் பேசாது பேசிக் கொண்டன.

என் மீது ஏதும் தவறுண்டோ பெரியவரே..?

உண்டு சுந்தரா.

சொன்னால் திருத்திக் கொள்ள மாட்டேனா?

சிவனை விட சிவனடியார் முக்கியம் என்று தெரியாதா உமக்கு?

ஊர்க்கோயில் இறைவனை விட, உன்னை மக்கள் அதிகம் நேசிக்கிறார்கள் என்று தெரியாதா உனக்கு? இங்குள்ள சிவனடியார்களைப் பாராது போகிறாயே? நீயே நின்று கும்பிடவில்லையெனில் ஊர் கும்பிடுமா? இறை அடியார்கள் இல்லாது இறைவன் உண்டோ? கும்பிடுவோர் இல்லாதது தெய்வம் தானோ? இறை காதலில் விருப்பமுடையது. தன்னைக் காதலிப்பவர்கள் மீது பிரேமை உடையது. இறையைக் காதலித்த சிவனடியார்களை நாம் காதலிக்க வேண்டாமா? இவர்கள் மகிமையை உன் வாயால் ஊருக்குச் சொல்ல வேண்டாமா? இறையில் கலந்தவர்கள் இவர்கள் எனில் இவர்கள் வேறு இறைவன் வேறோ..? இவர்களைப் பற்றியும் பாடு சுந்தரா.... இவர்களெல்லாம் யார்? இவர்கள் ஏன் கோவிலில் இருக்கிறார்கள்? இவர்கள் கதை என்ன? என்று அடுத்த தலைமுறை கேட்டால் தெரியாது என்று சொல்லலாகுமா? இவர்களை சிவத்தொண்டர்கள் என்று நாம் சொல்ல வேண்டாமா? தொண்டு என்றால் என்னவென்று எதிர்காலம் கேட்குமே? அதுவும் சிவனுக்குத் தொண்டு செய்தல் என்றால் என்ன என்று எதிர்காலம் கேட்குமே. அதற்கு நாம் இப்போதே பதில் தயார் செய்ய வேண்டாமா? இவர்கள் பெயராவது முறையாய் ஊருக்குத் தெரிய வேண்டும் சுந்தரா. எனவே, இவர்களை வரிசைப்படுத்தி ஒரு "பதிகம் எழுது. இவர் கதையை தலைமுறை தலைமுறையாய் ஜனங்கள் உணர்ந்து கொள்வார்கள். ஒரு தலைமுறையில் இதைக் காவியமாகச் செய்யவும் ஒருவன் வருவான். அவனுக்கு உதவியாய் இத்தொண்டர் பற்றி புகழ்பாடு. நீ பாடினால் கேட்பார்கள். உனக்குப் பாடவும் தெரியும், சுந்தரன் பாடியிருக்கிறானே என்று உன் பாட்டை மனனம் செய்வார்கள். பெயர்களை அறிந்து கொள்வார்கள். பெயர் தெரிந்து கொண்டதாலேயே கதையும் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள்.

இருவரும் பேசிக் கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் மனம் பேசிக் கொண்டது.

"இங்கு வா சுந்தரா..? இவர் திருநீலகண்டர். இவர் திருஞானசம்பந்தர். இவர் அப்பூதியடிகள். இவர் இயற்பகை. இவர் கண்ணப்பர். இவர் காரைக்கால் அம்மையார் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதை. ஒவ்வொரு சரித்திரம். இறை மீது எப்படி அன்பு செலுத்துவது என்பதற்கு எடுத்துக்காட்டு. மனிதனுக்கும், இறைக்கும் உள்ள நெருக்கத்தை பல்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்டும் வாழ்க்கைச் சரித்திரம். இறைவன் அடியார்களுக்கு தொண்டு செய்வதே இறைவனுக்கு செய்யும்

தொண்டு என்றுதெரிந்த நிலை. இல்லையென்றாது வாரி வழங்குவதே இயல்பாகக் கொண்ட குணம். தன்னிடமிருப்பது எல்லாவற்றையுமே இறைவனுக்கென்று அள்ளித் தருகின்ற நேர்மை. தன்னை மறந்த தன்மை. தானற்ற வகை. இதை எழுத வேண்டாமா சுந்தரா? உன்னை எழுத வேண்டும் என்று நான் கேட்க நினைத்தால் நீ கும்பிடாமல் போகிறாயே...?

உனக்கு இறைவன் சகல சுகங்களும் கொடுத்தது எழுதுவதற்காகவே. உன்னை அவன் தன் தோழனாக்கி நீ கூப்பிட்ட போதெல்லாம் அவன் உன் எதிரே வந்து நின்றது நீ அவன் புகழ் பாடவே. இறைவனைப் பாடுதலும் இறைவன் அடியார்களைப் பாடுதலும் ஒன்றே. இந்த அடியார்களைப் பற்றிப் பாடு. பாடட்டுமா என்று இறைவனிடம் போய்க் கேளு.''

அவர்கள் பேசாமல் பேசிக் கொண்டார்கள். உள்ளுணர்வால் பார்த்துக் கொண்டார்கள்.

சுந்தரர் விறன்மிண்டரை விழுந்து வணங்கினார்.

''நமது நல்ல எண்ணங்களுக்கு இறைவன் துணை நிற்கட்டும்'' விறன்மிண்டர் ஆசிர்வதித்தார்.

தேவாசிரிய மண்டபத்தை சுந்தரர் ஒரு முறை சுற்றி வந்தார். எல்லா நாயன்மார்களையும் பார்த்து கை கூப்பினார்.

எப்பேர்ப்பட்ட உத்தமர்கள்.

எவ்வளவு தெளிவான ஞானியர்கள்.

அப்பழுக்கே இல்லாத அற்புதமான பிறவிகள்.

இவர்களுக்கு முன்னே நான் யார்? நிற்க எனக்கு என்ன தகுதி. இறைவன் பொருட்டு இவர்கள் மேற்கொண்ட சோதனைகள் எத்தனை? செய்த தியாகம் எவ்வளவு பெரியது. சிவனடியார்க்காக மகளின் தலைமுடியை வழித்துக் கொடுத்தும், மகனை நறுக்கிக் கறி சமைத்துக் கொடுத்தும், மனைவியைக் கேட்ட போதும் தயங்காமல் அளித்தும், அப்படிக் கொடுத்த மனைவியை ஊர் தடுக்காமல் இருக்க, வாளேந்தி துணை போயும், ஊர் இவர்களைப் பித்தென்று சொன்னாலும், ஆம். அப்படித்தான் என்று இறுமாந்து இருந்தும் இருந்த இவர்கள் முன்னால் நான் யார்? இவர்கள் சிவனுக்கு அடியார் என்றால் நான் இவர்களுக்கு அடியேன்.

ஆனால், இவர்களைப் பற்றிப் பாட என்னால் இயலுமா? என்ன விதமாய் வரிசைப்படுத்துவது என்று எனக்குத் தெரியுமா? இதை யாரிடம் கேட்பது? இறையே, உன் அடியார்கள் யார்? அவர்களைப் பற்றி விறன்மிண்டர் பாடச் சொல்கிறாரே... நான் எப்படிப் பாட? உன்னைப் பற்றிப் பாடத் தெரியாதிருந்த எனக்குப் பாட உதவி செய்தாயே... இப்போது இவர்களைப் பற்றிப் பாட வேண்டும். உதவி செய். முதலடி எடுத்துக் கொடு.

சுந்தரர் கருவறை நோக்கி ஓடினார். கை கூப்பினார். மனசு எல்லா சுகங்களை



யும் மறந்து இறைவன் மீது அழுந்தி அமர்ந்தது. அந்த அழுத்தத்தில் உடம்பு அசையாது நின்றது. மூச்சு ஒரே நிதானத்தில் வெளிப்பட்டது. மூச்சு நிதானமாக எண்ணங்கள் மட்டுப்பட்டன. எண்ணங்கள் மட்டுப்பட இறை சிந்தனை வலுத்தது. ரீங்காரம் அதிகரித்தது. ரீங்காரம் ஓங்காரமாயிற்று. ஓங்காரம் காதுக்குள் புகுந்து உடம்பெல்லாம் நிறைந்தது. உடம்பெல்லாம் புகுந்த ஓங்காரத்தினூடே ஒரு வாக்கியம் தெளிவாகக் கேட்டது. இறைவன் முதலடி எடுத்துக் கொடுத்தான்.

'தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'

சுந்தரர் மறுபடி மறுபடி அந்த வாக்கியத்தைக் கேட்டார்.

'திருநீல கண்ட குயவனார்க்கு அடியேன்' என்று அடுத்த அடியை சுந்தரரே எடுத்தார்.

சிவனடியார்களை அழகாக வரிசைப்படுத்திப் பாடல் இயற்றினார். திருத் தொண்டத் தொகை என்று அதற்கு பெயரிட்டார்.

விறன்மிண்ட நாயனாரும், திருவாரூர் மக்களும் அந்தப் பாடலின் அழகைக் கண்டு வியந்தார்கள். அந்தப் பதிகத்தைத் தலை மீது வைத்துக் கொண்டாடினார்கள். சுந்தரரின் காலில் விழுந்து வணங்கினார்கள்.

''எல்லா சிவனடியார்களையும் வரிசைப்படுத்துவது பெரிதல்ல. எல்லோருக்கும் அடியேன் என்று பாடினீர்களே... அதுதான் சிறப்பு. குலச் சிறப்பு முக்கியமில்லை. குடி பிறப்பு முக்கியமில்லை. இறைவனை உணரும் சிறப்புக்கு முன் வேறு எதுவும் சிறப்பில்லை என்று பாடினீர்களே அதுவே சிறப்பு. சந்திராதித்தர் உள்ளவரை இந்தப் பாட்டு பூமியில் இருக்கும். நம் சிவன் பெருமையைச் சொல்லும்.''

''சுந்தரா... நீ எவளை மணந்தாலென்ன... எத்தனை பேரை மணந்தாலென்ன..? எவ்விதம் வாழ்ந்தாலென்ன..? எவ்விதம் உடுத்தினால் என்ன..? சுந்தரா... நீ இறைவனுக்குத் தோழன் என்பதில் சந்தேகமேயில்லை.

இறைவணக்கத்தில் இறை வேண்டலில் இறையை அணுகுவதில் நீ புதிய பாவம் காட்டியிருக்கிறாய். இறைவனைத் தோழனாக நேசித்துக் காட்டியிருக்கிறாய். தன்னைப் பெண்ணாகவும், இறைவனைப் புருஷனாகவும் கொண்டவர்கள் உண்டு. தன்னை அடிமையாகவும் இறைவனை ஆண்டானாகக் கொண்டவர் உண்டு. நீ கொண்ட தோழமை புதிது. உன் இறையன்பு உன் பதிகம் தமிழுக்குக் கிடைத்த வரம். சிவநெறிச் செல்வர்களுக்குக் கிடைத்த வழி.

சுந்தரா, நீயும் இறைவனும் கொண்ட இந்த சிநேகம் மிகப்பெரிய சரித்திரமாய், காவியமாய் பன்னெடுங்காலம் தமிழில் உலா வரப்போகிறது. கொஞ்சம் விநோதமான உன் வழிபாடு புரிந்தும் புரியாமலும் பேசப்படப் போகிறது. சைவ சமயத்திற்கு நீ செய்த உதவி ஒரு நாளும் மறக்கப்படாதது'' விறன்மிண்டர் கை தூக்கி மனம் நிறைந்து ஆசீர்வதித்தார்.

'தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'

சுந்தரர் மறுபடி மறுபடி அந்த வாக்கியத்தைக் கேட்டார்.

'திருநீல கண்ட குயவனார்க்கு அடியேன்' என்று அடுத்த அடியை சுந்தரரே எடுத்தார்.

சிவனடியார்களை அழகாக வரிசைப்படுத்திப் பாடல் இயற்றினார். திருத்தொண்டத் தொகை என்று அதற்கு பெயரிட்டார்.

விறன்மிண்ட நாயனாரும், திருவாரூர் மக்களும் அந்தப் பாடலின் அழகைக் கண்டு வியந்தார்கள். அந்தப் பதிகத்தைத் தலை மீது வைத்துக் கொண்டாடினார்கள். சுந்தரரின் காலில் விழுந்து வணங்கினார்கள்.

"எல்லா சிவனடியார்களையும் வரிசைப்படுத்துவது பெரிதல்ல. எல்லோருக்கும் அடியேன் என்று பாடினீர்களே... அதுதான் சிறப்பு. குலச் சிறப்பு முக்கியமில்லை. குடி பிறப்பு முக்கியமில்லை. இறைவனைக் உணரும் சிறப்புக்கு முன் வேறு எதுவும் சிறப்பில்லை என்று பாடினீர்களே அதுவே சிறப்பு. சந்திராதித்தர் உள்ளவரை இந்தப் பாட்டு பூமியில் இருக்கும். நம் சிவன் பெருமையைச் சொல்லும்."

"சுந்தரா... நீ எவளை மணந்தாலென்ன... எத்தனை பேரை மணந்தாலென்ன..? எவ்விதம் வாழ்ந்தாலென்ன..? எவ்விதம் உடுத்தினால் என்ன..? சுந்தரா... நீ இறைவனுக்குத் தோழன் என்பதில் சந்தேகமேயில்லை.

இறைவணக்கத்தில் இறை வேண்டலில் இறையை அணுகுவதில் நீ புதிய பாவம் காட்டியிருக்கிறாய். இறைவனைத் தோழனாக நேசித்துக் காட்டியிருக்கிறாய். தன்னைப் பெண்ணாகவும், இறைவனைப் புருஷனாகவும் கொண்டவர்கள் உண்டு. தன்னை அடிமையாகவும் இறைவனை ஆண்டானாகக் கொண்டவர் உண்டு. நீ கொண்ட தோழமை புதிது. உன் இறையன்பு உன் பதிகம் தமிழுக்குக் கிடைத்த வரம். சிவநெறிச் செல்வர்களுக்குக் கிடைத்த வழி.

சுந்தரா, நீயும் இறைவனும் கொண்ட இந்த சிநேகம் மிகப்பெரிய சரித்திரமாய், காவியமாய் பன்னெடுங்காலம் தமிழில் உலா வரப்போகிறது. கொஞ்சம் வினோதமான உன் வழிபாடு புரிந்தும் புரியாமலும் பேசப்படப் போகிறது. சைவ சமயத்திற்கு நீ செய்த உதவி ஒரு நாளும் மறக்கப்படாதது" விறன்மிண்டர் கை தூக்கி மனம் நிறைந்து ஆசீர்வதித்தார்.

தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்

திருநீலகண்டத்துக் குயவனார்க்கு அடியேன்

இல்லையேயெனாத இயற்பகைக்கு அடியேன்

இளையான்றன் குடி மாறனடியார்க்கும் அடியேன்

என்ற திருத்தொண்டத் தொகை திருவாரூர் முழுதும் பாடப்படலாயிற்று.



சுந்தரருக்கு எங்கு போனாலும் மரியாதை தரப்பட்டது. அவர் பின்னே மிகப் பெரிய இளைஞர் பட்டாளம் சேர்ந்தது.

கலிக்காம நாயனாரின் கோபம் கண்ட அந்த திருப்புன்கூர் இளைஞன் இங்கு வந்து நடந்ததறிந்தான்.

அங்கு கலிக்காமர் பேசியதை மீதியுள்ள திருப்புன்கூர் இளைஞர்களுக்குச் சொன்னான்.

யார் சரி? யார் தவறு? திருப்புன்கூர் இளைஞர்கள் தலையைப் பிய்த்துக் கொண்டார்கள். கடவுளை அறிந்தவருக்கும் அறியாதவருக்கும் உள்ள வேறுபாடு இதுதான்.

அறிந்தவர்கள் அவர்கள் வழிநடப்பார்கள். அறியாதவர்களே விவாதம் செய்வார்கள். பரவையைத் திருமணம் செய்து கொடு என்று இறைவனிடம் சுந்தரர் கேட்டது தவறெனில் திருத்தொண்டத் தொகை பாட முதல் அடி எடுத்துக் கொடுத்திருப்பாரா? அல்லது இவ்வளவு அற்புதமாக சிவனடியார்கள் பற்றி அவரால் பாட முடிந்திருக்குமா? தமிழறிந்த புலவர் ஆயிரமாயிரம் இருக்க சுந்தரருக்கு மட்டும் இத்தனை சுவையாக திருத்தொண்டத் தொகை பாடத் தோன்றியதே. இது இறையருள் இல்லையா? சுந்தரரின் சொந்த வாழ்க்கை முக்கியமில்லை. என்ன சொல்கிறார் என்பதே முக்கியம்.

விரும்பியவரை ஊர் அறிய மணந்து கொண்டார் என்பது தவிர வேறெதுவும் எங்களுக்குப் படவில்லை. அப்படி அவர் மணந்ததும் தவறில்லை.

பரவையும், சுந்தரரும் வருவதைப் போய் பார். சிவனும், பார்வதியும் வருவது போல் இருக்கும். கலிக்காமர் சொல்கிற ஒழுக்கம் தவறென்று நான் சொல்லவில்லை. அவர் பேசுவதில் குலப்பெருமை மட்டுமே தொனிக்கிறது. இறைவனடியார்களுக்குள் குலம் முக்கியமில்லை.

நீ அந்தணன். நான் வைசியன். இவன் சத்திரியன். அவன் பாணன். நம்மில் எவர் உயர்வு. எவர் தாழ்வு? நாள் தவறாது திருநீல கண்டக்குயவர் காலிலும், கண்ணப்ப வேடர் காலிலும் நான் வாழவில்லையா? பாணனைத் தொழவில்லையா? அவர்கள் மேன்மைக்கு முன் என் அந்தணச்செருக்கு எம்மாத்திரம். பரவையார் கணிகை என்பதால் ஏதும் குறையா? அல்லது பரவை வேண்டுமென்று இறைவனைத் தூதாக விட்டது குறையா?

ஒரு சிவனடியாரால் தவறான விஷயம் கேட்க முடியுமோ? இறைவன் தந்து விட்டதே... அதனால் கேட்டது தவறாகுமோ? கலிக்காமர் பொறாமைப்படுகிறார் என்று எனக்குத் தோன்றுகிறது நம்மைச் சிவன் வழிப்படுத்தின குருவை நான் இப்படிப் பேசுவது தவறு இருந்தாலும் சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது. சுந்தரர் சாதாரணர் அல்லர். கலிக்காமரால் அவரை ஏதும் செய்ய முடியாது. இதைப் பற்றி வெளியாரிடம் விவாதம் செய்யாமல் இந்தப் பேச்சை நமக்குள்ளே வைத்திருப்போம்.

நம் சிவன் நமக்குப் பாடம் சொல்லவும் நமது கலிக்காமருக்கு உண்மை சொல்லவும் ஏதேனும் அற்புதம் நிகழ்த்துவார். சுந்தரர் நாளை தலயாத்திரை ஆரம்பிக்கிறார். பரவையாருடன் பல ஊர்களுக்குப் போகப் போகிறார். அதிகம் பேசாமல் அவரைத் தொடர்வோம். நீ போய் மற்ற நண்பர்களையும் அழைத்து வா. சுந்தரர் எங்கேயிருக்கிறார் என்று விசாரித்து வந்து சேர். இறையருள் எங்கு தங்கி நிற்கிறதோ அங்கிருப்பதே நமது வேலை. சீக்கிரம் நண்பர்களைக் கூட்டி வா. நமது வாழ்நாளை சுந்தரரை ஒட்டிக் கழிப்பதே சிறப்பு. வந்த இளைஞன் மறுபடி திருப்புன்கூர் ஓடினான்.

திருப்புன்கூர் அடைந்ததும் கடும் வயிற்று நோயினால் கலிக்காமர் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்து கொண்டான். அவருக்கு அருகே போய் தில்லை வாழ்தம் அடியார்க்கும் அடியேன் என்று பாடினான்.

வலியின் கொடுமையினால் கண்மூடிக் கிடந்த கலிக்காமர் மெல்ல கண் திறந்து பார்த்தார். பாட்டு நன்றாகத்தான் இருக்கிறதடா. பதிகம் பாடி விட்டால் போதுமா? பரத்தைக்காய் இறைவனை தூது விட்டது சரியாகி விடுமா? இன்னும் எதற்கெல்லாம் தூது விடுவீர்களடா? இறைவன் என்ன உங்கள் கடப்பைக்காரனா? இது சரியெனில் மிகப்பெரிய தபஸ்விகளின் வாழ்க்கையெல்லாம் கேவலமாகி விடாதா? கேலியாகி விடாதா? அந்த சுந்தரனைப் பற்றி இன்னொரு சொல் என்னிடம் சொல்லாதே... போ'' பேசியபடியே மருந்து மயக்கத்தில் கண் திறந்து தூங்கினார்.

கனவு கண்டது போல் உளற ஆரம்பித்தார். அவர் மனைவி உட்பட சுற்றியிருந்தவர்கள் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். ''சிவனே... என் சிவனே...'' கண்ணீர் ஒழுக கை கூப்பினார்.

''ஆமாம் ஐயா... கடும் வயிற்று வலி. சூலை நோய் என்று சொல்கிறார்கள். உன்னை நம்பிய எனக்கு இந்த நோய் ஏனய்யா வந்தது. நான் என்ன பாவம் செய்தேன். எவரை நொந்தேன். எவர் குடியைக் கெடுத்தேன்.''

''ஐயா... என்ன சொல்கிறீர் சுந்தரனை நொந்தேனா? அவனை இகழ்ந்தேனா..? அதனால்தான் இந்த சூலை நோயா? அவன் தொட்டால்தான் இந்த சூலை நோய் குணமாகுமா?

என் சிவனே... நன்றாகயிருக்கிறதய்யா இந்தப் பேச்சு... நான் முதலா அவன் முதலா...

விவேகமில்லாத இளைஞன், சிறுபிள்ளை. என் வயதோ, அனுபவமோ, ஞானமோ இல்லாதவன். அவன் தொட்டு நான் குணமானால் என் தபஸுக்கு என்ன அர்த்தம்.

எனக்கு சூலை நோய் குணமாக வேண்டாம். வலியில்லாத போது உன் பெயரைச் சொன்னேன். இப்போது வலியோடு நமச்சிவாயம் என்று சொல்லிவிட்டுப் போகிறேன். அவ்வளவுதானே. உங்களைப் பெண்ணுக்காய் தூதுவிட்ட அந்த



சுந்தரனை நான் பார்க்க மாட்டேன். பார்த்தாலும் கை கூப்பி வணங்க மாட்டேன்.

ஐயா சிவனே, நீ வாழ்க. உன் புகழ் வாழ்க. நீ அன்போடு எமக்குக் கிடைத்த சூலை நோய் வாழ்க.''

கனவில் பேசிவிட்டு கலிக்காமர் கதறினார்.

விழித்தெழுந்து தன் கனவைப் பலரிடம் சொல்லத் துவங்கினார். மேலும் சுருட்டி இழுத்த வலியால் இறைவன் பெயரை உச்சரித்து அழுது கொண்டிருந்தார். விஷம் குடித்து செத்து விடட்டுமா? என்று புலம்பினார். இளைஞர்கள் அவர் அருகே கண்மூடி நமச்சிவாய மந்திரம் சொன்னார்கள். வலி சற்று மட்டுப்பட கலிக்காமர் சற்று அயர்ந்து தூங்கினார்.

வந்த இளைஞனோடு மற்ற இளைஞர்கள் கூடிப் பேசினார்கள். எல்லோரும் சுந்தரரை நோக்கிப் போவது என்று முடிவு செய்தார்கள். கட்டுச் சோறு கட்டிக் கொண்டு இரவு பகல் என்று பாராது சுந்தரரை நோக்கி நடந்தார்கள். தங்கள் நண்பர்களிடம் நடந்ததைச் சொன்னார்கள்.

சுந்தரர் தங்கியிருந்த வீட்டு வாசலில் எல்லோரும் வரிசையாய் கைகூப்பி கண்மூடி நின்று அவர் பாடிய பதிகங்களை மனமுருகப் பாடத் துவங்கினார்கள். சுந்தரர் இசை கேட்டு வாசலுக்கு வந்தார். வியப்போடு பார்த்தார். கை கூப்பினார்.

''உங்களை நான் அறிவேனா... என் பாடல்களைப் பிழையில்லாமல் படியெடுப்பவர்களாயிற்றே. எந்தப் பிரதிபலனும் எதிர்பாராது என் பின்னே வரும் இளைஞர்களாயிற்றே. திருப்புன்கூர் தானே உங்கள் சொந்த ஊர்? ஏன் உங்கள் முகம் வாடியிருக்கிறது? அங்கு எல்லோரும் நலமா? உங்களுக்கு நான் செய்யக் கூடியது ஏதும் உண்டா?

குரல் குழைய சுந்தரர் கேட்டதும், அந்த இளைஞர்கள் விம்மத் துவங்கினார்கள். கண்களில் நீர் ஆறாகப் பெருக, சுந்தரர் காலில் விழுந்தார்கள்.

பரவையாரும் மற்றவரும் அருகே வர இதமான வார்த்தை சொல்லி சமாதானப்படுத்த திருப்புன்கூர் இளைஞர்கள் கலிக்காமருக்கு நேர்ந்த துன்பம் சொன்னார்கள்.

திருப்புன்கூர் இளைஞர்கள் கலிக்காமருக்கு நேர்ந்த துன்பம் சொன்னார்கள்.

ஊரில் பலபேரை சிவநெறிப்படுத்தியவர் என்று அவரை அறிமுகப்படுத்தினார்கள். அவருக்கு சுந்தரர்பாலுள்ள கோபத்தைச் சொன்னார்கள். கலிக்காமர் கண்ட கனவை விளக்கினார்கள். அப்படி கனவு கண்ட பிறகும் கலிக்காமர் சுந்தரரை மதியாதது பற்றியும் எடுத்துரைத்தார்கள். கலிக்காமரின் வயிற்று வலியை எப்படியாவது தீர்த்து வைக்க வேண்டும் என்று வேண்டினார்கள். கலிக்காமர் படும் துயரம் பார்க்க சகிக்கவில்லை என்று அழுதார்கள்.

இந்தக் கதை கேட்டு சுந்தரர் மனம் உருகினார். பரவையார் கண்ணீர் விட்டார்.

ஒரு சிவனடியாரின் வருத்தத்தை தீர்ப்பதைத் தவிர வேறென்ன வேலை

நமக்கு? எத்தனை கோபம் இருந்தாலும் என்னை அவர் எதிர்கொண்டு எட்டி உதைத்தாலும் அவர் நலமடைய இறைவனைப் பாடுவோம். அவர் சூலை நோய் நீங்க இறைவனை வேண்டுவோம்.

நான் தவத்தால் இறைவனை அடையவில்லை. இறைவனால் தவப்பயன் பெற்றேன். என்னை இறைப்பணி செய்யுமாறு இறைவ பணித்தனன். என் பணியை நான் செய்து கொண்டிருக்கிறேன். இதில் சரி, தவறு என்பதெல்லாம் இறைவன் பொறுப்பு.

நமது அடுத்த தலம் திருப்புன்கூர். இன்றே, இப்போதே புறப்படுகிறோம்.

சுந்தரர் கையசைக்க இளைஞர்கள் வழிகாட்ட, பெருங்கூட்டம் திருப்புன்கூர் நோக்கி நகர்ந்தது.

"சுந்தரன் வருகிறானா? திருப்புன்கூருக்கா? என் சூலை நோய் தீர்க்கவா? அவன் தொட்டுத்தான் இந்நோய் தீருமெனில் நான் இருந்தென்ன? இறந்தென்ன?"

கலிக்காமர் கடுஞ்சினத்தோடு எழுந்தார். வாளெடுத்து நெற்றி மீது வைத்து இறைவனைத் தியானித்தார்.

"சுந்தரனைப் பெரியவனாக்கி என்னைச் சிறியவனாக்கி விட்டீர்களல்லவா என் சிவனே. சந்தோஷம். அவனை இந்த நோய் தீர்க்க விடமாட்டேன். நான் உயிரோடு இருந்தால் தானே நோயும் நோய் தீர்ப்பதும். நான் சுந்தரனைப் பார்க்கப் பிரியப்படவில்லை. வேண்டுமென்றால் சுந்தரன் என் பிணத்தைப் பார்த்துவிட்டுப் போகட்டும். கலிக்காமரின் ஒழுக்கம் எத்தகையது என்று புரிந்து கொள்ளட்டும்."

நெற்றியில் நிறுத்திய வாளை திருப்பிப் பிடித்து அதன் கூர்மையை வயிற்றின் வலியெடுக்கும் பகுதியில் வைத்தார். மனைவியை நிமிர்ந்து ஒரு முறை பார்த்துக் கண்களால் விடை பெற்றுக் கொண்டார். கண்களை மூடினார். சிவனைத் தியானித்தார். சரக்கென்று வயிற்றில் இறக்கிக் கொண்டார். வாள் வயிறு குத்தி முதுகு கிழித்து வெளியே வந்தது. உடம்பு சரிந்தது. உயிர் பிரிந்தது.

திருப்புன்கூர் எல்லையைத் தொட்ட சுந்தரர் நடையில் வேகம் கூட்டினார். அவ்விதம் நடக்கும் போதே மனசுக்குள் சிவதரிசனம் கிடைத்தது. கலிக்காமர் நோய் தீர்க்க உன்னால்தான் முடியும். நிற்காது விரைந்து செல் என்ற கட்டளை வந்தது.

திருப்புன்கூர் சுந்தரரை எதிர்கொண்டு வரவேற்றது. சுந்தரரோ கலிக்காமர் பற்றிய நினைப்பிலேயே இருந்தார். கலிக்காமர் இறந்ததும் அவர் மனைவி தானும் தன் உயிரை மாய்த்துக் கொள்ள திட்டமிட்டார்.

அந்த நேரம் சுந்தரர் வருகிறார் என்கிற செய்தி அவளுக்குச் சொல்லப்பட்டது. மனைவியார் மனம் மாறினார். அங்கு அழுது கொண்டிருப்பவர்களை அழ வேண்டாம் என்று கட்டளையிட்டார். சுந்தரரை வரவேற்கும் ஆயத்தங்களைச் செய்தார். தோட்ட வாயிலேயே வரவேற்று சுந்தரரை உள்ளே அழைத்து வந்தார்கள்.



சுந்தரர் உள்ளே வந்து அமர்ந்தார். கை கூப்பிய அம்மையாருக்கு பதிலுக்கு கை கூப்பினார். "கலிக்காமருக்கு சூலை நோய் என்று சொல்லப்பட்டது. அதைத் தீர்த்து வைக்குமாறு இறைவன் கட்டளையும் வந்தது. கலிக்காமர் எங்கிருக்கிறார்?"

"உள்ளே தூங்கிக் கொண்டிருக்கிறார்?"

"அவருடைய சூலை நோய் என்னவாயிற்று?

"முற்றிலும் தீர்ந்து போயிற்று."

"உண்மையாகவா?"

"உண்மை. இங்கு எவருக்கும் எந்த இடைஞ்சலும் இல்லை."

"மிகுந்த மகிழ்ச்சி. ஆயினும் சிவனடியார் கலிக்காமரை நான் பார்க்க விரும்புகிறேன். அவர் உறங்கியபடி இருந்தாலும் அவர் காலடியில் நின்று கை கூப்ப விரும்புகிறேன். சிவனடியாரை தரிசித்தால் சிவனை தரிசித்தல் போல. சிவ தரிசனத்தைத் தடுத்தல் நல்லதல்ல. உள்ளே தூங்கும் கலிக்காமரை நான் பார்க்க விரும்புகிறேன்" சுந்தரர் எழுந்து நின்றார்.

கலிக்காமரின் மனைவி தடுக்க முடியாமல் நின்றாள். சுந்தரர் முன்னேறி கலிக்காமர் உறங்கும் அறைக்குப் போனார்.

வயிற்றில் சொருகப்பட்ட வாளோடு கலிக்காமர் உயிர் நீத்துக் கிடந்ததைக் கண்டார். உற்று கலிக்காமர் முகத்தைக் கவனித்தார். "என் மீது அத்தனை வெறுப்போ? என்னால் தானே மனம் நொந்தீர்? என் பொருட்டு தானே வாள் சொருகி உயிர் நீத்தீர்? உம் துன்பம் எல்லாவற்றுக்கும் நான்தானே காரணம். ஒரு சிவனடியார் மனம் நோகும்படி நடந்த எனக்கு இனி வாழ்க்கை எதற்கு? நானும் போகிறேன்."

கலிக்காமர் உடலிலிருந்து வாளை உருவினார். நெற்றி முன்பு வாளை நிறுத்தி சிவனை நிறுத்தினார். வாளை உருவிய நேரம் கலிக்காமருக்கு உயிர் வந்து விட்டது. வயிற்றில் வடு கூட இல்லாமல் காயம் மறைந்து விட்டது. உள்ளுக்குள் இதுவரை கொடுமைப்படுத்திக் கொண்டிருந்த சூலை நோய் காணாமற் போய் விட்டது. அவர் எதிரே சுந்தரர் சிவன் நாமம் சொல்லியபடி இருந்தார். மூடிய கண்களுடனே வாளை உயர்த்தி தன் தலையைக் கொய்து கொள்ளப் போனார். கலிக்காமர் துள்ளி எழுந்து சுந்தரர் கைப்பிடித்து தடுத்தார். வாள் துள்ளி எழுந்து தரையில் விழுந்தது. சுந்தரர் கண் திறந்து கலிக்காமரைப் பார்த்தார். கலிக்காமர் சுந்தரரின் கால் தொடக் குனிந்தார். தன்னிலும் முதியவர் தன் கால் தொடுவதை விரும்பாத சுந்தரர் அவரைத் தடுத்தார். இருவரும் பேசாது தழுவிக் கொண்டார்கள். அந்தத் தழுவலில் சுந்தரரை முழுவதுமாய் ஏற்ற தன்மை இருந்தது.

உள்ளே ஓடி வந்த திருப்புன்கூர் இளைஞர்கள் அவர்கள் தழுவிக் கொண்டிருப்பதைப் பார்த்துத் திகைத்தார்கள். இருவரையும் நோக்கி கை கூப்பினார்கள். மறுபடி கண்களிலிருந்து நீர் பொங்க மனம் கரைந்து அழுதார்கள். அந்த அழுகை

ஆனந்தமான அழுகை.

''சுந்தரரைப் பின் தொடருங்கள்'' என்று கலிக்காமர் அந்த இளைஞர்களுக்கு கட்டளையிட்டார்.

அந்த இளைஞர்கள் முழு நம்பிக்கையோடு சுந்தரர் பின்னே போனார்கள்.

## 7

''ஆக ஒன்று தெளிவாய் தெரிகிறது. மரபாய் நின்ற கலிக்காமரை விட எந்த மரபுக்கும் சிக்காத சுந்தரர் உயர்வு என்று தெரிகிறது'' அந்த இளைஞர்கள் போகிற வழியில் பேசிக் கொண்டு போனார்கள்.

''அவ்விதம் இல்லை என்று தோன்றுகிறது. இறைவன் யாருக்கு அதிகமாய் கொடுக்கிறான் என்று கணக்கு வைத்து நீங்கள் உயர்வு தாழ்வு பேசுகிறீர்கள். ஆழமாய் யோசித்தல் எவருக்கு அதிகம் கொடுக்கிறானோ அவருக்கே அதிகம் சோதனையும் வருகிறது. கலிக்காமர் ஒரு உன்னத நிலையைச் சட்டென்று அடைந்து விட்டார். சுந்தரரைக் கலிக்காமர் கோபித்தார். அதனால் சூலை நோய் வந்தது. சுந்தரர் தீர்த்து இந்த நோய் போக வேண்டாம் என்று கோபம் கொண்டார். உயிரை விட்டார். போன உயிர் சுந்தரரால் மீண்டது. அந்த அற்புதம் கண்டவுடன் கலிக்காமர் அடங்கி விட்டார். பெரிய அலை போல் ஒரு பேரமைதி அவருள் புகுந்து கொண்டு விட்டது. இனி அவருக்கு இன்னார் இனியார் என்பதே கிடையாது. ஒரு நிறைவு ஏற்பட்டு விட்டது.

ஆனால், சுந்தரர் அப்படி அல்ல. இந்த அதிசயங்கள் ஏற்பட்டது தன்னாலா இறைவனாலா என்கிற தடுமாற்றங்கள் அவரிடம் இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஒரு சுழித்தோடும் நதி போல அவர் போய்க் கொண்டிருக்கிறார். அவர் கேட்டதெல்லாம் அவருக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. அங்கே இறுமாப்பு வர, உடனே அவருக்கு சோதனையும் வரும். வரவும் செலவும் இல்லாத நிலைமை வரமோ, சாபமோ இல்லாத தன்மை அடியார்க்கு இருத்தல் சிறப்பு.

கலிக்காமர், சுந்தரருக்குப் பின்னே நம்மைப் போ என்று பணித்தது சுந்தருக்கு இறைவன் பாடம் நடத்த வேண்டுமென்பது நாமும் கேட்டுக் கொள்ள வேண்டும் என்பதாய்தான். எனவே எந்நேரமும் மனசுக்குள் கலிக்காமரை வணங்கி சுந்தரைப் பின்பற்றுவோம்.''

அவர்கள் திருவாரூர் போய் சேர்ந்த போது குண்டையூர் கிழார் என்னும் மிகப்பெரிய வேளாளர் எதிர்ப்பட்டார். சுந்தரருக்காக சுந்தரரைச் சுற்றி உள்ளவருக்காக அரிசியும் மற்ற தானியங்களும் அவர் அவ்வப்போது அனுப்பி வைப்பது



வழக்கம். அந்த வருடம் அவர் ஊர்ப்பக்கம் மழை குறைவு. விளைச்சல் நசித்தது. விதை நெல்லுக்கே போராட்டமாய் போய்விட்டது. கூலியை அடுத்த வருடம் வாங்கிக் கொள்கிறோம். சுந்தரருக்கு நெல் அனுப்புங்கள் என்று வயலில் வேலை செய்பவர்கள் சொல்ல, உழைத்தவருக்கு கூலி கொடுப்பது முக்கியம். அதில் குறை வைப்பது ஆகாது என்று குண்டையூர் கிழார் கூலி அளந்து விட்டு திருப்புன்கூர் இளைஞர்களை வழிமறித்து வீட்டுக்குள் அழைத்து உபசரித்தார். அந்த இளைஞர்களும் இனிமையாகக் கிழாரோடு பேசத் துவங்கினார்கள்.

''என்ன பெரியவரே, ஊரில் சகலரும் நலமா?''

''இருக்கிறோம்.''

''மாடு கன்றுகள் சுகமா?''

''மெல்ல வளர்ந்து கொண்டிருக்கின்றன.''

''மாதம் மும்மாரி பெய்கிறதல்லவா?''

கிழார் மெல்லச் சிரித்தார். ''மழை என்றால் எங்கோ பெய்து கொண்டுதானிருக்கும்.''

''சுந்தரர் துணைவியார் பரவையார் உணவுக்கு ஏதோ நெல் வேண்டுமென்று சொன்னார்களே... அனுப்பி விட்டீர்களா?''

''இல்லை ஐயா. இன்று ஒரு நாளைக்குத்தான் உங்களுக்கு உணவு கையிருப்பு இருக்கிறது. விளைச்சல் பொய்த்து விட்டது. இந்த வருடம் மழை அறவே இல்லை. நீர் நிலைகள் காய்ந்து விட்டன. என்ன செய்வது என்று தெரியவில்லை. இப்படி ஒரு பஞ்சம் வந்ததேயில்லை. கூலி ஆட்கள் தங்கள் பங்கை சுந்தரருக்குக் கொடுக்க முன் வந்தார்கள். நான் வாங்க மறுத்து விட்டு உட்கார்ந்திருக்கிறேன். இந்தச் செய்தியை எப்படி சுந்தரரிடம் தெரிவிப்பதுஎன்றுதான் உங்களை அழைத்துப் பேசுகிறேன். நேற்றிலிருந்து என்னால் சாப்பிட முடியவில்லை, இளைஞர்களே... இறைவனடியார்க்கு நெல் தர முடியாத பாவியாகி விட்டேனே என்று மனம் நோகிறது. நாண் இட்டுக் கொண்டு செத்து விடலாமா என்று தோன்றுகிறது.

இளைஞர்கள் கிழாரை அமைதிப்படுத்தினார்கள்.

''சுந்தரர் பசித்திருக்க நாம் பார்க்கிறோமோ இல்லையோ, இறைவன் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார். சுந்தரருக்கு உணவு அனுப்ப முடியவில்லை என்று எங்களிடமோ, சுந்தரரிடமோ சொல்வதை விட, சிவபெருமானிடம் சொல்லுங்கள். நீங்கள் மட்டும் சொல்லுங்கள் என்று சொல்வானேன். நாம் எல்லோருமே சிவனிடம் சொல்வோம்.''

அந்த இளைஞர்கள் அங்கேயே அன்றிரவே சோறுண்ணாமல், நீர் அருந்தாமல் சுந்தரருக்கு நெல் வேண்டி குண்டையூர் கிழாரோடு சிவபெருமானை வேண்டினார்கள். கிழாரின் மொத்த குடும்பமும் உடனிருந்து சிவனைத் துதித்தது. தங்களுக்கு வேண்டுமென்று கேட்காமல் சிவனடியாருக்கு உணவு வேண்டுமென்று

மனமுருக வேண்டியது.

புலரும் நேரம் வாசலில் நீர் தெளிக்கப் போன குண்டையூர் கிழார் வீட்டுப் பெண்கள் நீர்க் குடத்தைத் தரையில் போட்டு விட்டு ஓவென்ற கூச்சலோ உள்ளே ஓடி வந்தார்கள். "சிவனே சிவனே..." என்று கூச்சலிட்டார்கள்.

'தென்னாடுடைய சிவனே போற்றி

எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி'

என்று கத்தினார்கள்.

தியானம் செய்து கொண்டிருந்த இளைஞர்கள் முன்பு கை தட்டினார்கள். குண்டையூர் கிழாரை உலுக்கி எழுப்பினார்கள்.

"என்ன.. என்ன... நடந்தது?" கிழார் அதட்டினார்.

"மலை.. மலை.... மிகப்பெரிய மலை."

"மிகப்பெரிய மலையா...? சோழ நாட்டிலா? என்ன உளறுகிறாயா?"

"ஒன்றல்ல... பல மலைகள். தெரு முழுவதும் மலைகள்."

"மலை மீதுதான் தெரு இருக்கும். தெரு மீது எப்படி மலை இருக்கும்."

"இருக்கிறது. நம் தெருவில். நம் வீட்டெதிரே மிகப்பெரிய நெல் மலை!"

"நெல் மலையா?"

"ஒன்றல்ல... பல மலைகள்."

எல்லோரும் வாசலுக்கு ஓடினார்கள்.

குண்டையூரில் எல்லா தெருக்களிலும் மலை மலையாக நெல் இருந்தது. மூன்றாள் உயரத்துக்கு நெல் குவிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வீட்டு வாசலிலும் ஒரு நெல் மலை இருந்தது.

குண்டையூர் கிழார் கை கூப்பினார்.

திருப்புன்கூர் இளைஞர்கள் தலை மீது கை குவித்து சிவனைத் துதித்தார்கள்.

ஊர் மக்கள் ஒரு நெல் கூட தொடாது விலகியிருந்தார்கள்.

"இது சுந்தரருக்காய்... சுந்தரர் மனைவி பரவைக்காய் சிவன் கொடுத்த நெல். அவர்கள் வந்து அள்ளிச் செல்லட்டும். ஆள் அனுப்புங்கள்" என்று குண்டையூர் கிழார் ஜனங்களிடம் சொல், ஜனங்களுக்கு முன்பு திருப்புன்கூர் இளைஞர்கள் திருவாரூர் நோக்கி ஓடினார்கள்.

குண்டையூர் கிழாரின் சோகத்தையும், அவர் உண்ணாது தவமிருந்ததையும் சுந்தரரிடம் சொன்னார்கள்.

சுந்தரரும், பரவையும் குண்டையூர் வந்து நெல் மலையைப் பார்த்து வியந்தார்கள். "இருக்கின்ற ஆள் வைத்து எடுத்துப் போக வேண்டும். இந்த நெல்லை திருவாரூர் எடுத்துப் போக வேண்டும் என்று முயற்சித்தால் ஒரு வருடமாகும்.



அதற்குள் நெல் காப்பாற்ற முடியாமல் பாழ்பட்டுப் போகும். எனவே யார் நெல் கொடுத்தார்களோ அந்தச் சிவனையே மறுபடி வேண்டி நெல்லைக் கொண்டு வந்து திருவாரூரில் சேர்க்குமாறு சுந்தரர் பதிகம் பாடினார்.

"நீ கொடுத்த நெல்லை எடுத்துவர ஆளில்லையப்பா. பரவை பசிக்கிறது என்கிறாள். இந்த நெற்குவியலை திவாரூரில் கொண்டு வந்து சேர்த்து விடு" என்று பதிகம் பாடினார்.

"சிவனே, நீ உமையாளை உன் இடப்பாகத்திலே வைத்தாய். இதைப் பற்றி யாரும் ஒரு குறையும் சொல்லவில்லை. நான் பரவையை எனக்குப் பிரியமானவளாய் வைத்தேன். திருக்கோளோலி என்ற ஊரில் எழுந்திருக்கும் சிவபெருமானே என் பொருட்டு குண்டையூர் கிழார் வீட்டு வாசலில் குவித்திருக்கும் நெல்லைக் கொண்டுவர ஆளில்லை. ஆள் அனுப்பு" என்று பாடினார்.

குண்டையூர் கிழாரைக் கட்டித் தழுவி விட்டு திருவாருருக்கு வண்டி ஏறினார். திருப்புன்கூர் இளைஞர்கள் சிவன் யாரை அனுப்புவார என்று குண்டையூரிலேயே காத்திருந்தார்கள்.

அன்று பகல் முழுவதும் நெல் அங்கேயே கிடந்தது. இரவு வந்தது. கடும் இருட்டு குண்டையூரைச் சூழ்ந்து கொண்டது.

நெற்றி மயிர் தெரியாத மையிருட்டாய் மாறியது. சுளுந்து ஏற்றினாலும் காற்றில் அணைந்தது. நெல் மலைகளுக்கு அருகே ஆட்கள் நடமாடுவது தெரிந்தது.

"யாரங்கே?" என்று அதட்டினால் பதிலுக்கு சிரிப்பு ஒலி கேட்டது.

மீண்டும் அதட்ட, 'நமச்சிவாயம்... நமச்சிவாயம்' என்று பல குரல்கள் வந்தன. உற்றுக் கவனிக்க, முழங்கால் அளவு உயரமே உள்ள குறள் பூதங்கள் நெற்குவியலைக் கூடையில் சுமந்து திருவாரூர் நோக்கிப் பறந்தன.

இளைஞர்கள் கை குவித்து ஆர்வத்தோடு குறள் பூதங்களுக்கு அருகே போக அவைகளும் கை குவித்தன.

"நாங்கள் செய்து கொண்டிருப்பது இறைப்பணி. நீங்கள் அங்கேயே இருப்பது நலம். சிவபெருமானை சோதிக்கும் எண்ணத்தோடு இங்கு வரவேண்டாம். சோதிக்கும ஆர்வத்தைக் கட்டுப்படுத்தி பக்தியை வளர்த்துக் கொள்ளுங்கள். அது நல்லது" ஒரு குறள் பூதம் பணிவாய் சொன்னது. குறள் பூதம் நோக்கி திருப்புன்கூர் இளைஞர்கள் தரையில் விழுந்து வணங்க அந்த பூதங்களும் திருப்புன்கூர் இளைஞர்கள் நோக்கி குனிந்து வளைந்தனர்.

ஒரு வருடத்திற்கு பல பேர் உண்ணும்படியான அளவுள்ள நெல், சுந்தரர் வீட்டில் சேர்க்கப்பட்டதாம். பரவையார் போதும் போதும் என்று சொல்லி விட்டார்களாம். விடிந்தும் பல நெல்மணிகள் குண்டையூரிலேயே இருந்தன.

இதை என்ன செய்வது?

ஒரு நெல் மணி கூட தொடாமல் குண்டையூர் கவலைப்பட்டது. இது பரவைக்கு சொந்தமல்லவா என்று விலகி நின்றது.

"இல்லை. மீதி நெல் மொத்தமும் குண்டையூர் மக்களுக்கே சொந்தம். அதை அவர்களே அனுபவிக்க வேண்டும்" பரவையார் நேரில் வந்து வேண்டிக் கொள்ள, குண்டையூர் மக்கள் வெட்கத்துடன் அந்த நெல்லை வீட்டுக்குள்ளே எடுத்துப் போனார்கள்.

அடியார்க்கு உண்ண உணவில்லையென்றால் சிவன் பொறுப்பானா? ஊர் மக்களுக்கு உணவு இல்லையென்றால் சிவனடியார் தாங்குவானா? இறைவன் வேறு இறைவனடியார் வேறா? இரண்டுமே ஒன்றுக்குள் ஒன்று புகுந்த கருணைக் கடல் அல்லவா? குண்டையூர் சுந்தரரைப் போற்றியது. சுந்தரர் ஊர் பஞ்சத்தைப் போக்கினார்.

திருப்புன்கூர் இளைஞர்கள் வயல் வெளியில் வட்டம் போட்டு உட்கார்ந்து கொண்டனர். சுந்தரர் சிவன் தோழர் என்பது உறுதியாகி விட்டது. கண்ணெதிரே அற்புதங்கள் சுந்தரர் நிகழ்த்துகின்றார். மனம் உருகி மனம் உருகிப் பதிகம் பாடுகிறார். அவர் பதிகங்கள் மிகச் சிறப்பாக இருக்கின்றன. ஆனால், அவர் தத்துவமென்ன... அவரால் முடிந்த இறைத் தோழமை எப்போது நமக்குக் கை கூடும். இதை எங்கு எவரிடம் கற்றுக் கொள்ள வேண்டும். இதைப் பற்றி சுந்தரரிடம் எப்போது கேட்பது? கேட்கலாமா? கூடாதா? அவர்கள் எந்த முடிவுக்கும் வராமல் சுந்தரர் போகும் இடங்களுக்கெல்லாம் போனார்கள்.

திருப்புகலூருக்கு ஒரு நாள் சுந்தரர் கிளம்பிக் கொண்டிருக்க பரவையார் சுந்தரருக்கு அருகே வந்து, "பங்குனி உத்திரம் வருகின்றன. நம்மைச் சுற்றி அடியார்கள் அதிகம் இருக்கின்றார்கள். அந்தத் திருநாளைக் கருதி இன்னும் ஆயிரக்கணக்கான அடியார்கள் நம் இல்லம் வருவார்கள். சிவழசையும், வேள்வியும் செய்தல் வேண்டும். உணவுக்கு நெல் இருக்கிறது. தானம் கொடுக்க பொன் வேண்டும். விலை அதிகம் உள்ள மிளகும், ஏலமும் தொலை தூரத்துக்கு வாங்கி வர சேர தேசத்துக்கு ஆள் அனுப்ப வேண்டும். அவர்கள் கைச் செலவுக்கு பொன் தர வேண்டும். இப்போதே சொல்லி விட்டேன். நமக்குப் பொன் தேவைப்படுகிறது.

பரவையார் தேவையைச் சொல்லும் போதே சுந்தரர் சிவனை நினைத்தார். திருப்புகலூர் சென்று இறைவனைப் பொன் தருமாறு வேண்டினார். வேண்டி விட்டு இறைவன் தருவான் என்ற நம்பிக்கையோடு கோயில் மண்டபத்திலேயே அமர்ந்தார். தூக்கம் கண்ணைச் சுழற்றிக் கொண்டு வந்தது. திருப்புன்கூர் இளைஞர்களை அழைத்து அங்கே கோயில் கட்டுமானத்திற்கென வைத்திருந்த செங்கற்களைத் தலைக்கு வாகாய் அடுக்கச் சொன்னார். தான் மேலே போர்த்தியிருந்த வெள்ளை வெளேர் என்கிற பட்டுத் துண்டை அந்த செங்கற்களின் மீது போர்த்தி தன் தலையை அதில் வைத்து தூங்கினார்.

விழித்து எழுந்த போது, வெண் பட்டுத் துணிக்குக் கீழேயிருந்த செங்கற்களெல்லாம் பொன் கற்களாக மாறியிருந்தன. சுந்தரர் கோயிலுக்குள் நுழைந்து இறைவனைத் துதித்துவிட்டு பரவையார் கையில் பொன்னைக் கொடுத்து மிகப்பெரிய அளவிலேயே மிகச் சிறப்பான முறையில் பங்குனி உத்திரத் திருவிழாவைக் கொண்டாடினார்கள்.

பரவையாரிடம் விடைபெற்று நன்னிலம், திருவீழி மலை, திருவாஞ்சியம், திருவாடுதுறை, கும்பகோணம், திருவளஞ்சுழி, திருக்கண்டியூர், திருவையாறு, திருப்பூந்துருத்தி போன்ற ஊர்க் கோயில்களுக்குச் சென்று பதிகம் பாடினார். திருமுதுகுன்று என்ற ஊருக்குப் போய் இறைவன் மீது பாடல்கள் இயற்றினார். பன்னிராயிரம் பொன் அவருக்குக் கொடுக்க அங்குள்ள கோயில் அதிகாரிகளுக்கு சிவன் கட்டளையிட்டார்.

"இவ்வளவு பெரிய தொகையை திருவாரூர் வரை நான் எப்படி எடுத்துச் செல்வது? என் சிவனே எனக்கு வழி சொல்லும்" என்று கேட்டார்.

"இவ்வளவு தானே... இந்தப் பொன்னை இந்த ஊர் மணிமுத்தாறு நதியில் போடு. திருவாரூர் குளத்தில் எடுத்துக் கொள்" என்று சிவன் குரல் அசரீரியாய் கேட்க, பன்னிராயிரம் பொன்னும் சுழித்தோடும் மணிமுத்தாறு பிரவாகத்தில் போடப்பட்டது. சுந்தரர் கையிலிருக்கும் தூசு தட்டி மிகுந்த நிம்மதியுடன் நம்பிக்கையுடன் கரையேறினார்.

திருப்புன்கூர் இளைஞர்கள் பயத்திலும், வியப்பிலும் உறைந்து போய் நதிக்கரையில் உட்கார்ந்து விட்டார்கள். ஓடும் ஆற்றில் இறங்கி துளைத்துத் தேட ஒரு பொன் கூட கிடைக்கவில்லை. மேலும் பல ஊர்கள் சுந்தரரின் பின்னே போய் அவர் அங்கங்கே பாடும் பதிகங்களைப் பதியெடுத்து திருவாரூர் வந்தார்கள்.

திருமுதுகுன்றத்தில் பன்னிராயிரம் பொன் சிவனிடமிருந்து பெற்றுக் கொண்டது கூட சுந்தரருக்கு மறந்து விட்டது. திருப்புன்கூர் இளைஞர்கள் நினைவுபடுத்தியதும், "ஆமாம். அந்தப் பொன் எங்கே?" என்று சுந்தரர் யோசிக்கத் துவங்கினார். மூட்டை மூட்டையாய் ஆற்றில் போட்டதை ஞாகப்படுத்தினார்கள்.

"பொற்காசை ஆற்றில் போட்டேனா? எதற்காக..?" சுந்தரர் மறுபடி கேட்டார்.

"திருவாரூர் திருக்குளத்தில் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னீர்கள். சிவபெருமான் அப்படி கட்டளையிட்டதாகவும் சொன்னீர்கள்."

"சிவபெருமான் கட்டளை என்றா சொன்னேன். அப்படியானால் அந்தப் பொன் திருக்குளத்தில் இருக்கும். வாருங்கள். போய் எடுத்து வருவோம்" சுந்தரர் கமலாலயம் நோக்கி விரைந்தார்.

இடுப்பு வரை கமலாலயக் குளத்து நீரில் இறங்கி ஆற்றில் விட்ட பொற்குவியலைத் தேடலானார். மூங்கி மூங்கி எடுக்க சேறுதான் வந்ததே தவிர, ஒரு பொற்காசும் வரவில்லை. திருப்புன்கூர் இளைஞர்கள் பயத்தில் உறைந்து போய் கிடக்க பரவையார் வாய் விட்டுச் சிரித்தார்.

ஒரு நெல் மணி கூட தொடாமல் குண்டையூர் கவலைப்பட்டது. இது படி வைக்கு சொந்தமல்லவா என்று விலகி நின்றது.

"இல்லை. மீதி நெல் மொத்தமும் குண்டையூர் மக்களுக்கே சொந்தம். அதை அவர்களே அனுபவிக்க வேண்டும்" பரவையார் நேரில் வந்து வேண்டிக் கொள்ள, குண்டையூர் மக்கள் வெட்கத்துடன் அந்த நெல்லை வீட்டுக்குள்ளே எடுத்துப் போனார்கள்.

அடியார்க்கு உண்ண உணவில்லையென்றால் சிவன் பொறுப்பானா? ஊர் மக்களுக்கு உணவு இல்லையென்றால் சிவனடியார் தாங்குவானா? இறைவன் வேறு இறைவனடியார் வேறா? இரண்டுமே ஒன்றுக்குள் ஒன்று புகுந்த கருணைக் கடல் அல்லவா? குண்டையூர் சுந்தரரைப் போற்றியது. சுந்தரர் ஊர் பஞ்சத்தைப் போக்கினார்.

திருப்புன்கூர் இளைஞர்கள் வயல் வெளியில் வட்டம் போட்டு உட்கார்ந்து கண்ணெதிரே அற்புதங்கள் சுந்தரர் நிகழ்த்துகின்றார். மனம் உருகி மனம் உருகிப் பதிகம் பாடுகி கொண்டனர். சுந்தரர் சிவன் தோழர் என்பது உறுதியாகி விட்டது. றார். அவர் பதிகங்கள் மிகச் சிறப்பாக இருக்கின்றன. ஆனால், அவர் தத்துவ மென்ன... அவரால் முடிந்த இறைத் தோழமை எப்போது நமக்குக் கை கூடும். இதை எங்கு எவரிடம் கற்றுக் கொள்ள வேண்டும். இதைப் பற்றி சுந்தரரிடம் எப்போது கேட்பது? கேட்கலாமா? கூடாதா? அவர்கள் எந்த முடிவுக்கும் வராமல் சுந்தரர் போகும் இடங்களுக்கெல்லாம் போனார்கள்.

திருப்புகலூருக்கு ஒரு நாள் சுந்தரர் கிளம்பிக் கொண்டிருக்க பரவையார் சுந்தரருக்கு அருகே வந்து, "பங்குனி உத்திரம் வருகின்றன. நம்மைச் சுற்றி அடியார் கள் அதிகம் இருக்கின்றார்கள். அந்தத் திருநாளைக் கருதி இன்னும் ஆயிரக்கணக் கான அடியார்கள் நம் இல்லம் வருவார்கள். சிவழசையும், வேள்வியும் செய்தல் வேண்டும். உணவுக்கு நெல் இருக்கிறது. தானம் கொடுக்க பொன் வேண்டும். விலை அதிகம் உள்ள மிளகும், ஏலமும் தொலை தூரத்துக்கு வாங்கி வர சேர தேசத்துக்கு ஆள் அனுப்ப வேண்டும். அவர்கள் கைச் செலவுக்கு பொன் தர வேண்டும். இப்போதே சொல்லி விட்டேன். நமக்குப் பொன் தேவைப்படுகிறது.

பரவையார் தேவையைச் சொல்லும் போதே சுந்தரர் சிவனை நினைத்தார். திருப்புகலூர் சென்று இறைவனைப் பொன் தருமாறு வேண்டினார். வேண்டி விட்டு இறைவன் தருவான் என்ற நம்பிக்கையோடு கோயில் மண்டபத்திலேயே அமர்ந் தார். தூக்கம் கண்ணைச் சுழற்றிக் கொண்டு வந்தது. திருப்புன்கூர் இளைஞர்களை அழைத்து அங்கே கோயில் கட்டுமானத்திற்கென வைத்திருந்த செங்கற்களைத் தலைக்கு வாகாய் அடுக்கச் சொன்னார். தான் மேலே போர்த்தியிருந்த வெள்ளை வெளோர் என்கிற பட்டுத் துண்டை அந்த செங்கற்களின் மீது போர்த்தி தன் தலையை அதில் வைத்து தூங்கினார்.

விழித்து எழுந்த போது, வெண் பட்டுத் துணிக்குக் கீழேயிருந்த செங்கற்க



ளெல்லாம் பொன் கற்களாக மாறியிருந்தன. சுந்தரர் கோயிலுக்குள் நுழைந்து இறைவனைத் துதித்துவிட்டு பரவையார் கையில் பொன்னைக் கொடுத்து மிகப்பெ ரிய அளவிலேயே மிகச் சிறப்பான முறையில் பங்குனி உத்திரத் திருவிழாவைக் கொண்டாடினார்கள்.

பரவையாரிடம் விடைபெற்று நன்னிலம், திருவீழி மலை, திருவாஞ்சியம், திரு வாடுதுறை, கும்பகோணம், திருவலஞ்சுழி, திருக்கண்டியூர், திருவையாறு, திருப் பூந்துருத்தி போன்ற ஊர்க் கோயில்களுக்குச் சென்று பதிகம் பாடினார். திருமுது குன்று என்ற ஊருக்குப் போய் இறைவன் மீது பாடல்கள் இயற்றினார். பன்னிராயி ரம் பொன் அவருக்குக் கொடுக்க அங்குள்ள கோயில் அதிகாரிகளுக்கு சிவன் கட்டளையிட்டார்.

"இவ்வளவு பெரிய தொகையை திருவாரூர் வரை நான் எப்படி எடுத்துச் செல்வது? என் சிவனே எனக்கு வழி சொல்லும்" என்று கேட்டார்.

"இவ்வளவு தானே... இந்தப் பொன்னை இந்த ஊர் மணிமுத்தாறு நதியில் போடு. திருவாரூர் குளத்தில் எடுத்துக் கொள்" என்று சிவன் குரல் அசரீரியாய் கேட்க, பன்னிராயிரம் பொன்னும் சுழித்தோடும் மணிமுத்தாறு பிரவாகத்தில் போடப்பட்டது. சுந்தரர் கையிலிருக்கும் தூசு தட்டி மிகுந்த நிம்மதியுடன் நம்பிக்கை யுடன் கரையேறினார்.

திருப்புன்கூர் இளைஞர்கள் பயத்திலும், வியப்பிலும் உறைந்து போய் நதிக்கரை யில் உட்கார்ந்து விட்டார்கள். ஓடும் ஆற்றில் இறங்கி துளைத்துத் தேட ஒரு பொன் கூட கிடைக்கவில்லை. மேலும் பல ஊர்கள் சுந்தரரின் பின்னே போய் அவர் அங்கங்கே பாடும் பதிகங்களைப் பதியெடுத்து திருவாரூர் வந்தார்கள்.

திருமுதுகுன்றத்தில் பன்னிராயிரம் பொன் சிவனிடமிருந்து பெற்றுக் கொண்டது கூட சுந்தரருக்கு மறந்து விட்டது. திருப்புன்கூர் இளைஞர்கள் நினைவுபடுத்திய தும், "ஆமாம். அந்தப் பொன் எங்கே?" என்று சுந்தரர் யோசிக்கத் துவங்கினார். மூட்டை மூட்டையாய் ஆற்றில் போட்டதை ஞாகப்படுத்தினார்கள்.

"பொற்காசை ஆற்றில் போட்டேனா? எதற்காக..?" சுந்தரர் மறுபடி கேட்டார்.

"திருவாரூர் திருக்குளத்தில் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னீர்கள். சிவ பெருமான் அப்படி கட்டளையிட்டதாகவும் சொன்னீர்கள்."

"சிவபெருமான் கட்டளை என்றா சொன்னேன். அப்படியானால் அந்தப் பொன் திருக்குளத்தில் இருக்கும். வாருங்கள். போய் எடுத்து வருவோம்" சுந்தரர் கமலால யம் நோக்கி விரைந்தார்.

இடுப்பு வரை கமலாலயக் குளத்து நீரில் இறங்கி ஆற்றில் விட்ட பொற்குவிய லைத் தேடலானார். மூங்கி மூங்கி எடுக்க சேறுதான் வந்ததே தவிர, ஒரு பொற்கா சும் வரவில்லை. திருப்புன்கூர் இளைஞர்கள் பயத்தில் உறைந்து போய் கிடக்க பரவையார் வாய் விட்டுச் சிரித்தார்.

''ஆற்றிலிட்ட பொன் குளத்தில் எப்படி கிடைக்கும்? ஊர் பார்த்தால் எள்ளி நகைக்காதா? கரையேறுங்கள்..'' என்று மெல்ல கடிந்து கொண்டாள்.

''என் சிவனே... நான் உன் சொற்படி நடந்து கொண்டேன். அது இப்போது பரவையார் சிரிக்கும்படி ஆயிற்று. எனக்கு நீ கொடுத்த பொற்குவியலைக் கொடு'' என்று பதிகம் பாடிப் பாடி குளத்தில் மூழ்க... மூழ்கி, மூழ்கி பிரார்த்தனை செய்ய, காலின் கீழ் குவியல் குவியலாய் பொன் தட்டுப்பட்டது. இரு கைகளாலும் அள்ள குறையாமல் வந்தது. திருப்புன்கூர் இளைஞர்களும் குளத்தில் குதித்தார்கள். சுந்தரரிடம் உத்தரவு பெற்று சுந்தரருக்காக பொற் குவியல் அள்ளினார்கள். கரைசேர்த்தார்கள். பன்னிராயிரம் காசுக்கு ஒரு காசு கூட குறையாமல் திருவாரூர் கமலாலயக் குளத்திலிருந்து எடுக்கப்பட்டது. பரவையாரிடம் சேர்க்கப்பட்டது.

திருப்புன்கூர் இளைஞர்கள் சுந்தரர் காலில் விழுந்தார்கள்.

''நீங்கள் இறைவனுக்கு தோழமை பூண்டது போல நாங்களும் இறைவனுக்குத் தோழமை பூண விரும்புகிறோம்... உதவி செய்யுங்கள்'' கரம் குவித்துக் கேட்டார்கள்.

''எதற்காக..?'' சுந்தரர் வினவினார்.

''பன்னிராயிரம் பொற் காசு திருமுதுகுன்று பெற்று ஆற்றிலே போட்டு திருவாரூர் குளத்திலே எடுத்தீர்களே ஐயா... இந்த அதிசயம்...''

''நீங்களும் செய்ய வேண்டுமோ...? தலைக்கு தினமும் செங்கல் வைத்துத் தூங்குகிறீர்களோ... தெருவிலே எந்தக் கணிகை போனாலும் இவள்தான் எனக்கு மனைவி என்று ஏங்குகிறீர்களோ... என்னைப் போல நீங்களும் ஆக ஆசைப்படுகிறீர்களோ... எனக்கு மறுப்பேதும் இல்லை, இளைஞர்களே... ஆனால், என் வாழ்க்கை ஏன் இவ்விதம் இருக்கிறதென்று எனக்குத் தெரியாது. நான் எது கேட்டாலும் இறைவன் ஏன் தருகிறான் என்று தெரியவில்லை. எதனால் என் மீது இவ்வளவு கருணை வைத்திருக்கிறான் என்பது புரியவில்லை. ஆனால் ஒன்று இளைஞர்களே... நான் பரவை கேட்டதும், பொன் கேட்டதும், உண்ண நெல் கேட்டதும் அந்த நெல்லைக் கொண்டு வர ஆள் கேட்டதும் எனக்காகக் கேட்கவில்லை. இறைவனுக்காக. இறைபணிக்காக கேட்டேன். சிவனைத் தவிர வேறு எந்தச் சிந்தனையும் எனக்கு இல்லை. என் சிந்தனையில் இருக்கும் மற்ற விஷயங்களும் சிவபெருமானை ஒட்டித்தான் இருக்கின்றன. இது சத்தியம். மற்றபடி வேறு எந்த ரகசியமும் எனக்கு இல்லை. என்னைப் போல் ஆவதற்குத்தான் என் பின்னால் வருகிறீர்கள் என்பது எனக்குத் தெரியாமல் போயிற்று. என்னைப் பின்பற்றுவதை விட என் சிவனைப் பின்பற்றுங்கள். என்னை நினைப்பதை விட இறைவனை நினையுங்கள். என்னவாய் இருக்கிறோம் என்பதையும், என்னவாய் இருக்க வேண்டும் என்பதையும் இறைவனிடத்திலே கொடுத்து விடுங்கள். இளைஞர்களே, இதுவரை என்னைத் தொடர்ந்ததற்கு நன்றி. இனியும் தொடர வேண்டாம். உங்களுக்கு விடை கொடுத்தேன். போய் வாருங்கள்...''



''ஐயா...'' இளைஞர்கள் காது பொத்தி அலறினார்கள்.

மன்னிப்பு கேட்டு பலமுறை காலில் விழுந்தார்கள்.

''நீங்கள் தவறு செய்திருந்தால் தானே நான் மன்னிக்க. உங்களிடம் தவறேதும் ல்லை. உங்கள் தெளிவுக்காகவே உங்களை நான் அப்புறப்படுத்துகிறேன். அதிசயங்கள் அதிசயங்களாகத் தோன்றுவது சாதாரண மனிதர்களுக்குத்தான். இறைவன் மீது பூரண நம்பிக்கை கொண்டவர்களுக்கு எது அதிசயம்? எந்நேரமும் இறையோடு இருப்பவர்களுக்கு ஏது மிரட்சி? என் மீது செலுத்துகிற கவனத்தைக் குறைத்து இறைவன் மீது அன்பு செலுத்துங்கள். உங்களுக்கு தகுந்த நேரத்தில் இறை தரிசனம் கிடைக்க நான் இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.''

''ஊருக்குப் போகவே மாட்டோம். அதுதான் கட்டளையெனில் உண்ணா நோன்பு இருந்து சாவோம்'' இளைஞர்கள் சபதம் செய்தார்கள்.

சுந்தரர் முன்னேறி அவர்கள் ஒவ்வொருவரையும், அணைத்துக் கொண்டார். நெற்றியில் முத்தமிட்டார். சிரசில் கை வைத்து ஆசிர்வதித்தார். ''சரி, என்னைத் தொடரலாம். ஆனால் ஒரு நிபந்தனை. பயணத்தின் போது இருபத்தி நாலு மணி நேர இடைவெளி. ஒரு பதியில் உறையும் போது கண் தெரியா தூரத்தில் இருத்தல் வேண்டும்.''

திருப்புன்கூர் இளைஞர்களுக்கு உயிரே கழன்று விழுந்தது போலிருந்தது. தென்னந்தோப்பில் போய் துணி விரித்து துவண்டு படுத்து விட்டார்கள். மற்ற அடியார்களோடு சுந்தரர் பல கோயில்களுக்கு போகிறான் என்று கேள்விப்பட்டு ஒரு நாள் இடைவெளி விட்டு அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

''இறைவனுக்கு தோழனாய் நீங்கள் இருப்பது போல் நாங்களும் இருக்க வேண்டும் என்று கேட்டது தவறா? இது சொல்லிக் கொடுக்கக் கூடாத ரகசியமா? அப்படி நமக்கு சொல்லிக் கொடுத்து விட்டால் பெண் எங்கே என்று தான் நம் மனம் தேடுமா? சுந்தரர் ஏன் சினந்தார்?'' மறுபடி மறுபடி கேட்டுக் கொண்டார்கள்.

குரு சோதிக்கிறார். உண்மையிலேயே அவர் மீது நமக்கு மதிப்பும் மரியாதையும் உண்டா என்று நம்மை ஆராய்ந்து பார்க்கிறார். இருப்பின் அவர் கட்டளைக்குக் கீழ்ப்படிவோமே தவிர, எதிர்த்துப் பேசவோ இனி இந்த குரு வேண்டாமென்று விலகவோ செய்ய மாட்டோம்.

நமக்கு வேண்டியது சுந்தரரின் வாழ்க்கை அல்ல. அவர் வழி முறைகள், அவர் பதிகங்கள். கடவுளை அவர் காணும் விதம் அவர் பாடல்களில் இருக்கிறது. எனவே சுந்தரரைப் பின் தொடருவோம்.''

சுந்தரரோடு இருந்தால் உணவுக்கு குறையிராது'' ஒரு இளைஞன் சொன்னான்.

''இப்போதும் குறைவராது. சுந்தரர் நம் மீது கருணை உள்ளவர்'' மற்றவன் பதில் சொன்னான்.

சுந்தரர் பல கோயில்களுக்குப் போய் பல பதிகங்கள் பாடினார். அவர் எழுதிய

மூல ஒலியை கோவிலிலே வைத்து விட்டுப் படி எடுக்க பிள்ளை தொடருவார்கள் என்று சொல்லிவிட்டுப் போனார். தமக்குக் கொடுத்த மரியாதை போலவே அவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். சுந்தரர் வாய் மொழியால் நம் பிள்ளைகள் என்று சொல்லப்பட்ட திருப்புன்கூர் இளைஞர்களுக்கு மகத்தான மரியாதை செய்யப்பட்டது. அவர்களுக்கான உணவும், உறைவிடமும் கவனமாகச் செய்யப்பட்டன.

அந்தப் பாடலைப் படித்து விளக்கம் சொல்லுமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டார்கள். இறைவனைப் புகழ்ந்தும், இறைவனைப் புகழ்ந்த குருவைப் பாராட்டியும் திருப்புன்கூர் இளைஞர்கள் மக்களிடையே பேசினார்கள். பேசியதற்காக அவர்களுக்கு பரிசுப் பொருட்கள் தரப்பட்டன. அந்தப் பரிசுப் பொருட்களை அவர்கள் மற்ற அடியார்கள் மூலம் சுந்தரருக்கே அனுப்பி வைத்தார்கள். பதிகம் பெற்று பரிசுப் பொருட்களை அனுப்பி, சுந்தரருக்கும், திருப்புன்கூர் இளைஞர்களுக்கும் நேரடியான தொடர்பு இல்லாவிடினும் மறைமுகமான தொடர்பு உண்டாயிற்று. அது மிகவும் பலம் வாய்ந்த ஒன்றாக இருந்தது. சீடர்களுக்கு எப்போதும் குருவின் நினைப்பும், குருவுக்கு எப்போதும் சீடர்களின் நினைப்பும் இருந்தது.

இதை அறியாதோர் எள்ளி நகையாடினர். இதை அறிந்தோர் சீடரிடம் நெருங்கி உறவாடினர். குருவின் எதிரே கைகட்டி நிற்றலை விட குருவிடமிருந்து தள்ளி குருவைப் பற்றிப் பேசுவது சந்தோஷமாயும், சாரமுள்ளதாயும் இருந்தது. அவசரமாக உண்ட உணவை மாடு அசை போடுவது போல் ஆயிற்று. குரு என்கிற கடுமையான உணவை மெல்ல மெல்ல ஜீரணம் செய்ய முடிந்தது.

சுந்தரர் பல ஊர்கள் தாண்டி திருவொற்றியூர் வந்தார். எதனாலோ ஈர்க்கப்பட்டது போல் அங்கே சில நாட்கள் தங்கியிருந்தார். திருவொற்றியூர் கோயிலுக்குள் ஒரு கன்னிமாடம் இருந்தது. அந்தக் கன்னிமாடம் சுற்றி கனத்த திரைகள் தொங்கின. அந்தக் கன்னிமாடத்தில் சங்கிலியார் என்னும் வணிகர் மகள் குடியிருந்தாள். அவளுடைய தந்தையும் தாயும் அவள் திருமணம் பேச முன் வந்த போதெல்லாம் சங்கிலி தடுத்து நான் சிவத்தொண்டருக்கே உரியவள். நீங்கள் நினைக்கின்ற யாரையும் திருமணம் செய்து கொள்ள முடியாது என்று பேசி வந்தாள். சங்கிலி நாச்சியாரை மீறி வரன் தேட அவள் பெற்றோர்களுக்கு துணிவுமில்லை. ஆனால் தேடாமலேயே ஒரு வரன் வந்தது. அழகும், அமைப்புமாய் இருந்த சங்கிலி நாச்சியாரைக் கண்டு மனம் பேதலித்த வணிக குலப்பிள்ளை ஒருவர் சில முதியவர்களைத் திருமணம் பேசத் தூது விட்டார். முதியவர்கள் பேசி வருவதற்குள் உயிரை விட்டார்.

சங்கிலியாரைப் பெண் கேட்டது தெய்வக் குற்றம் என்று ஊர் மக்களும், சங்கிலியின் பெற்றோர்களும் உணர்ந்தார்கள். திருவெற்றியூர் கோயிலுக்குள் கன்னிமாடம் எழுப்பி சங்கிலியின் பெற்றோர் அங்கே அவளைக் குடி வைத்தார்கள். இளவயதான சங்கிலி இறைபணிக்கென்றே தன்னை அர்ப்பணித்தாள். நாள் தவறாது பூமாலை தொடுத்து திருவெற்றியூர் பெருமானுக்கு அனுப்பி வந்தாள். ஒரு நாள்



அப்படி திரை விலக்கி மாலை தொடுத்த நேரம் விதிவசத்தால் சுந்தரர் அவளைக் காண நேர்ந்தது. மின்னல் கொடி போல் ஒரு பெண் தோன்றி மறைந்த அதிசயம் கண்டு சுந்தரர் திகைத்தார். சங்கிலியின் உருவமம் ஆழ அவர் நெஞ்சில் பதிந்தது. யார் இந்தப் பெண் என்று கேட்டு விவரம் தெரிந்தார்.

''என் வாழ்க்கையில் இரண்டு பெண்களுக்கு இடமுண்டு. ஒன்று பரவை. மற்றொன்று இவள். சிவனே, இந்தச் சங்கிலி நாச்சியை எனக்குத் தா. எனக்குத் திருமணம் செய்து வை.'' எந்த விகற்பமும் இன்றி இறைவனை வேண்டினார். இறைவன் சரி என்றார். சங்கிலியின் கனவில் தோன்றினார்.

''என் தோழர் சுந்தரர் உனை வேண்டி என்னிடம் யாசித்தான். சங்கிலி, அவனோடு சேர்ந்து சந்தோஷமாய் இரு. திருமணம் செய்து கொள்'' என்று கட்டளையிட்டார்.

''சிவனே, உம் பணி செய்யப் பிறந்த நான் உம் கட்டளையை மீறி அறியேன். எதன் பொருட்டாயினும் என் கனவில் வந்தீரே... ஆயினும் என் சிவனிடம் சொல்வதற்கு ஒரு விண்ணப்பம் உண்டு.''

''நம்பி ஆரூரர் உங்கள் தோழர். வன்தொண்டர். திருவாரூரில் சந்தோஷமாக இருந்தவர் என்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.''

''எனக்குப் புரிகிறது பெண்ணே... உன்னை விட்டு ஒருக்காலும் சுந்தரன் போகாதவாறு அவனை சத்தியம் செய்யச் சொல்கிறேன். அப்படி ஒரு சத்தியம் வாங்கிக் கொண்டு நீ அவனைத் திருமணம் செய்வாயாக...''

சிவன் மறுபடியும் சுந்தரன் கனவில் வந்தார்.

''நம்பி, சங்கிலியிடம் உன் விருப்பத்தைச் சொன்னோம். அவள் சரி என்று உடனே சம்மதித்தாள். நீ சங்கிலிக்கொரு சத்தியம் செய்து தரவேண்டும்.''

''என்ன சத்தியம்?''

''ஒருக்காலும் சங்கிலியை விட்டுப் பிரியாதிருப்பதாக சத்தியம் செய்து தரவேண்டும்.''

சுந்தரர் யோசித்தார்.

''செய்யலாம். ஆனால், இன்னும் பல தலங்களுக்கு நான் போக வேண்டுமே. அப்படி நான் போவதற்கு இந்த சத்தியம் இடையூறு செய்யுமே. அதே நேரம் சத்தியம் செய்தால்தான் திருமணத்திற்கு சங்கிலி இசைவாள். ஒன்று செய்யுங்கள் சிவனே. நான் சத்தியம் செய்ய உங்கள் சன்னதிக்கு வருகிறேன். அப்போது சன்னதியில் நீங்கள் இல்லாது கோவில் மகிழ மரத்துக்குப் போய் விடுங்கள். உங்கள் முன்பு செய்யாத சத்தியம் என்னைப் பாதிக்காது. சிவன் சரி என்று தலையசைத்தார்.

மறுபடியும் சங்கிலியின் கனவில் புகுந்தார்.

''சங்கிலி, சுந்தரன் சத்தியம் செய்ய சம்மதித்து விட்டான். அந்தச் சத்தியம் செய்ய கோவிலுக்கு வருவான். அப்போது அவனை நீ மகிழ மரத்தின் கீழ் நின்று சத்தியம்

செய்து கொடு என்று சொல்வாயாக...''

சங்கிலி நாச்சியாருக்குப் புரிந்தது.

சிவனின் கருணையை நினைத்து கை கூப்பி நின்றாள்.

பொழுது விடிந்தது.

சங்கிலி நாச்சியாரும் சுந்தரரும் கோவிலில் சந்தித்துக் கொண்டார்கள். சுந்தரர் ஆனந்தப் பரவசமாக, சங்கிலியார் நாணத்தோடு தலை குனிந்தார். ''உன்னைப் பிரியேன் என்று சத்தியம் செய்து தரவேண்டும். சன்னதிக்கு வா'' என்று சங்கிலியாரை சுந்தரர் அழைக்க, இங்கே இந்த மகிழ மரத்தின் அடியிலேயே சத்தியம் செய்து தாருங்கள் என்று சங்கிலியார் வேண்டினார்.

சுந்தரருக்கு வேறு வழியில்லை.

இறைவன் முன்பு மகிழ மரத்தினடியில் சத்தியம் செய்து கொடுத்தார்.

அன்றிரவு திருவொற்றியூர் அன்பர்கள்.

கனவில் சிவபெருமான் தோன்றி சுந்தரருக்கு சங்கிலியாரைத் திருமணம் செய்து வைக்குமாறு கட்டளையிட்டார்.

திருவொற்றியூர் கடற்கரையில் திருப்புன்கூர் இளைஞர்கள் அலைகடலையே வெறித்துப் பார்த்து உட்கார்ந்திருந்தனர்.

''இன்றிரவு சிவபெருமான் உன் கனவில் தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டால் நீ என்ன கேட்பாய்?'' ஒரு இளைஞன் மற்றொரு இளைஞனைக் கேட்டான்.

''யார் இந்த சுந்தரர்? உனக்கு ஏன் அவர் மீது இத்தனை தோழமை? உன்னைக் காண்பதும், கண்டபிறகு பேசுவதும் மிகவும் அரிதென்று ஊர் சொல்லிக் கொண்டிருக்க, மிகப்பெரிய அறிஞர்கள் கூட அறியமுடியாதவன் வேதங்களுக்குள் மறை பொருளாய் இருக்கிறவன் அணு அளவு யாருக்கும் தெரியாதவன் என்று ஏங்கிக் கொண்டிருக்க இப்படி சுந்தரர் கூப்பிட்ட குரலுக்கு வருகிறாயே... இது எதனால்..? இதன் மூலம் எங்களுக்கு என்ன சொல்ல விழைகிறீர் என்று கேட்பேன்.''

எவ்வளவுதான் மனம் ஒருமுகப்படுத்தினாலும், ஆழ்ந்து ஆழ்ந்து தியானத்தில் அமர்ந்தாலும் சிவனின் சாயல்கூட அவர்கள் மனதில் வரவில்லை. சிவீர் சிவீர் என்று சுழல் ஒலியாய் அலைகடலின் ஆரவார ஒலி மட்டும் அவர்களின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

நாட்கள் நகர்ந்தன. பருவங்கள் மாறின. மறுபடியும் திருவாரூர் நினைப்பு வந்து விட்டது. சங்கிலியாரிடம் விடை பெறாமல் திருவொற்றியூரை விட்டு சுந்தரர் வெளியேறினார். திருவொற்றியூர் எல்லையைத் தாண்டியதும் இரண்டு கண்களிலும் பார்வை போயிற்று.

சுந்தரர் திகைத்தார். பெருமூச்சு விட்டார். ''சத்தியம் தவறியதால் பார்வை



போயிற்று. என் சிவனைப் பாடியே மறுபடியும் இந்தப் பார்வையை அடைவேன். இது உறுதி'' என்றார். இதைக் கேள்விப்பட்ட திருப்புன்கூர் இளைஞர்கள் பதறி அருகே ஓடி வந்தார்கள்.

சுந்தரர் சீறினார். ''யார் உங்களை அருகே வரச்சொன்னது?''

''நாங்கள் சுந்தரர் பார்வைபடாத தூரத்திலல்லவா இருக்கிறோம்'' இளைஞர்கள் பதில் சொன்னார்கள்.

அவர்கள் கைப்பற்றி தட்டுத்தடுமாறி நடந்து இறைவனை உளம் உருகப் பாடி ஒரு கண் மட்டும் பெற்றார்.

பின் பல்வேறு இடங்கள் தாண்டி திருவாரூர் வந்தார். அங்கும் உளமார வேண்டி இன்னொரு கண்ணும் பெற்றார். பரவையாரிடம் போகப் பயந்து கோயிலிலேயே அமர்ந்திருந்தார்கள்.

திருப்புன்கூர் இளைஞர்கள் பரவையார் வீட்டுக்குப் போக, அங்கே அவர்கள் தடுக்கப்பட்டார்கள்.

''சுந்தரர் குற்றம் செய்தவர். அவரைப் பற்றி எவரும் என்னிடம் பரிந்து பேச வேண்டாம். அப்படி பேசினால் நான் என் உயிர் மாய்ப்பேன்'' என்று சொன்னாள்.

திருப்புன்கூர் இளைஞர்கள் திடுக்கிட்டு நடந்ததை சுந்தரரிடம் கூறினார்கள்.

''பரவையின் கோபத்தைத் தணியுங்கள்'' என்று சுந்தரர் சிவனை வேண்ட, சிவன் திருவாரூர் குருக்கள் போல உருவம் எடுத்து பரவையிடம் போக, பரவை கோபமாகி உங்கள் தகுதிக்கு இது சரியில்லை என்று கூறினாள். வந்தவர் இறைவன் என்று பரவைக்குத் தெரியவில்லை. கோயிலில் உள்ள சுந்தரர் முன்பு சிவனார் போய் நிற்க, ''நல்லபடியாக காரியம் முடித்து வந்தீரா..? நீர் போனால் நடக்காதிருக்குமா? இப்போதே பரவை வீட்டுக்குப் போகிறேன்'' என்று சுந்தரர் பரபரக்க, பரவை மறுத்தது சுந்தரருக்குச் சொல்லப்பட்டது.

''நஞ்சை உண்டீர், முப்புரம் எரித்தீர், காலனை மாய்த்தீர், தேவர்களைக் காத்தீர், மார்கண்டேயருக்கு வாழ்வு கொடுத்தீர் - ஆனால் எனக்கு மட்டும் உதவமறுக்கிறீர். நான் சாதாரணமாய் திருமணம் செய்து கொண்டிருந்திருப்பேனே... எதற்கு என்னைத் தடுத்து அடிமையாக்கிக் கொண்டீர். என்னை வலிய அழைத்துப் பாடும் பணி செய்யவிட்டு இப்போது என் துன்பத்தை ஏன் தீர்க்க மறுக்கிறீர். பரவை இல்லையெனில் நான் உயிர் வாழேன்'' என்று ஓலமிட்டார்.

கவிதை போலும் உள்ள அவர் ஓலத்தைக் கண்டு இறைவன் சிரித்தான். இந்த முறை தேவர்களும், சித்தர்களும், யோகியர்களும் புடைசூழ பரவையின் வீட்டில் தோன்றினர். பரவையின் வீடு கைலாயமாயிற்று.

பரவை நடுங்கினாள். நாக்கு குழறினாள். இறைவன் கேட்கு முன்பே சுந்தரரை ஏற்றுக் கொள்வேன் என்றாள்.

விடியலில் வீட்டில் நுழைந்த சுந்தரரை வணங்கி வரவேற்றாள்.

மறுபடியும் இல்லறம் துவங்கியது.

திருவாரூரில் இப்படி நடக்கின்ற செயல்களெல்லாம் சேர நாட்டிலுள்ள அரசனுக்குக் கதைகளாகச் சொல்லப்பட்டன.

அவர், சுந்தரரைப் பார்க்க திருவாரூருக்கு வந்து சுந்தரரை வணங்கி தம்மை நண்பராக ஏற்றுக் கொள்ள வேண்டினார்.

இறைவனுக்குத் தோழனாயிருந்த சுந்தரர், அரசருக்கும் தோழனானார். இருவரும் மறுபடியும் பல ஊர்களுக்கு கோவில், கோவிலாகப் போகத் துவங்கினார்கள். வழியே பெருக்கெடுத்து ஓடிய காவிரியை வழிவிடுமாறு சுந்தரர் கேட்க, காவிரி வழி விட்டது.

சுந்தரரும், சேரமான் பெருமாளும் இறங்கி மறுகரை போக, காவிரி மீண்டு பெருக்கெடுத்து ஓடலாயிற்று.

சேரன், சுந்தரரைத் தம் நாட்டுக்கு அழைத்துப் போய் உபசரித்தார். சுந்தரர் ஊர் திரும்ப எண்ணம் கொண்ட போது அரண்மனையிலுள்ள நெல் மணியும், பொன் மணியும் பொதிப் பொதியாய் சுந்தரருக்குக் கொடுத்தனுப்பினார்.

மீண்டும் திருவாரூர் வாசம். பரவையை விடுத்ததும், மீண்டும் வந்து சேர்ந்ததும் திருவாரூரில் அங்கங்கே கேலியாய்ப் பேசப்பட, சுந்தரர் தம்மை மதிக்கின்ற அடியார்களோடு சேர தேசத்துக்குப் பயணப்பட்டார்.

வழியே அவினாசி என்ற ஊர் வந்தது. அந்த ஊரில் ஒரு வீட்டின் மண ஒலியும், அதற்கு நேர் எதிர் வீட்டில் பிண ஒலியும் கேட்டன.

சுந்தரர் காரணம் கேட்டார். "போன வருடம் இந்த இரண்டு வீட்டுச் சிறுவர்களும் மடுவில் குளிக்கப் போனார்கள். அதில் ஒரு சிறுவனை முதலை விழுங்கி விட்டது. மற்றொரு சிறுவனுக்கு இன்று உபநயனம். அதனால்தான் உபநயன வீட்டில் சிரிப்பொலியும், எதிர் வீட்டில் அழுகை ஒலியும் கேட்கின்றன."

சுந்தரருக்கு மனம் நெகிழ்ந்தது.

பிள்ளையை இழந்தவர் வீட்டுக்குப் போனார். பெற்றோர்களை அழைத்துக் கொண்டு பையனை முதலை விழுங்கிய மடு எங்கே என்று கேட்டார். அவரை அந்த மடுவுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே அவர் இறைவனைக் குறித்துப் பாட, பையனை விழுங்கிய முதலை வெளியே வந்தது. பையனை உமிழ்ந்தது. பையன் ஒரு வருட வளர்ச்சியுடன் சிரித்தபடி கரையேறி சுந்தரரை வணங்கினான். பெற்றோர்களைக் கட்டிக் கொண்டான்.

ஊர் மூச்சடைக்க இந்த அதிசயத்தைப் பார்த்தது. தமிழ்நாட்டின் எல்லா பக்கமும் இந்த அதிசயம் பரவியது.

சுந்தரர் சேர தேசம் நோக்கிப் போனார். தன்னை நேசித்த சேரமான் பெருமாளோடு பலகாலம் தங்கியிருந்து வாழ்ந்து வந்தார். சேர தேசத்திலே உள்ள திருவஞ்சைக்களம் என்ற ஊருக்குப் போய் தான் உடல் விடவேண்டும் என்று சிவனிடம்



வேண்டிய போது, அவர் விருப்பத்திற்கேற்ப தேவலோகத்திலிருந்து ஒரு வெள்ளை யானை வந்தது.

சுந்தரர் உலகைத் துறக்க விரும்புவதை அறிந்த சேரமான் பெருமாள், அவருக்கு முன்பு தான் கைலாயம் செல்ல விரும்பினார். தன் குதிரையின் மீதேறி அதன் காதில் சிவ மந்திரத்தை ஓதினார். சுந்தரர் ஏறிய வெள்ளை யானையை அந்தக் குதிரை வலம் வந்து அந்த யானைக்கு முன்பே கைலாயத்திற்குப் போயிற்று. அரசர் கைலாயம் போவதைப் பார்த்த சேரமான் பெருமாளின் படை வீரர்கள் தங்கள் தலையைத் துணித்துக் கொண்டு அரசரின் பின்னே போனார்கள்.

அங்கே மரணம் அழுகையாக இல்லை. அதுவும் ஒரு திருத்தல யாத்திரையாயிற்று. திருப்புன்கூர் இளைஞர்கள் நடுங்கி உட்கார்ந்தார்கள். எங்கே போவது என்று தெரியாமல் திகைத்தார்கள். அவர்களை நோக்கி வெள்ளையானை வரவில்லை. சேரமன்னனைப் போல் உடலோடு கைலாயம் போகவும் தெரியவில்லை. சேரரது வீரர்களைப் போல் தலையைக் கொய்து கொள்ளும் துணிச்சலும் வரவில்லை. அவர்கள் விரும்பிய இறையை அறியும் மார்க்கம் எது என்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு இளைஞன் மற்றவர்களை நோக்கி மெல்ல பேசினான்.

"கடவுளே, விரும்பினாலொழிய அதுவே மனம் இரங்கி நமக்கு காட்சி தர விரும்பினாலொழிய நாம் கடவுளைக் காண முடியாது. கடவுள் தரிசனம் முயற்சியினால் ஏற்படும் விஷயம் அல்ல. எங்கு முயற்சி நின்று விடுகிறதோ, எங்கு முயற்சி முற்றிலும் இல்லையோ அங்கு கடவுளின் பேரருள் பொங்கி வழிகிறது. சுந்தரர் என்னும் பிறவி கடவுளின் விருப்பம். மனிதருக்குள்ள எந்த நியதியும் அங்கில்லை. மனிதர் பிறப்பித்த நியதி உள்ள இடத்தில் மனிதர் மட்டுமே உண்டு.

கடவுள் நியதிக்கு உட்பட்டவர். நியதிக்கு அப்பாற்பட்டவர்.

மரபு ஒழுக்கங்களைப பேசிக் கொண்டிருப்பதோ, மரபு ஒழுக்கங்களைக் கவளித்து மீறிக் கொண்டிருப்பதோ முக்கியமல்ல.

பரவையைக் கொடு என்று கேட்ட விதமாகவே யாரோ ஒரு தாய், தந்தையரின் கண்ணீர் பார்த்து இறந்த சிறுவனுக்கு உயிரைக் கொடு என்று அவரால் கேட்க முடிந்தது.

பரவையும், யாரோ ஒரு சிறுவனும் சுந்தரருக்கு ஒன்றே. சுந்தரர் எப்போதும் தன் நிலையில் இல்லை. தன்னை இறைவன் வசமே வைத்திருந்தார். தன்னையே இறைவனாகக் கண்டார். தன் உயிர்ச் சக்தியும், தன் உடம்புக்கு அப்பால் உள்ள இறைச் சக்தியும் ஒன்று என்று தெரிந்து கொண்டார். நிலைக்கண்ணாடி முன்பு நின்று பேசாது போல் அவர் இறைவனோடு பேசினார்.

அவர் கண் போக, இறைவன் தண்டிக்கவில்லை. சுந்தரரே தம் கண் போக விரும்பினார். கண் போயிற்று. சுந்தரரே அழுது புலம்பினார். கண் வந்தது. பிரிவு சுகத்தைக் காண விரும்பினார். பிரிந்தார். பிரிந்து போன பின் கூடும் சுகத்தைக் காண விரும்பினார். கூடினார். அவர் பிணங்கியதும் அவரோடே. அவர் கூடியதும்

அவரோடே.

நமது உடம்பைத்தான் நாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். சுந்தரர் உடம்பைத் தாண்டி உள்ளுக்குள் இருப்பதை உணர்ந்தார். சாதாரணமாக நம்மைப் போல் பிறந்த சுந்தரர் திருமண தினத்தன்று சட்டென்று விழித்துக் கொண்டார். உள்ளுக்குள் இருந்த ஆத்மரூபம் அவருக்குக் காட்டப்பட்டது. அவர் பதிகங்கள் ஆன்மாவிலிருந்து வெளிவந்தவை. குடத்துக்குள்ளே இருக்கின்ற காற்று வெளியே இருக்கின்ற காற்றோடு பேசுவது போல சுந்தரருக்குள்ளே இருக்கின்ற ஆத்மா வெளியே இருக்கின்ற சக்தியோடு இதுவரையில் பேசிக் கொண்டிருந்தது. இப் போது உடலை விட்டு வெளியேறி இரண்டறக் கலந்து விட்டது.

அவரோடு நெருங்கிப் பழகிய சேரமான் பெருமாளுக்கும் உடம்புக்குள்ளிருக் கும் ஆன்மாவைக் கண்டறியப் புரிந்து விட்டது. அதனால்தான் பெருவெளியில் கலக்கும் வலிவு வந்தது.

''உடம்பிலிருக்கும் ஆன்மாவைக் கண்டு உணராதவர் சேர வீரர்கள். அவர்களிட மிருந்தது அரச பக்தி. அரசன் சுந்தரன் மீது பக்தி வைக்க அவர்களும் சுந்தரன் மீது பக்தி வைத்தார்கள். அந்த பக்தி ஆவேசத்தில் தலையைக் கொய்து ஆன்மாவை விடுவித்துக் கொண்டார்கள்.

ஒன்று உடம்பிருக்கும் போதே உள்ளிருக்கும் ஆன்மாவை உணரத் தெரிய வேண்டும். அல்லது உடம்பு விட்டு உயிர் பிரியும் போது அந்த ஆன்ம சக்தியை மேலெழுப்ப வேண்டும். இத்தனை காலம் சுந்தரரோடு இருந்து நாம் இரண்டும் செய்யவில்லை. நாம் எதுவும் கற்றுக் கொள்ளவில்லை. கற்றுக் கொள்ளும் வகை யாய் இறைவன் கருணை வைக்கவில்லை.''

சொல்லிவிட்டு அந்த இளைஞன் கதறி அழுதான். வட்டமாய் உட்கார்ந்து கொண்டு அந்த இளைஞர்கள் தேம்பித் தேம்பி அழுதார்கள்.

''அப்படியானால் நம் கதி என்ன?'' ஒரு இளைஞன் அழுகை நடுவே கேட்டான்.

''மறுபடி பிறக்க வேண்டும். மறுபடி மறுபடி பிறக்க வேண்டும். அப்படி பல பிறவி பிறந்து ஆன்மாவை உணரும் பாடம் கற்க வேண்டும். ஏதோ ஒரு பிறவியில் அந்தப் பிறவி முழுமையாகும். ஆன்மா விடுதலை அடைந்து இரண்டறக் கலந்து இறையருளோடு ஒன்றி பிறவி இல்லாத நிலை அடையும்.''

''இதுதான் விதி என்றால் வேறென்ன செய்வது?'' இன்னொரு இளைஞன் நாக்குழற பேசினான்.

''என் சிவனே... என் சிவனே... அப்படி பிறவி எடுக்கும் நேரமெல்லாம் உன்னை மறவாதிருக்குபடி அருள் செய்வாயாக. முன் வினையினால் மறந்து வாழினும், சுந்தரனைத் தடுத்தாட்கொண்டது போல எங்களைத் தீவினையிலிருந்து தடுத்து உன் அருகே இழுத்து ஆட்கொள்வாயாக...

சிவனே... என் சிவனே... இன்னொரு. விண்ணப்பம். எல்லா பிறவியிலும் எங்கள் எல்லா பிறிவியிலும் நாங்கள் நேசித்த ஆலால சுந்தரரை நினைவுபடுத்திக் கொண்டு அவர் சரிதையை ஊருக்குச் சொல்லும்படியாய் பணிப்பீராக.

நம்பி ஆரூரர் வாழ்ந்த பகுதிகளிலேயே எங்களைப் பிறக்கச் செய்வீராக. எங்கள் சுந்தரனை அவர் தம் இரு மனைவியை அவர் பாடிய பாடல்களை மறக்காமல் எல்லா பிறவிகளிலும் நினைவுபடுத்துவீராக.

என் சிவனே... போகமும் நீயே... மோட்சமும் நீயே... எப்போது எதைக் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறீரோ... அப்போது அதைக் கொடும். என் சிவனே சரணம்.

நமசிவாயம்... நமசிவாயம் நமசிவாயம்...''

அந்தத் திருப்புன்கூர் இளைஞர்கள் இந்தக் காலத்திலும் எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து இறைவன் நினைப்புடன் வாழ்ந்து கொண்டிருப்பதாகக் கேள்வி. பார்த் தால் தமிழோரே கை கூப்பி வணங்குங்கள்.

* * *
* *

